DR. ILLANGO & ASSOCIATES

BRACE FOR A GREAT SMILE

SCARBOROUGH OFFICE
3852 Finch Ave. East, Unit 303
டாக்டர் இளங்கோ
(416) 292-7004

MISSISSAUGA OFFICE
3025 Hurontario St., # 102
டாக்டர் ஜானகி
(905) 270-7844

EASY HOME BUY
With a small down payment, you could own your dream home.
Kiruba Kirushan
Service with a Broad Smile

வாங்கவோ? விற்கவோ? BUYING? OR SELLING?
சிறிய தொகையுடன் நீங்களும் ஒரு வீட்டிற்குச் சொந்தக்காரர் ஆகலாம். RENT A HOME, ALL KIND OF INSURANCE
416-414-5562 ALL KINDS OF LOANS & MORTGAGES

SAMY & SONS
1884B Kennedy Rd. (at Ellesmere) Scarborough
- புத்தம் புதிய ஆடை வகைகள்
- சுடிதார் சாறி வகைகள்
- அன்பளிப்புப் பொருட்கள்
- அலங்காரப் பொருட்கள்
- 22 கரட் தங்க நகைகள்
- துரித பணமாற்றுச் சேவை
- வீடியோ, ஒடியோ, பிரதிமாற்றம்

இன்னும் எழுத்திலடங்காதன
மொன்றியல் சுமித் தொடர்புகளிற்கு
குகன் 514-736-6228
TEL: 416-298-1598 FAX: 416-298-2849

டாக்டர் சண்முகம் சிவநேசன்
குடும்ப பல்வைத்தியர்
Tel: 416-291-1085

டாக்டர் பகீரதன் (பகி)
குடும்ப பல்வைத்தியர்
Tel: 416-728-0345

3852 Finch Ave. East, #207, Scarborough, Ont. (Between Birchmount & Kennedy

Neelam Silk
தற்பொழுது இரு இடங்களில்
1453 Gerrard St. East, Toronto
Tel: 416-778-7455
2378 Eglinton Ave. East., Scarborough
Tel: 416-759-2002
(Kennedy Rd. & Eglinton Ave.) சந்திப்பில்
www.neelamsilk.com

INCOME TAX
வீடு, வாங்க, விற்க Mortgage, Income Tax
சம்பந்தமான சகல ஆலோசனைகளுக்கும்
Selva Vettyvel
Tel: (416) 568-4301
Visit to
Jaffna Tailors
272 Markham Road, Scarborough, Ont.
Markham & Eglinton

ALL INSURANCE & FINANCIAL SERVICES
- Auto
- Home
- RRSP
- Group
- Travel
- Business

LIBERTY MUTUAL
London Life

Balan Kanapathi
Office : 416-321-1515
Home : 905-294-2429
Pager : 416-336-4027
Mobile: 416- 452-6975
4433 Sheppard Ave. East, Suite 200
Scarborough, ON M1S 1V3

உதயன்

UTHAYAN

தித்திக்கும் தமிழ் உலகில்
எத்திக்கும் கதிர் வீசும்
வாரச் செய்தி இதழ்

416-752-1524 www.uthayan.ca 416-752-6703

உதயம்: 325 Chief Editor: R. N. Logendralingam 05.07.2002 FRIDAY

என் இனிய ரசிகர்களை நேரில் காண ஆவலாயுள்ளேன்

விமான நிலைய வரவேற்பில் நடிகர் மாதவன்

இளம் ரசிகர்களைக் கொள்ளை கொண்ட நடிகர் மாதவனை நேரில் காண நாளை AIR CANADA CENTREக்கு செல்லுங்கள். அழையுங்கள்: 416-284-6777 - 416-499-3303

நேற்று மாலை பியர்சன் விமான நிலையத்தில் வந்திறங்கிய சிவமணி, பாடகர் எஸ். பி. பாலசுப்பிரமணியம், பிரபல நடிகர் மாதவன், பாடகர் சங்கர் மகாதேவன் ஆகியோருடன் கலாபம் சுரேஸ்ராஜா

நடிகர் மாதவனுடன் தமிழன் வழிகாட்டி செந்தி, கலாபம் ஸ்ரீனிவாசன்

நடிகர் மாதவன் பாடகர் சங்கர் மகாதேவன், ஆகியோருடன் நிகழ்ச்சி ஏற்பாட்டாளர் கணேஷ்

இவ்வார உதயன்
92 பக்கங்களில்

GOREWAY DENTAL CENTRE
பிறம்ரன், மால்ரன், எற்றபிக்கோ, றெக்ஸ்டேல், டவுண்ஸ்வியு, மிசிசாகா நகரங்களுக்கு
வசதியான பல்வைத்திய நிலையம்

(905) 673-7874
DR. NIRMALA SIVA & DR. C YOGESWARAN
பற்களை ஒழுங்குபடுத்துதலும் இதர பற்சிகிச்சைகளும்
7125 Goreway Drive, Suite 206, Mississauga (Malton)
இலவச ஆலோசனைகளுடன் வாரத்தில் 7 நாட்களும் சேவை

Madras Mahal
Authentic South Indian Family Cuisine
L.L.B.O.
வாரத்தில் செவ்வாய் தவிர்ந்த 6 நாட்களும்
புதிய அறிமுகம்
Vegetarian Combos
Non-Vegetarian Combos
Special Price
Veg. Thali or Biryani
12 Noon to 5 P.M. only
$4.95
விபரங்களுக்கு அழையுங்கள்: 416-269-3666

AJB TRAVELS
IATA
AWARD WINNER 1993/2000
ATAC MEMBER
Tel: 416-412-0244
E-mail: sales@ajbtravels.com Web: www.ajbtravels.com
1900 Kennedy Road, at Ellesmere, Scarborough, Ont. M1P 2L8

ஓம் சாயிராம்
ஜெயசாயி நகை மாளிகை
WHOLESALERS AND RETAILERS
சகலவிதமான தரமான கைவண்ணங்கள்
கூடிய நகைத்தேவைகளுக்கு என்றும் நாடுங்கள்
Finest Quality 22k Gold and Singapore Jewellery
Expert Custom Jewellery and Repairs
3601 Lawrence Ave. E. #14, Scarborough, Ontario
Tel: (416) 431-1536 Fax: (416) 431-7712
Newin Centre, 2580 Sheppard Ave., Unit #45
Mississauga, ON (HWY 10 - Dundas)
Tel: (905) 270-1558 Fax: (905) 270-1553

OVER 8,000 FREE CIRCULATION EVERY WEEK IN CANADA

சிறு விளம்பரங்கள் உதயன்

TEL: 416-752-1524 FAX: 416-752-6703

CLASSIFIED ADs

எல்ஸ்மெயர்
மீன் இறைச்சி மார்க்கட்
இலங்கையிலிருந்து வரும்
ஒட்டி, ஓரா, நெத்தலி, கீளி, பாரை
விளை மீன் யாவும் எம்மிடம்
உடனுக்குடன் பெற்றுக் கொள்ளலாம்
ELLESMERE FISH & MEAT MART
1243 Ellesmere Road, Scarborough, ON, M1P 2X8
TEL/FAX: 416-285-8558

வீட்டு இடியப்ப மெசின்

இந்த மெசினைப் பாவித்து முறுக்கு, அச்சுப்பகாரம், போன்றவற்றை மிகக்குறுகிய நேரத்தில் செய்யலாம்.
ஒரு தரம் நீரப்பினால் 5 நிமிடத்துக்குள்
25 இடியப்பங்கள் செய்யலாம்.
Price $ 249
தொடர்புகளுக்கு
மோகன்:
416-243-6000 Pgr 416-715-4371

House For Rent
வீடுவாடகைக்கு
Three Bedrooms with all facilities
Kennedy / Eglinton - Good Location
Suitable for working family
Rent : $.975.00 + utilities
Please contact after 6.00 P.M
Tel.:(416) 285-4695
Pgr.: (416) 339-2282

HOPPER HUT
ஸ்காபரோ நகரில் சுவைமிக்க உணவு வகைகளை அருந்தி மகிழ எம்மிடம் வாருங்கள்
இடியப்பம் அதிவிஷேட விலையில் பெற்றுக்கொள்ளலாம்
880 Ellesmere Road
at Kennedy Unit 215
(416) 299-4311

JOB OPPORTUNITIES
* Real Estate Assistant
* Office Secretary
SKILLS NEEDED:
* Good communication skills
* Fluency in English, Tamil
* Computer Skills
Fax Resume to:
(416) 284-5555
E-mail:
karukandiah@hotmail.com

ENGLISH CLASSES
(Summer Program)
Grades 3 to 10
Focus: Grammer & Writing
Classes:
Middlefield / Steels
Neilson / Ellesmere
ONLY 4 STUDENTS IN A CLASS
Contact:
(905) 471-6440 (Nalla)
(416) 283-3920 (Maha)

JAY'S
PROFESSIONAL TRUCK TRAINING CENTRE
கனரக வாகனங்களின் அனுமதிப்பத்திரங்களை இலகுவாகவும் விரைவாகவும் குறைந்த செலவில் பெற்றுக்கொள்ள இன்றே தொடுங்கள்
Classes A, B, C, D & Z Instructors available in Tamil and English
தமிழிலும், ஆங்கிலத்திலும் பயிற்சி பெறலாம்
Jay
senior Instructor

Business: (416) 299-9638 Cell: (416) 771-8041 Fax: (416) 609-9814

BASEMENT for RENT
28 Rowe Court
McCowan / Elson
* 2 bedroom, kitchen, washroom, washer/dryer வசதிகளுடன்
*close to TTC, school (K-8), high school
If you would like to see this offer don't hesitate to contact this number
905 - 471 9016

BASEMENT for RENT
Warden / Ellesmere
(Lawrence)
சந்திப்புக்கு அருகில் 2 அறை கொண்ட Basement வாடகைக்கு உண்டு.
Close to School and TTC
ஆகஸ்ட் 1ம் திகதியிலிருந்து
(416) 873-3099

House for Rent
Birchmount / Finch
3 அறை கொண்ட வீடொன்று வாடகைக்கு உண்டு.
mjld Basementல் ஒர் அறையும் வாடகைக்கு உண்டு.
தொடர்பு:
(416) 292-0557

சிற்றாண்டி வகைகள்
String Hopper AD
வடை	20¢	மொத்தமாகவும், சில்லரையாகவும் பெறுதுகொள்ள	இட்டலி லட்டு 25¢
முறுக்கு			
பாரீஸ்	மரக்கறிச் சாப்பாடு	நோல்ஸ் போளி	70¢
சமோசா	$3.50 (Min. 10 Parcels)	கறி ரொட்டி	
பயற்றம்	மாமிசச் சாப்பாடு	குழலிட்டு கொத்து ரொட்டி	$2.00
பணியாரம்	$4.50 (Min. 10 parcels)	சிங்கப்பூர் நூடில்ஸ்	$3.00
வாய்ப்பன்			
கொழுக்கட்டை			
மோதகம்	40¢		$3.50
வீசக ரொட்டி	35¢	கொண்டாட்டங்கள் பாட்டிகள் போன்ற வற்றில் வழங்கப்படும் Mini Bag Package (5 items inside) Only $ 1.00	
தோசை			
கட்லட்			
பால் ரொட்டி			
4 16- 2 65 -651 6

நிலாவெளி தென்னந்தோட்டம் உடன் விற்பனைக்கு
திருகொணமலை நிலவெளியில் கடற்கரையை அண்மித்த Tourist Hotel அமைக்கக்கூடிய 20 ஏக்கர் தோட்டம் விற்பனைக்கு
தொடர்புகட்கு
Sam: 61732790904
Brisbane, Australia

BASEMENT FOR RENT
Markham / Elson
2 Bedroom Basement with Separate entrance, kitchen, washroom, parking Close to T.T.C & School
உடன் வாடகைக்கு விடப்படும்.
Raja: Phone
905 - 201 1968

Delivery Van
வியாபாரத்துடன் விற்பனைக்குண்டு
1989 FOrd Step Van விற்பனைக்குண்டு.
(Ex purolatoer van). Rebuild engine good condition.
please Call:
(416) 200 2399

THE CHILDREN'S EDUCATION TRUST OF CANADA

R.E.S.P
For More Information
Please Call:
MOHAN

நாளை உங்கள் குழந்தையின் கல்விக்கு இன்றே சேமியுங்கள்
(416) 571-9509 / 698-6123

வேலைக்கு அட்கள் தேவை
Warden / Finch சந்திப்புக்கு அருகில் உள்ள பிரபல தமிழர் வர்த்தக நிறுவனத்தில் வேலைசெய்ய ஆட்கள் தேவை மீன் வெட்டத்தெரிந்தவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு:
416 - 494 9494

வேலையாட்கள் தேவை
நோர்த்யோக்கில் உள்ள தமிழர் உணவகத்திற்கு இலங்கை இந்திய உணவு தயாரிக்கத் தெரிந்த வேலையாட்கள் தேவை. ஆண், பெண் இருபாலரும் விரும்பத்தக்கது. அழையுங்கள் நாதன்
(416) 568 6591

Individual Computer Class
Basic Computer Programming
Win 98, Win XP, Word, Excel, Power Point, Access
Web Page Designing
Adobe Photoshop, Flash, Dream Weaver, Front Page, Fife Works, HTML, Gif Animator
Java programming
Home 416 -287 6824
Cell: 647 -284 6824

Store for Sale
ஸ்காபரோவில்
நல்ல நிலையில் இயங்கிக் கொண்டிருக்கும்
கடை ஒன்று விற்பனைக்கு
சகல தளபாடங்களும் சேர்த்து
416- 884 0005

சென்னையில் வீடு விற்பனைக்கு
4 Bedroom, 4 Washroom
அப்பார்மென்ட் வீடு தமிழ்நாடு சென்னை அடையாரில் விற்பனைக்குண்டு. $80,000 அழைக்கவும்
Toyota Pillai
416-752 3434,
416 - 565 9080

பகுதிநேர வேலையாட்கள் தேவை
வைபவ நிகழ்ச்சிகளுக்கு உணவு பரிமாறுபவதற்கு இளம் பெண்கள் விரும்பத்தக்கது.நோர்த்யோக் பகுதியில் வசிப்பவர்கள் அழைக்கவும். நாதன்
416- 568 6591

Store BASEMENT FOR RENT
Midland / Ellesmere
ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாட்களில் ரியூசன், தையல் போன்றவற்றுக்கு உகந்த இடம்
விபரங்களுக்கு
416 - 752 1524

மூட்டைப்பூச்சி- எலி- கரப்பான்பூச்சி
100% Elimination
GUARANTEED

FREE ESTIMATES
100% TERMINATION OR MONEY BACK
உங்கள் வீடுகளில் மூட்டைப்பூச்சி, கரப்பான் பூச்சி, மற்றும் எலிகளின் தொல்லையா?
PESTOKILL INC
CALL 24HRS : 416-657-2731 CELL: 416-993-2381

அலுவலக உதவியாளர் தேவை
பத்திரிகை அலுவலகமொன்றிற்கு பகுதி நேரமாகவோ அன்றி முழு நேரமாகவோ அலுவலக உதவியாளராகப் பணியாற்றக் கூடிய ஆண் அல்லது பெண் தேவை. ஆங்கில அறிவும் கம்பியூட்டர் அறிவு ஆகியன அவசியம்.
தொடர்புகளுக்கு 416 884 0005 தொலைநகல் 416 752 6703

Study in Canada from Sri Lanka
An Opportunity to
WWW.CCBC.CA
CALL TODAY 416-413-1234
CCBC

சிறந்த சேவை
மகிழ்ச்சிகரமான விளைவில்
Century 21
Percy Fulton Ltd.
10 Years Champion
24 Hours / 7 Days
Bus : 416-298-8200
Fax : 416-298-6602
#1 Office in Canada

Mohan Subramaniyam
Sales Representative
Residential & Commercial
Real Estate Marketing
At its Best!

பிரதம ஆசிரியர்: ஆர். என். லோகேந்திரலிங்கம்
"உதயன்" வெளியீட்டாளர்கள்
Head Office: 'UTHAYAN PUBLISHERS
1235 Ellesmere Road
Scarborough, Ont. M1P 2X8 Canada
Tel: 416.752-1524
Fax: 416.752-6703
Chief Editor: R. N. Logendralingam
Graphic : Suthaharn, Rani & Pathma
'UTHAYAN PUBLISHERS
Regional Office in Germany
P. O. Box: 750162,
60531- Frankfurt
Germany
Tel: (+49)69-693774
Fax: (+49)69-694442
Advertising & Circulation Manager : S. J. Sothy
Printers : Weller Publishers Canada
Europe Edition; Managing Editor: Sripathy Sivanadiyan
E-mail: uthayan66@hotmail.com

இதயமுள்ள இடதுசாரிகள்

இலங்கையில் இடதுசாரி இயக்கம் தோற்றம் பெற்று அந்த இயக்கத்தை வளர்த்தெடுக்க இடதுசாரித்தலைவர்கள் தம்மை அர்ப்பணித்து செயற்பட்ட காலத்தில் அவர்களுக்கு எதிராக செயற்பட்ட முதலாளித்துவ சக்திகள், இலங்கையில் இனபேதத்தை ஏற்படுத்தி அதன்மூலம் இடது இயக்கத்தை நசுக்கிடவும் தமிழ் சிங்கள தொழிலாளர்களின் ஐக்கியத்தை சிதைக்கவும் முயன்று அதில் ஓரளவு வெற்றிகண்டனர். இவ்வாறு இடதுசாரி இயக்கம் இலங்கையில் நசுக்கப்பட்டபோது அதனை அழிந்து போகாமல் காப்பாற்றிய சில தலைவர்களுள் தோழர் வாசுதேவா நாணயக்காராவும் ஒருவர். தென்னிலங்கை அரசியல் தலைவர்களுள் நேர்மையாளராகத் தோன்றி அதே தெளிவான போக்கில் எவ்வித மாற்றமுமில்லாமல் அடக்குமுறைகளுக்கு எதிராகவும், இனவாதத்திற்கு எதிராகவும் போராடி வருகின்ற அவர் இவ்வாரம் கனடாவிற்கு வருகை தந்துள்ளார். அமரர் மு. சிவசிதம்பரம் அவர்களின் ஞாபகார்த்த உரையாற்ற இங்கு வருகை தந்துள்ள அவரை வரவேற்று அவரின் உரைகளுக்கும், சிந்தனைகளுக்கும் மதிப்பளிக்க வேண்டும் என்பதே எமது கருத்தாகும்.

நாளை மறுநாள் நிகழவிருக்கும் அமரர் மு. சிவசிதம்பரத்தின் நினைவஞ்சலிக் கூட்டத்தில் உரையாற்றவுள்ள அவரை வரவேற்க வேண்டியது கனடா வாழ் ஈழத்தமிழ் மக்களின் கடமையாகும்.

கரும்புலிகளின் தியாகங்கள் உலகில் உயர்ந்த இடத்தை வகிக்கின்றன

மாவை சேனாதிராஜா புகழாரம்

கரும்புலிகளின் உயிர்த்தியாகங்கள் உலகில் உயர்ந்த இடத்தை வகிப்பன எனவே அவர்களின் தியாகங்களை மெச்சுவதற்கும் பெருமைப்படுத்துவதற்கும் எடுக்கப்படும் தியாகிகள் தின எழுச்சி நிகழ்வுகளில் அனைவரும் பங்குபற்றி எழுச்சிபெறுவோம்;; - என்று தமிழ் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா அழைப்பு விடுத்துள்ளார்.

கரும்புலிகள் தினத்தை ஒட்டி அவர் விடுத்துள்ள அறிக்கையிலேயே இந்த அழைப்பை அவர் விடுத்திருக்கின்றார். அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:- தமிழ்த்தேசத்தினதும் மக்களினதும் விடுதலைக்கான போரில் கரும் புலிகளின் தியாகங்கள் மகத்தானவை. பேரினவாத அரசினதும் இராணுவத்தினரதும் இலக்குகளை உடைத் தெறிந்து தமிழ்த்தேசத்தின் விடிவிற்கு அவர்கள் தம்மை அர்ப்பணித்திராவிட்டால் இந்தளவுக்கு வெற்றிகளை நம்மக்கள் அடைந்திருக்கமுடியாது.

தமிழ்த்தேச மக்களின் விடுதலைப் போராட்டமும் ஆயுதப் போராட்டமும் புரிந்துணர்வு உடன்பாட்டில் அங்கீகரிக்கப்பட்டு இருப்பதற்கு புலிகளின் போர் வெற்றிகளும் அவற்றில் கரும்புலிகளின் தியாகங்களும் முக்கியமானவை - என்று தெரிவித்துள்ளார

அமெரிக்காவிலிருந்து திரும்பியதும் வைகோ கைது செய்யப்படுவாரா?

இந்தியாவில் தடை செய்யப்பட்ட விடுதலைப்புலிகள் இயக்கத்தை ஆதரித்து வைகோ மதுரை திருமங்கலத்தில் பேசிய பேச்சை தொடர்ந்து அவர் மீது பொடா சட்டத்தின் ஜெயலலிதா அரசு வழக்குப்பதிவு செய்து உள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனை தொடர்ந்து வைகோ அமெரிக்காவில் இருந்து சென்னைக்கு திரும்பி சென்றதும் 12-ந் திகதி கைது செய்யப்படலாம் என்று தெரியவருகிறது. மதுரை மாவட்டம் திருமங்கலத்தில் கடந்த மாதம் 29-ந் திகதி ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ எம்.பி. பேசினார். அப்போது அவர் விடுதலை புலிகளுக்கு பகிரங்க ஆதரவு தெரிவித்து பேசினார். அவர் பேசியபொழுது விடுதலை புலிகளை நான் நேற்றும் ஆதரித்தேன். இன்றும் ஆதரிக்கிறேன். நாளையும் ஆதரிப்பேன். தொடர்ந்தும் ஆதரிப்பேன். பொடாவுக்கு நான் பயப்பட மாட்டேன். அதை விட கடுமையான சட்டத்தையே சந்தித்தவன் என அவர் ஆவேசமாக பல கருத்துக்களை தெரிவித்து உள்ளார்.

எனவே வைகோ மீது பொடா சட்டத்தின் கீழும் தடுப்புச் சட்டத்தின் கீழும் நட வடிக்கை எடுப்பதை தவிர வேறு வழியில்லை என்றும் மத்திய-மாநில அரசுகள் பயங்கரவாத இயக்கங்கள் மீது கடும் நடவடிக்கை எடுத்துவரும் இந்த நேரத்தில் அதற்கு ஆதரவு தரும் பாராளுமன்ற உறுப்பினர் கட்சி தலைவர் மத்திய அரசில் ஆளும் கூட்டணியில் அங்கம் வகிப்பவர் மீது கடும் நடவடிக்கை அவசியம் என்றும் துணைப் பிரதமர் அத்வானிக்கு ஜெயலலிதா கடிதம் எழுதினாரா என்பதும் இங்கு கவனிக்கத்தக்கது.

GENERAL TOURS & TRAVELS

Lowest Air Fares to Colombo, Singapore, India & Other Destinations
இந்திய திருத்தலங்களுக்கு யாத்திரை செய்வதற்கான ஒழுங்குகள் மிகக்குறைந்த விலையிலும், இலங்கை, இந்தியா, சிங்கப்பூர் மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு பிரயாணச்சீட்டுக்களை பெற்றுக்கொள்ளவும் இன்றே நாடுங்கள்
FARES ARE SUBJECT TO CHANGE BASED ON SEATS AVAILABILITY
ALSO CALL US FOR ANY DESTINATION ONE WAY FARE ON REQUEST
1468 VICTORIA PARK AVE., SUITE 117 TORONTO ON M4A 2M2
TEL: (416) 755-8500 FAX: (416) 755-5552
யாழ் செல்வதற்கான அனுமதி பெற்று. டிக்கட்டும் ஒழுங்கு செய்து தரப்படும்.

ஐம்பதாவது அகவையைக் கடக்கும் 'வெற்றிமணி' சிவகுமாரனின் பணி சிறக்க வாழ்த்துகிறோம்

ஜேர்மனியில் பிரசுரிக்கப்பட்டு இன்று உலகின் பல்வேறு நாடுகளுக்கும் பவனி வந்து தமிழ் மணம் பரப்பும் வெற்றிமணி சஞ்சிகையின் ஆசிரியர் பல்கலைச் செல்வன் சுப்பிரமணியம் சிவகுமாரன் தனது ஐம்பதாவது அகவையைக் கடந்துள்ளார் என்பதைக் கண்டு மகிழ்வெய்துகிறேன். அவர் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியின் புகழ் பார்எங்கும் பரப்பும் இன்னொரு ஏந்தல். கல்லூரியில் கற்குங்கால் சித்திரத்தில் தனித்திறமை காட்டி கெலனியா நுண்கலைக் கல்லூரியில் நுண் கலைமானி மேற்றகமை ஈட்டி தான் கற்ற கலையைத் தன் சமூகத்திற்கு நல்க வேண்டும் என்ற வேட்கையின் காரணமாக தொழிலாற்ற மகாஜனாக் கல்லூரியைத் தேர்ந்தெடுத்தமை அவரின் நன்றியுணர்வினுக்குக் கட்டியம் கூறுகின்றது. மகாஜனாக் கல்லூரியில் கற்பிக்க வாருமேன் என நான் விழித்த பொது மறுவார்த்தை பேசாமல் பணியேற்று அங்கு கற்பித்த காலத்தில் அவருக்கு என வழங்கப்பட்ட அறையினை ஒரு கவர்ச்சிகரமான சித்திர கூடமாய் ஆக்கிய பெருமை அவருக்கு உரியது. நாளாந்தம் எனக்கும் அவருக்கும் இடையே ஒரு போட்டியே நடைபெற்றது என்றால் அது மிகையாகாது. பாடசாலையை விட்டு கடைசியா வீடு செல்பவர் அவரா அல்லது நானா என்பதே அப்போட்டியாகும். குலாத்தின் கோளாறினால் நாம் இருவருமே நாட்டை விட்டு வெளியேறியமை மகாஜனாக் கல்லூரியின் தவவலிமைக் குறை எனலாம். அவர் ஜெர்மனியும் நான் நைஜீரியாவும் சென்று விட்டோம்.

தந்தை தொடங்கிய *வெற்றிமணியை* ஜெர்மனியில் தொடர்ந்து பிரசுரித்து அகிலமெல்லாம் அதனை வெற்றிநடை போடவைத்தமை *இவன் தந்தை என நோற்றான் கொல் எனச் சொல்ல* வைக்கிறது. பத்திரிகையாளனாய். ஓவியனாய், கவிஞனாய், சிறுகதையாளனாய் சிவகுமார் பல்வேறு பரிணாமங்களில் பொலிவுறுவதைக் காண உள்ளம் வியக்கிறது. உவகை பொங்குகின்றது.

அவரது கவிதைகள் குறும்பா வகை. குறுகச் சொல்லி நிறையச் சிந்திக்க வைக்கிறார். கவிதைகளுக்கு அவற்றுடன் வரும் புதிய முறை ஓவியங்களும் மிகையூதியமாக (Bonus) அமைகின்றன. கவிதை சொல்லும் செய்திகளிலும் பார்க்க ஓவியங்கள் சிலசமயம் அதிகம் புலப்படுத்தல் போல் அமைவதால் இவர் திறமை அதிலா? இ.திலா? என ஐயத்தைக் கிளப்பி விடுதல் கண்டு அதிசயிக்க வைக்கிறது.

சஞ்சிகை ஒன்று ஐம்பது வருடங்கள் தாக்குப் பிடிப்பது பரம ஆச்சரியம். வியாபார நோக்கில்லாமல் சமூகநலன் கருதி ஒவ்வொரு முறையும் தன் கையில் கடிக்கவும் மனம் தளராது தொடர்ந்து பத்திரிகைப் பணி செய்தவர் *வெற்றிமணி*யின் நிறுவிய ஆசிரியர் ஆசிரியமணி அமரர் சுப்பிரமணியம் அவர்கள். அவரென்ன பெரும் தனவந்தரா? தன் கைப் பணத்தைப் பத்திரிகை வெளியீட்டில் இறைப்பதற்கு? அவர் வெறும் சாதாரண தமிழ் ஆசிரியர். தொழில் மூலம் வரும் ஊதியம் தவிர வேறு எவ்வித வருமானமும் இல்லாதவர். குடும்ப நிலை சாதாரண மத்திய தரம். குடும்பமோ சாதாரணத்திலும் சற்றுப் பெரிது. தொழில் வருவாயில் குடும்பத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்து குறைவிலாது நடாத்துவதோ பகீரதப் பிரயத்தனம். அப்படியிருந்தும் தன் கைப்பணத்தை மாதாமாதம் செலவு செய்து பத்திரிகை நடாத்த ஒருவர் முன்னிற்பார் என்றால் அவர் உளப் பாங்கு எத்தகையது?

சமூக மேம்பாட்டிற்குத் தன்னால் இயன்ற பணி ஆற்ற வேண்டும் என்ற ஆதங்கம் பத்திரிகை ஒன்றின் மூலமாகத்தான் பல்வேறு தகவல்களை மக்களுக்கு வழங்கி அவர்களுடைய பன்முகத் திறங்களை வளர்த்து சீரிய குடிமக்களாக்க வேண்டும் என்ற சீரிய வேட்கை.

குரும்பசிட்டி மண் யாழ்ப்பாணத்திலே சற்று வித்தியாசமானது. ஈழத்தின் பொதிகை அது. தமிழ்த் தாத்தா மகா வித்துவான் கணேசையா, பத்திரிகை ஜாம்பவான் ஈழகேசரி பொன்னையா, ஆசிரிய மணி வெற்றிமணி சுப்பிரமணியம் என அந்த மண்ணின் மைந்தர்கள் வணக்கத்திற்குரியவர்கள். என்றும் நினைவில் நிற்பவர்கள்.

தந்தை தொடங்கிய நற்பணி மகன் மூலம் செவ்வனே தொடர்கிறது.

உரை முடிவு காணான் இளமையோன் என்ற
நரை முது மக்கள் உவப்ப நரை முடித்துச்
சொல்லால் முறை செய்தான் சோழன் கலவிச்சை
கல்லாமல் பாகம் படும்.

என்கிறது பழைய பாடல் ஒன்று, அதன் படிக்கு குல வித்தை கற்காமலேயே கை வரப்பெறுமாம். தந்தையைப் போன்ற சீரிய நோக்கு தனயனுக்கும் ஏற்பட்டதில் வியப்பில்லை. குரும்பசிட்டி எனும் பொதிகையில் உருவாகி யாழ்ப்பாணம் எங்கும் பாய்ந்தோடி ஈழத்தின் ஏனைய பகுதிகளுக்கும் சென்றோடிய கங்கையை சிவகுமாரன் எனும் பகீரதன் ஜெர்மனிக்கு தன் தவ வலிமையால் கொண்டு வந்து விட்டான். வெற்றிமணி காட்டாற்றுப் பிரவாகத்துடன் ஐரோப்பா, அமெரிக்கா எல்லாம் பாய்ந்து செல்கிறது கண்கொள்ளாக் காட்சி.

தந்தைக்குக் கிடைக்காமல் போன தொழில் நுட்ப வசதி மகனுக்கு நிறையவே கிடைக்கின்றமையால் சாதனை வியத்தகு பரிமாணம் பெறுகிறது. மகன் ஓவியனாகவும் இருப்பது மேலும் அனுகூலம். கண்கவர் அட்டை, கதைகளுக்கும் கட்டுரைகளுக்கும் கருத்துச் செறிவான ஓவியங்கள் என அசத்தலான அமைப்பு, சிவகுமார் உள்ளத்தால் இளைஞர். வாசகர் நாடித் துடிப்பை நன்கு அறிந்தவர். எனவே நிறையவே தமிழ் திரைப்படங்கள் பற்றியும், நடிக, நடிகைகள் பற்றியம் தெரிந்து வைத்து வஞ்சனை இல்லாமல் வாரி வழங்குகிறார். வாசகர் வட்டம் பெரிதாவதற்குச் சொல்லவா வேண்டும். எல்லா வயதினருக்கும் வெவ்வேறு நாட்டம் உடையோருக்கும், பல்வேறு கொள்கைப் பற்றுடையோருக்கும் வேண்டியவற்றைத் தந்து பத்திரிகை ஒன்றினை நடாத்துதல் சுலபமல்ல. அதனை சிவகுமார் அவர்கள் ஓரளவு வெற்றிகரமாக கடைப்பிடித்துள்ளார் என்பதை கண்டு நான் மகிழ்கிறேன்.

நான் அறிந்த வரையில் இவ்வளவு கார்ச்சிகரமான, சுவாரஸ்யமான காத்திரமான இதனை இட்டு நான் பெருமிதம் அடைகிறேன். அவரின் சீரிய பணியினை கனடிய வெகுஜன ஊடகங்கள் பாராட்டிக் கௌரவித்துள்ளதை இங்கே குறிப்பிட வேண்டும். உதயன் பத்திரிகை சார்பில் 2001 இல் நடந்த வெற்றிமணியின் ஐம்பதாவது ஆண்டு விழாவின் போது பல்கலைச் செல்வன் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளார். தமிழர் தகவல் 1999ம் ஆண்டு தமிழ்ப் பணி விருது வழங்கிக் கௌரவித்துள்ளது. 1999இல் கனடா தமிழ் எழுத்தாளர் இணையம் ஓவியக் கலைவேழ் என்ற பட்டத்தை வழங்கியுள்ளது.

அவர் மேலும் பல்லாண்டு வாழ வாழ்த்தி பத்திரிகைத் தொண்டும் தொடரட்டும் என வாழ்த்துவோம்.

Rogers
Hi-Speed Internet
First Month
FREE
Only for our custumers
இந்தச் சலுகை **July-31** வரை மட்டுமே
- **Cable Tv** (Basic Cable Free install & First 2 months half price)
- **Digital Cable** (60 days FREE preview for specialty channels)

தமிழ் தொலைக்காட்சி, மற்றும் இன்ரநெற் தேவைகளுக்கு அழையுங்கள்
Sunthar 416-564-6397, 416-267-3024

DR. SUGANTHY SUTHAGAR
டாக்டர் (திருமதி) சுகந்தி சுதாகர்
FAMILY DENTIST
குடும்ப பல் வைத்தியர்
CALL (416) 299 7466

- COSMETIC AND GENERAL DENTISTRY பொதுவான பல் வைத்திய சேவைகளுடன் பற்களை அழகுபடுத்தல்
- FREE CONSULTATION இலவச மருத்துவ ஆலோசனை
- ORTHODONTICS (BRACES) FOR ADULTS & CHILDREN வயது வந்தவர்களுக்கும் சிறுவர்களுக்கும் பல் கிளிப் போடுதல்
- SEDATION FOR NERVOUS PATIENTS

3410 SHEPPARD AVE. E., SUITE 311, SCARBOROUGH, ON. M1T 3K4
TEL: (416) 299 7466

மக்கள் அரசியல் மயப்படுதல் வேண்டும்

விடுதலைப் புலிகளின் பிரமுகர் கூறுகின்றார்

மக்கள் அரசியல் ரீதியாக சிந்திக்கப் பழகவேண்டும். அரசும் எமது தலைவரும் செய்து கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பிரகாரம் இன்று நாட்டில் சமாதானம் நிலவுகிறது. அதனைக் குழப்பு படையினர் சிலர் திட்டமிட்ட செயற்பாடுகளில் ஈடுபட்டுவருகின்றனர். அவர்களுக்கு மக்கள்தான் தகுந்தபாடம் புகட்ட வேண்டும்.

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் அம்பாறை மாவட்ட அரசியல்துறை பொறுப்பாளர் பாவா, காரைதீவில் புலிகளின் அரசியல் அலவலகத்தை திறந்துவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார். விடுதலைப் புலிகளின் காரைதீவு அலுவலகத் திறப்புவிழாவில் காரைதீவுப் பொறுப்பாளர் நல்லதம்பி தங்கவேல் தலைமையில் நடைபெற்றது. அம்பாறை மாவட்ட இராணுவ தளபதி ஸ்ரான்லி தமிழீழ தேசிய கொடியை ஏற்ற தமிழீழ நீதிமன்ற நீதிபதி வர்ணகுலசிங்கம் பிரபுராஜா அலுவலக பெயர்ப்பலகையை திரைநீக்கம் செய்தார். பொறுப்பாளர் பாவா மேலும் பேசுகையில்:

நீண்டகால இடைவெளியின் பின்னர் இம்மண்ணில் யுத்தம் ஓய்ந்து சமாதானக்காற்று வீச ஆரம்பித்துள்ளது. அரசியல் ரீதியாக ஒரு மாற்றம் ஏற்பட்டுள்ளது. எமது தலைவர் ஆயுதப் போராட்டத்திற்கு தற்காலிக ஓய்வுகொடுத்து அரசியல் ரீதியில் செயற்பட மக்கள் முன் வந்துள்ளார். கிராம ரீதியாக அபிவிருத்தி குழுக்களை அமைத்து அபிவிருத்தி வேலைகளை செய்து வருகிறோம். இந்த மாற்றமானது 17600 மாவீரர்களினதும் 1 லட்சம் மக்களினதும் தியாகத்தால் வந்த மாற்றமே இது.

இந்த அரசியல் நகர்வை முன்னெடுத்துச் செல்ல வேண்டிய பொறுப்பு மக்களைச் சார்ந்தது. போராளிகளின் பொறுப்பல்ல. அது தமிழீழ மண்ணில் அரசியல் நடவடிக்கைகளை பொதுமக்கள் முன்வந்து முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.

எம்முடன் மக்கள் வந்து அரசியல் வேலைத்திட்டங்களில் பங்கெடுக்கின்றபோது இராணுவத்தினர் பயமுறுத்தி வருகின்றனர். தமது பூரண கட்டுப்பாட்டிற்குள் ஆதிக்கத்துள் மக்களை வைத்துக் கொள்ள வேண்டும் என்று படையினர் செயற்படுகின்றனர்.

சேவை செய்ய வந்துள்ளோம். விடுதலைப் போராட்டத்தில் சீரழிந்துள்ள தமிழீழ மண்ணை மீளக் கட்டியெழுப்ப வேண்டும். அதனைச் செய்ய விடுதலை புலிகள் திடசங்கற்பம் பூண்டுள்ளனர். அதனை நிறைவேற்றவே நாம் உங்கள் முன்வந்துள்ளோம். சேவை செய்வதே எமது நோக்கம்.

ஆயுதப் போராட்டம் என்பது இனிமேல் இடம் பெறமாட்டாது. அதற்காக நாம் பலவீனமடைந்து விட்டதாய காரும் எண்ணக்கூடாது. நாம் இன்றும் இராணுவ ரீதியில் மிகவும் பலம் பொருந்தியவர்களாகவே இருக்கிறோம். நாம் சமாதானத்தை ஒருபோதும் குழப்பமாட்டோம். யாராவது வலிந்து குழப்பினால் போராட்டத்திற்கு நாம் தயார்.

எனவே எமது மக்கள் அஞ்சத் தேவையில்லை. யாரும் ஒளிய வேண்டியதில்லை. மக்கள் ஒன்றிணைந்தால் அபிவிருத்தி நடவடிக்கைகளை செய்ய முடியும். நாம் தனித்து செயற்பட விரும்பவில்லை. மக்கள் அபிவிருத்தி மக்களின் பய்களிப்புடன் தான் முன்னெடுத்து செல்லப்பட வேண்டும் என்பதில் நாம் உறுதியாக இருக்கிறோம். அம்பாறை மாவட்டத்தில் மூவினமக்களும் வாழ்வதால் சில பிரச்சனைகள் உள்ளன. அவற்றை தீர்க்க வேண்டிய தார்மீக பொறுப்பு எமக்கு உண்டு. எமது போராட்டம் காரணமாக எமது தலைமைத்துவத்தின் கீழ் மக்கள் ஒன்றிணைந்து இலக்கை அடைய வேண்டும்.

இழந்துள்ள இழப்புக்கள் எண்ணிலடங்காதவை. காரைதீவில் மட்டும் 94 போராளிகள் வீரமரணமெய்தியுள்ளனர். அதுபோலவே ஏனைய தமிழ்ப்பகுதிகளிலும் ஏகப்பட்ட போராளிகள் உயிர் நீத்துள்ளனர். இந்த தியாகங்களின் விலை என்ன? என்பது தான் எமது கேள்வி. இன்னும் தமிழ் மக்களின் உரிமைகள் கிடைத்துவிடவில்லை. எனவே மக்கள் போராட்டம் தொடர வேண்டும். மக்கள் சக்தி மாபெரும் சக்தி என்று குறிப்பிட்டார்.

விமான உதிரிப்பாகங்கள் விடயத்தில் விடுதலைப் புலிகளுக்கு சம்பந்தமில்லை

அண்மையில் கொழும்பு துறைமுகத்தில் வைத்து கைப்பற்றப்பட்ட ரஷ்ய தயாரிப்பு விமான உதிரிப்பாகங்களுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் எவ்வித தொடர்புமில்லை என ஊர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது.

கொழும்பு துறைமுகத்தில் வைத்து சுங்க அதிகாரிகளால் கடந்த 18ம் திகதி சைப்பற்றப்பட்ட ரஷ்ய தயாரிப்பு விமான எஞ்சின்கள் மற்றும் உதிரிப்பாகங்கள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட சி.ஐ.டி. இன் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் லயனல் குணதிலக்க தற்போது அது தொடர்பான சில விபரங்களை வெளியிட்டுள்ளார்.

ஜேர்மனி, ஹம்பேர்க் நகரில் இலங்கை துறைமுகத்திற்கு அனுப்பப்பட்டிருந்த பொதிகள் சில கடந்த ஒன்றரை மாதங்களாக எவராலும் பெறுப்பேற்கப்படாமல் இருந்ததால் கடந்த 18ம் திகதி சுங்க அதிகாரிகள் இக் கொள்கலன்களை திறந்து பார்த்துள்ளனர். இக் கொள்கலன்களில் ரஷ்ய தயாரிப்பு விமான எஞ்சின்களும் உதிரிப்பாகங்களும் இருந்தமை கண்டு பிடிக்கப்பட்டது. இவற்றை கொட்டாஞ்சேனையில் உள்ள வர்த்தக நிலையத்தினரே இறக்குமதி செய்திருப்பதாகக் கூறப்பட்டதையடுத்து மேற்பர் வர்த்தகர் விசாரணை செய்யப்பட்ட போது அவர் இதற்கும் தனக்கும் எதுவித தொடர்புமில்லை என மறுத்துள்ளார்.

இதனையடுத்து நன்கு ரஷ்ண மொழி தெரிந்த இரண்டு விமானப்படை அதிகாரிகளை உள்ளடக்கிய விசாரணைக்குழு அமைக்கப்பட்டது. இது தவிர சி.ஐ.டி. யும் விசாரணைகளை மேற்கொண்டது.

இது தொடர்பாக சி.ஐ.டி. யினர் வெளியிட்டுள்ள தகவல்களில் இவ்விமான உதிரிப்பாகங்கள் இறக்கமதிக்கும் விடுதலைப் புலிகளுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றும் இவை இந்தியாவிலுள்ள தூதுக்குடிக்கு எடுத்துச் செல்வதற்காக கொண்டு வரப்பட்டவை என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

தமிழ் - முஸ்லிம் மக்களிடையே பிரச்சனைகளை உருவாக்க தீய சக்திகள் முனைப்பு

விடுதலைப் புலிகள் அறிக்கை

இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தி அதன்மூலம் தமது உரிமைகளை பெறுவதை விரும்பாத சில தீய சக்திகள் தமிழ் முஸ்லிம் மக்களுக்கிடையே பிரச்சனையை ஏற்படுத்தி அப்பாவி உயிர்களைக் கொன்று தமிழ் பேசும் மக்களின் பொருளாதாரத்தை சிதைக்க எத்தனிக்கின்றனர்.

இதன் தொடராகவே ஒட்டமாவடியில் தமிழ்மக்கள் மீது வன்முறைகள் பிரயோகிக்கப்பட்டதாக மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறை வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வாழைச்சேனை, ஒட்டமாவடி பிரதேசங்களில் இடம்பெற்ற கிரனைற் வீச்சு சம்பவங்களில் ஒருவர் பலியானதுடன் 15 பேர் படுகாயமடைந்துள்ளனர். அத்தோடு தனியார் பேருந்துகளும், பிராந்திய போக்குவரத்து பேருந்துகளும் உடைக்கப்பட்டுள்ளன. மாணவர்களும் அடித்து சித்திரவதைப்படுத்தப்பட்டுள்ளனர்.

தீய சக்திகளின் இக்கொடூர செயல்களுக்காக அப்பாவி முஸ்லிம் மக்களுக்கு எதுவித தீங்கும் செய்யாது எமது உரிமையைப் பெற அமைதிகாத்து அணிதிரள்வோமாக என்றும் புலிகள் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Do you need a LOAN or MORTGAGE?

உங்களுக்கு கடன் வசதி Mortgage வசதி செய்து தர வேண்டுமா?

Mortgage

(Residential & Commercial)

Loans

(Business, Personal, Credit Cards, Line of Credit, Taxi, Taxi plate, Car, Truck etc.)

Note: No brokerage fees from qualified buyers and interest rate discount up to 1% or 3% cash back and more...

TARLOCHAN AUJLA (Ph.D)

ALPHA FINANCIAL SERVICES

PHONE: 416-750-1496 CELL: 416-885-1490

2390 Eglinton Avenue East, Suite 238, Scarborough, ON

வாகன விபத்துக்கு உள்ளானீர்களா?

YOGI & PARTNERS உங்களது காப்புறுதி நிறுவனம் உங்களில் ஆதாயம் தேடவிடாதீர்கள். YOGI & PARTNERS

உங்கள் உரிமைகள், ஏற்படக்கூடிய நன்மைகள், தீமைகள் குறித்து ஆலோசனைகள் பெற எம்மை நாடுங்கள்.

தவறு உங்களுடையதாயினும்..

உங்கள் உரிமைகளைப் பாதுகாத்துக்கொள்ளுங்கள்

EAST OFFICE
1920 Ellesmere Rd., Suite: 110
Scarborough, Ont. M1H 2V6
Tel : (416) 289-4141

அனுபவம்மிக்க பல காப்புறுதி ஆலோசகர்கள் எமது நிறுவனத்தில் பணியாற்றுகிறார்கள்.

யோகி தம்பிப்பிள்ளை

WEST OFFICE
4 John Street, Suite 10,
Toronto, Ont. M9N 1J3
Tel : (416) 241-9292

உள்ளூர் செய்திகள்

சித்தங்கேணி ஒன்றியத்தினரின் கோடைகால ஒன்று கூடல்

சித்தன்கேணி ஒன்றியத்தின் கோடைகால ஒன்று கூடல் எதிர்வரும் 13ம் திகதி சனிக்கிழமை வழமையாக நடைபெறும் சனிபுறாக் பூங்கா 6ம் இலக்கத் திடலில் காலை 9.30 மணி முதல் பிற்பகல் 6.00 மணி வரை நடைபெறவுள்ளது. அன்றையதினம் சிறுவர் பெரியவர்களுக்கான பலவித நிகழ்ச்சிகளும், மதியபோசனமும், வருடாந்த பொதுக் கூட்டமும், நடைபெறும். புதிதாக கனடாவிற்கு வருகை தந்திருக்கும் சித்தன்கேணியுடன் தொடர்புடையவர்கள், ஒன்றிய அங்கத்தவர்கள் மற்றும் நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றார்கள்சித்தன்கேணி ஒன்றியத்தினர். மேலதிக தொடர்புகளுக்கு 905 201 6040/ 416 493 7292 / 416 449 2976 / 416 724 7839

கோப்பாய் மக்களின் ஒன்றுகூடல்

கோப்பாய் வாழ் மக்களிள் ஒன்று கூடலும் விளையாட்டு நிகழ்ச்சியும், புதிய நிர்வாகத் தெரிவு செய்தலும், ஜூலை மாதம் 13ம் திகதி சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு மோர்னிங் சைட் பூங்கா ஏரியா 6ல் நடைபெறவுள்ளது. கனடா வாழ் அனைத்து கோப்பாய் மக்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அழைக்கின்றார்கள் கோப்பாய் அபிவிருத்திச் சங்கத்தினர். மேலதிக தொடர்புகளுக்கு: 416 759 1812, 416 728 0652

ஸ்கந்தவரோதயா கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் பொதுக் கூட்டமும் கோடைகால ஒன்று கூடலும்

ஸ்கந்தவரோதயா கல்லூரிப் பழைய மாணவர் சங்க கனடாக்கிளையின் வருடாந்த ப் பொதுக் கூட்டமும் கோடைகால ஒன்று கூடலும், ஜூலைமாதம் 6ம் திகதி ரொறன்ரோ மாநகரசபையின் வேலை நிறுத்தத்தால் பின்போடப்பட்டுள்ளது. என்பதனை அறியத்தருவதோடு, புதிய திகதி, இடம், பின்பு அறிவிக்கப்படும் எனவும் தெரிவித்துக் கொள்கின்றார்கள். தொடர்புகளுக்கு: 416 412 1124 / 416 496 1646 / 905 472 8703 / 905 947 8697

யாழ் மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம்

யாழ் மத்திய கல்லூரியின் நடை பவனி தொடர்ந்து மத்திய கல்லூரி வேம்படி மகளிர் ஒன்று கூடல் சனிக்கிழமை ஜூலை மாதம் 06ம் திகதி மோனிங்சைட் பார்க்கில் காலை 10.30 மணிமுதல் நடைபெற இருந்த இந்த இந்த நிகழ்வுகள் தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது. வைத்தியசாலைக்காக நிதி சேகரித்த கல்லூரி பழைய மாணவர்கள் உடனடியாகச் சங்கத்தோடு தொடர்பு கொள்ளுமாறும் கெட்டுக் கொள்ளப்படுகின்றார்கள். நடைபவனியைத் தொடர்ந்து நடைபெற இருந்த ஒன்றுகூடல் நிகழ்வுகளும் இரத்துச் செய்யப்பட்டுள்ளது. மேலதிக தொடர்புகளுக்கு: 416 283 9136 / 416 438 0660 / 416 439 9491/ 416 298 7863 / 416 696 0861 / 416 299 3167.

Rajaguru Martial Arts
KARATE CLASSES
ராஜகுரு மார்ஷல் ஆர்ட்ஸ் அக்கடமி வழங்கும்
கராட்டி வகுப்புகள்
ஷோடோகான் கராட்டி வகுப்புகள்
அன்பு, அமைதி, கருணை, பொறுமை போன்ற நற்குணங்களோடு வாழவும், மற்றவர்களை நேசித்து சேவை செய்யும் மனப்பாண்மையுடன் வாழவும், உடலுக்கும் மனதிற்கும் உறுதியளிக்கும் பயிற்சியைப் பெறவும் தமக்கும் பிறருக்கும் ஆபத்து ஏற்படும் போது பாதுகாத்துக் கொள்ளவும் கீழேயுள்ள பயிற்சி நிலையங்களை அணுகவும்
ஷோ ஷிஹான் "ராஜகுரு" T. ரவீந்திரன் திறவர், சர்வதேச தலைமை ஆசிரியர்
ஷிஹான் R. ஸ்ரீராம் கனடா முகண்மை ஆசிரியர்
பெண் (வைசாளி ஸ்ரீராம்) பயிற்சியாளராலும் பயிற்றுவிக்கப்படுகிறது
DAILY NEEDS 2543 Pharmacy Ave (Finch / Pharmacy)
BEEMAH RESTAURANT 1450 Gerrard Street (Gerrard Indian Bazar)
ACADEMY OF TAMIL ARTS & TECH. 3150 Eglinton Avenue (Markham / Eglinton)
DAISY MART 5739 Finch Avenue East (Finch / Neilson)
416-473-8472

24hrs
Earo ELECTRIC
அனைத்து மின் இணைப்பு திருத்த வேலைகளுக்கும்
☐INDUSTRIAL
☐RESIDENTIAL
☐COMMERCIAL
Licensed Electrician
Maniam : 416-289-9393

இங்கிலாந்து TSSA பெண்கள், கனடா TSSA பெண்களுடன் வலைப்பந்தாட்டப் போட்டி

TSSA கனடா 2002 எட்டாவது வருடாந்த ஒருநாள் விளையாட்டு விழா ஆகஸ்ட் மாதம் சனிக்கிழமை 10ம் திகதி பேச்மவுண்ட் மைதானத்தில் காலை 9 மணிக்கு நடைபெறும். இந்த நிகழ்வு ஆண்கள் பெண்கள் அணிநடையுடன், ஆரம்பமாகவுள்ள விளையாட்டு விழாவில் வலைப்பந்தாட்டம், துடுப்பாட்டம், உதைபந்தாட்டம், கரப்பந்தாட்டம், அஞ்சலோட்டம் ஆகியன இடம்பெறவுள்ளன. முதன் முறையாக 15 வயதின் கீழ் ஆண்கள் உதைபந்தாட்ப் போட்டியம் நடைபெறும். சென்ற ஆண்டு 2001 ஆகஸ்ட் மாதம் இங்கிலாந்து சென்ற கனடிய வலைபந்தாட்டக் குழு சில பாடசாலைகளின் சிநெக பூர்வமான போட்டிகளில் வெற்றி பெற்று இறுதியில் இங்கிலாந்து பாடசாலைகளுடன் விளையாடி சம்பியனாககியது. இம்முறை இங்கிலாந்துக் குழு கனடாவிற்கு வருகை தந்து கனடியப் பாடசாலைகளுடன் போட்டியிடவுள்ளது. இந்த ஒருநாள் விளையாட்டு விழாவில் பங்குபற்றவதற்கான விண்ணப்பப்படிவங்கள் ஜூலைமாதம் 26ம் திகதி வெள்ளிக்கிழமை மாலை வரை ஏற்றுக் கொள்ளப்படும். மேலதிக தொடர்புகளுக்கு 416 499 0731 / 417 287 3402

மல்லாகம் மக்கள் மன்றத்தின் ஒன்றுகூடல்

மல்லாகம் மக்கள் மன்றத்தின் ஒன்று கூடல் ஆகஸ்ட் மாதம் 10ம் திகதி சனிக்கிழமை காலை 10.30 முதல்7 மணி வரை மோனிங் சைட் அன்ட் எல்ஸ்மேயர் சந்திப்பில் அமைந்துள்ள மோனிங்சைட் பார்க் ஏரியா இலக்கம் 2ல் நடைபெறவுள்ளது இதில் 2002ம் ஆண்டிற்கான வசந்தகால ஒன்று கூடலும், விளையாட்டுப் போட்டியும் இடம்பெறவுள்ளன. அனைத்து மல்லாகம் மக்களையும் அழைக்கின்றார்கள் மேலதிக தொடர்புகளுக்கு: 416 261 1321 / 416 261 3590

வில்லிசை கலைஞர் நா. கணபதிப்பிள்ளைக்கு பாராட்டு

தாயகத்திலிருந்து வருகை தந்து எம்மையெல்லாம் வில்லிசையால் மகிழ்வித்து மீண்டும் இம்மாத இறுதியில் தாயகம் செல்லவுள்ள மண்வாசனைக் கலைஞர் சின்னமணி நா. கணபதிப்பிள்ளை அவர்களை வாழ்த்தி இம்மாதம் 19ம் திகதி வெள்ளிக்கிழமை கனடியக் கலை, இலக்கிய, ஊடக நண்பர்களால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்தப் பாராட்டு விழா ஸ்காபரோ றோயல் குயின் விருந்துபசார மண்டபத்தில் இராப்போசன விருந்துடன் கூடியதாக நடைபெறவுள்ளது. மேலதிக தொடர்புகளுக்கு 416-920-9250 என்ற இலக்கத்தை அழைக்கவம்.

சிவயோக சுவாமிகளின் குருபூஜை

கனடா சிவத் தொண்டன் நிலையம் மாதாந்தம் நடாத்தி வரும், சிவ யோக சுவாமிகளின் ஆயில்யக் குருபூஜை ஜூலைமாதம் 12ம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 6.45 மணி முதல் 8.00 மணி வரை இலக்கம் 750 மார்க்கம் வீதியில் அமைந்துள்ள ஸ்ரீசக்தி துர்க்கா தேவி ஆலய மண்டபத்தில நடைபெறும். சுவாமிகளின் அடியார்கள் மற்றும் சைவ அன்பர்கள் யாவரும் இந்தக் குருபூஜையில் பங்கேற்று சுவாமிகளின் அருள் பெற்றேகுமாறு அழைக்கின்றார்கள் கனடா சிவத் தொண்டன் நிறுவனத்தினர்.மேலதிக தொடர்புகளுக்கு: 416 269 4709 416 335 5458

நான் ஒரு வழக்கறிஞர் இல்லை
உங்களுக்கு தெரியுமா?
கிறிமினல் குற்றவாளியென தீர்மானிக்கப்பட்டால் உங்கள்
- நிரந்தர வதிவிடஉரிமை
- குடியுரிமை
- குடும்ப ஒன்றிணைவு பாதிக்கப்படும்
• ACCIDENT INJURIES
• CRIMINAL
• DOG BITES
• SLIP & FALL
வாகன விபத்தில் பாதிக்கப்பட்டீர்களா? முதலில் வைத்தியசாலைக்கு சென்றுங்கள்
பின் இவரை அழையுங்கள்
416 490-9199
S.K.THEESAN எஸ்.கே.தீசன்
www.kalakalappu.net
கலகலப்பு தீசன்
416-490-9199

HOMELIFE
HOMELIFE METRO
Realty Inc. - Real Estate Broker
வீடு வாங்க, விற்க
Flexible Commission
FREE MARKET EVALUATION
• Buying Resale Homes & New Homes from Builder
• Selling your Home & Business
• Low-Rate Mortgage Arrangements
அழையுங்கள் நடா ஜி. நடராசா
416-616-8751
5200 Finch Ave. East #206, Scarborough, Ont. M1S 4Z4
Nada G. Nadarajah
B.V.Sc
Sales Representative
GOLD AWARD WINNER
416-293-5093 (24hr.)

MORTGAGE INTELLIGENCE
வீட்டு அடமானம் அல்லது கடன் வசதிகள் செய்து தரப்படும்
MORTGAGES & LOANS
• 5% DOWN PAYMENT TO BUY A HOME
• PRE-APPROVAL OF MORTGAGES
• ALL RESIDENTIAL MORTGAGES (1ST / 2ND)
• BAD CREDIT / BANKRUPTCY
ALL MORTGAGES & LOANS please call
Latchman Sukhdeo B.A. Dip. Com.
Mortgage Consultatnt
416-287-3289 ~ 416-566-5036

கணபதி ரவீந்திரனின் 'கதிரொளி' தயாரிப்பில்

கலைவேந்தன் கணபதி ரவீந்திரனின் கதை திரைக்கதை இயக்கத்திலும் ரவி அச்சுதனின் ஒளியமைப்பிலும் படத்தொகுப்பிலும் மிகப் பிரமாண்டமான காட்சி அமைப்புக்களுடன் மிக விரைவில் வெளிவரவிருக்கின்றது *கதிரொளி*.

25க்கு மேற்பட்ட கனடியக் கலைஞர்களின் கலைத் தொகுப்பாய் வெண்திரையை அலங்கரிக்க வரும் இத்திரைப்படம் கனடிய தாயக வாழ்வியலை மையமாக வைத்து பின்னப்பட்ட கதையம்சங்களைக் கொண்டுள்ளது. தாயகத்தில் ஜாதி, வர்க்க, வேறுபாடுகளுக்கு வேலி போட்டு கட்டிக் காத்திடும் ஒருசாராரின் வக்கிர புத்தியை கிளர்ந்தெழும் இளைய தலைமுறையினர் தகர்த்தெறியும் சமூகமாற்றத்தை கருவாய்க் கொண்டது *வேலி*. சந்தேகம் முன் கதவால் வந்தால் சந்தோசம் பின் கதவால் சென்றுவிடும் என்ற தத்துவத்தை மையமாய்க் கொண்டது *சந்தேகம்*. இதில் கனடிய வானொலி, தொலைக்காட்சிக் கலைஞர்கள் அனைவரின் ஒருங்கிணைந்த கலைப்படைப்பாய் உங்களை மகிழ்விக்கின்றது சந்தேகம். புலம்பெயர்ந்த மண்ணில் கனடியப் பல்கலாச்சார நீரோட்டத்தோடு கலக்க முற்படும் இளைய தலைமுறையினருக்கும் உள்வாங்கிக் கொள்ள முடியாத மூத்த தலைமுறையினருக்கும் இடையே நடைபெறும் அன்றாட அவலங்களின் வெளிப்பாடாய் உங்கள் உள்ளங்களைத் துணுக்குகளோடு சமூகத்திற்கேற்ற விழிப்புணர்வுக் கருத்துக்களையும் ஆங்காங்கே தோரணங்களாய்த் தொங்க விட்டு, உங்கள் அனைவரையும் மகிழ்ச்சிக் கடலில் மூழ்கடிக்க முழு நீள நகைச்சுவைச் சித்திரமாய் வருகிறது *சிவலோகம் ரூ கனடா*.

பல்வேறுபட்ட மனவழுத்தங்களில் வாழும் நம் தமிழ் நெஞ்சங்களை இருமணி நேரமாவது தங்கள் துன்ப துயரங்களை மறந்து, சிரித்திட யதார்த்த வாழ்வியலை சுவைத்திட, ரசித்திட முற்றுமுழுதான கனடிய கலைஞர்களின் காவியமாய் கதை பேசுகிறது *கதிரொளி*. வெகு விரைவில் வெண்திரையில் உங்களைச் சந்திக்க கனடிய கலைஞர்களின் கைவண்ணத்தில் *கதிரொளி*.

இங்குள்ள படங்களில் *கதிரொளி*யில் வரும் காட்சிகளைக் காண்கிறீர்கள். மேலதிக விபரங்களுக்கு 416-898 7284 என்ற இலக்கத்தை அழைக்கவும்.

ஜே.வி.பி. போன்ற இனவாதிகள் சிங்கள மக்களால் தூக்கி எறியப்படுவார்கள்

- ஸ்காபரோவில் வாசுதேவ நாணயக்கார

நமசமசமாஜக் கட்சியின் தலைவருமான திரு. வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார். எதிர்வரும் 7ம் திகதி ஞர்யிற்றுக்கிழமை ஸ்காபரோ அட்லாண்டா மண்டபத்தில் நடைபெறவுள்ள அமரர் மு. சிவசிதம்பரம் ஞாபகார்த்த கூட்டத்தில் உரையாற்றவென இங்கு வருகை தந்துள்ள திரு. வாசுதேவ நாணயக்கார கனடாவில் உள்ள தமிழ், ஆங்கில பத்திரிகை யாளர்களை சந்தித்தார். கலந்துரையாடல்களுக்கான ஏற்பாடுகளை சட்டத்தரணி திரு. கரிகாலன் செய்திருந்தார். கலந்துரை யாடலுக்கான இணைப்பாளராக உதயன் ஆர்.என். லோகேந்திரலிங்கம் பணியாற்றினார். அங்கு திரு. வாசுதேவ நாணக்கார தொடர்ந்து பேசுகையில்: இலங்கையில் இடதுசாரிகள் எப்பொழுதுமே தமிழ் மக்களுக்கு ஆதரவாக குரல் கொடுத்து வந்துள்ளார்கள். ஆனால் தங்களை இடதுசாரிகள் என்று கூறிக் கொள்ளும் ஜே.வி.பி.யினர் இனவாதிகளாக இருப்பது எமக்கு கவலையைத் தருகின்றது என்றார். மேற்படி கலந்துரை யாடலில் இலங்கையில் இனவாதத்திற்கும் பாரபட் சத்திற்கும் எதிரான அமைப்பின் நிர்வாகியும், சட்டத்தரணியுமான திருமதி நிமல்கா பொன்னாண்டோவும் பங்குபற்றி பத்திரிகை யாளர்களின் கேள்விகளுக்கு பதிலளித்தார். இங்கே காணப்படும் படங்களில் திரு. வாசுதேவ நாணயக்காரா, திரு. கரிகாலன், திருமதி நிமல்கா ஆகியோர் அமர்ந்திருப் பதையும் மாடிகிராஸ் அதிபர்கள், ஜெயா சந்திரா ஆகியோர் திரு வாசுதேவாவிற்கு பொன்னாடை போர்த்தி கௌரவிப்பதையும் காணலாம்.



ஜே.வி.பி. சிங்கள உறுமய போன்ற இனவாத சிங்கள அரசியல் ஸ்தாபனங்கள் விரைவில் தூக்கி எறியப்பட்டுவிடும். நாம் யு.என்.பி. யில் சில அரசியல் கொள்கைகளுக்கு எதிராக நாம் இருந்தாலும் அந்த அரசின் சமாதான முயற்சிகளுக்கு ஆதரவளித்து வருகின்றோம். காரணம் தமிழ் மக்களின் பிரச்சனைகள் தீர்க்கப்பட வேண்டும் என்ற எண்ணமே. இதே வேளை இனவாதிகள் சிங்கள மக்களாலும் விரைவில் நிராகாரிக்கப்படுவார்கள்.

இவ்வாறு நேற்று முன்தினம் ஸ்காபரோ மாடி கிராஸ் உணவக மண்டபத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாகாநாட்டில் கேள்விகளுக்கு பதிலளித்த பிரபல இடதுசாரி அரசியல்வாதியும் இலங்கை

ஈழத்தமிழினத்தின் விடுதலைப் போராட்ட வரலாறு

எஸ். ஆர். ராஜபாலன் (B.Sc.(Hons) Cey., Diploma in Accounting

அடிப்படை உரிமைகளை இழந்த ஈழத்தமிழர்களின் விடுதலைப் போராட்டங்கள் கடந்த 25 வருடங்களாக புதிய பரிமாணம் பெற்று வந்துள்ளன. எனினும் 16ம் நூற்றாண்டில் இலங்கைத் தீவு போர்த்துக்கேயர்களால் கைப்பற்றப்பட்ட காலம் தொடக்கம் தமிழினத்திற்கு எதிரானஇனவாத நடவடிக்கைகள் ஆரம்பமாகின என்பது குறிப்பிடத்தக்கது.

1505ம் ஆண்டு முதல் இலங்கைத் தீவில் இடம்பெற்ற பிரதான நிகழ்வுகளின் தொகுப்பான இந்த வரலாற்றுத் தொடரின் மூன்றாவது பாகமாக, இலங்கை சுதந்திரம் பெற்றது முதல் ஈழவிடுதலைப் போராட்டம் ஆரம்பித்த காலம் (1948- 1976). இடம் பெற்ற பிரதான நிகழ்வுகளின் தொகுப்பு தற்போது பிரசுரிக்கப்படுகிறது.

அதனைத் தொடர்ந்து இறுதிப் பாகமாக ஈழப்போர் 1,2,3) தற்போதைய சமாதான நடவடிக்கைகள் பற்றிய தகவல் தொகுப்பு பிரசுரமாகவுள்ளது.

ஈழத்தமிழர் அனைவருக்கும் உபயோக மாகவுள்ள இந்த வரலாற்று தொடரை உங்கள் முன்பாக சமர்ப்பிப்பதில் உதயன் மகிழ்ச்சி யடைகின்றது - பிரதம ஆசிரியர்

பாகம்-3

சென்ற வாரத் தொடர்ச்சி

அதனையடுத்து நாடு பூராவும் இனக்கலவரம் பரவி 150 தமிழர்கள் கொல்லப் பட்டதுடன் தமிழ் மக்களின் வதிவிடங்கள் சொத்துக்கள் என்பன தீக்கிரையாக்கப்பட்டன. பிரதமர் பதவியைப் பெறுவதற்காக பண்டாரநாயக்கா ஏற்கனவே தூண்டிவிட்ட இனவெறியின் விளைவாக ஏற்பட்ட இந்த இனக்கலவரம் அடுத்த பல தசாப்தங்களில் ஏற்படவுள்ள பாரிய அளவிலான கலவரங்களுக்கான முன்னோடியாக அமைந்தது.

1956 ஆகஸ்ட்: தமிழரசுக் கட்சித் தலைவர் திரு. எஸ். ஜே.வி. செல்வ நாயகம் தலைமையில் திருமலை நகரில் கூடிய தமிழ்ப் பிரதி நிதிகள் இலங்கைக்கு சமஷ்டி முறையை நிறைவேற்றி தமிழ் மக்களை தமிழ் மக்களே ஆளக்கூடிய சுயநிர்ணய அமைப்பை இலங்கை அரசு உருவாக்க வேண்டும் என முடிவு எடுத்தனர். அத்துடன் இன்னும் ஒரு வருடத்தினுள் அரசு இதனை செயற்படுத்தாவிடில் தொடர்ச்சியாக சத்தியாக்கிரகம் நடத்தபப்டும் எனவும் அறிவிக்கப்பட்டது.

1957 யூலை 26. : திருமலை மகாநாட்டின் காரணமாக ஏற்பட்ட அரசியல் மாற்றங்களையடுத்து பிரதமர் பண்டாரநாயக்கா தந்தை செல்வாவுடன் ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்தினார். இந்த ஒப்பந்தத்தின்படி இலங்கையில் பிராந்திய சபைகள் அமைக்கப் படுவதுடன் தமிழ் மக்களுக்கு தனியான பிராந்திய சபை அமைக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டது.

அதே வேளை தமிழர்களுக்கான பிராந்திய சபை, தமிழ் மொழி மூலம் நிர்வாகம் நடத்தவும், குடியேற்றம், விவசாயம், கல்வி என்பவற்றிற்கான செயற்பாடுகளை நிறைவேற்றும் அதிகாரம் கொண்டதாக இருக்கும் எனவும் அறிவிக்கப்பட்டது.

1957 ஒக்டோபர் 4 : பண்டா- செல்வா ஒப்பந்தத்தை எதிர்த்து ஜே.ஆர். ஜெயவர்த்தனா தலைமையில் கொழும்பில் பாராளுமன்றத்தின் முன்பு காலிமுகத் திடலில் இருந்து கண்டியை நோக்கி பாத யாத்திரை மேற்கொள்ளப்பட்டது. எனினும் கம்பஹாவில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியினரின் எதிர் நடவடிக் கைகளால் இந்த பாதயாத்திரை இடைநிறுத்தம் செய்யப்பட்டது.

1958 பெப்ரவரி பிரதமர் பண்டாரநாயக்காவுக்கும் தமிழரசுக் கட்சியினருக்கும் இடையில் கருத்து முரண்பாடுகள் உருவாக ஆரம்பித்துவிட்டது என்பதை உணர்ந்த அவரது அரசியல் எதிரிகள் இச்சூழலை தமக்கு சாதகமாகப் பயன்படுத்த ஆரம்பித்தனர்.

பண்டாரநாயக்காவின் அமைச்சரவையில் சுகாதார சேவைகள் அமைச்சராக இருந்த திருமதி விமலா விஜயவர்த்தனாவின் தலைமையில் ஏராளமான பௌத்த பிக்குகள் பிரதமரின் உத்தியோகபூர்வமான வதிவிடத்தின் முன்பாக முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

1958 ஏப்பிரல்: இதே சமயம் அரசின் மற்றுமொரு அதிர்ச்சி நடவடிக்கையாக நாடு முழுவதிலும் அனைத்து வாகனங்களிலும் சிங்கள் சிறீயை பொறிக்க வேண்டும் என மோட்டார் வாகனத் திணைக்களம் உத்தரவு பிறப்பித்தது. அதுவரை இலங்கைத் தீவில் வாகனங்களுக்கு CEYLON என்ற பெயரில் உள்ள எழுத்துக்களான CE, CY, CN, EN, CL எழுத்துக்களுடன் ஆரம்பித்து பல்வேறு இலக்கங்களுடன் இணைந்த வாகன அனுமதி தகடுகளே பயன்படுத்தப்பட்டன. (தொடரும்)



DR. ILLANGO & ASSOCIATES
Dental Office

BRACE FOR A GREAT SMILE

பல் சிகிச்சையில் சகல துறைகளிலும்
எமது சேவை

DR. ILLANGO & ASSOCIATES

Dr. M. ILLANGO
B.D.S. Dip. Orth. (Oslo), General Practitioner Mainly Orthodontics
பற்களை ஒழுங்குபடுத்தும் பல் வைத்தியர்

Dr. SABAPATHY RAVEENDRAN
B.D.S, M.S, F.D.S.R.C.S(Eng.), General Practitioner

Dr. ALI ADIBFAR
D.D.S, M.D, F.R.C.D(C) , Plastic Surgeon

Dr. MEHRAN MOJGANI
D.D.S, Dip. Perio, Gum Specialist பல்முரசு வைத்திய நிபுணர்

Dr. JANAKI ILLANGO
B.D.S. குடும்ப பல் வைத்தியர்

Dr. FELOMINA NOLASCO
D.D.S. குடும்ப பல் வைத்தியர்

Dr. PADMAJA KONGARA
B.D.S. குடும்ப பல் வைத்தியர்

SCARBOROUGH OFFICE
3852 Finch Ave. East, Units 204, 303
Scarborough, ON
(416) 292-7004

MISSISSAUGA OFFICE
3025 Hurontario St., # 102
Mississauga, ON
(905) 270-7844

திருகோணமலை நலன்புரிச் சங்க கோடைகால ஒன்றுகூடல்

திருகோணமலை நலன்புரிச் சங்கத்தின் முதலாவது கோடைகால ஒன்று கூடல் ஜூலைமாதம் 14ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணி முதல் மாலை 6.00 மணிவரை விக்டோரியா பாக் அன்ட் டான்பொத் சந்திப்பிற்கு அருகாமையிலுள்ள டாவ்ஸ் வீதியில் அமைந்திருக்கின்ற ரெய்லர் கறீக் பாக் ஏரியா ஏயில் நடைபெறவுள்ளது. அனைத்து வயதினருக்கமான விளையாட்டுப் போட்டிகள் மற்றும் பல்சுவை அம்சங்கள் ஆகியன இடம்பெறவுள்ளன. இவற்றில் கலந்து கொள்ளவுள்ள சிறார்களின் பெற்றோர் அல்லது பாதுகாவலர் அவர்களின் பெயர்களை முன் கூட்டியே பதிவு செய்யுமாறு கேட்டுகொள்ளகின்றார்கள். மேலதிக தொடர்பகளுக்கு: 416 569 4017 416 460 7248 416 525 6793 416 754 6645

பிரம்டன் நகரில் விரைவில் புதுப் பொலிவுடன் எஸ் ரீ. பி சுப்பர் மார்க்கட்

பிரம்டன் மாநகரில் தமிழ், சிங்கள மக்கள் மட்டுமல்லாது பிறநாட்டு மக்களினதும் அத்தியவசியத் தேவைகளைப் பூர்த்தி செய்து எல்லோருடைய அபிமானத்தையம், பெற்ற எஸ். ரீ. பி. சுப்ப மார்க்கட் ஸ்தாபனத்தினர், மிகத் தாராள இட வசதியடன் கூடிய பதிய இடத்தினைப் பெற்றுள்ளார்கள். மக்களின் கொள்வனவிற்கு மிகச் சுலபமான இடவசதியையும், தெரிவிக்கேற்ற வகையில் தாராளமான பொருட்களின் சங்கமமும், விசாலமான வாகனத் தரிப்பிடமும், அமைந்த இந்தப் புதிய இடத்தின் உள்ளமைப்பு வேலைகள் முடிவடையும் தறுவாயில் இருப்பதாக எமது செய்தியாளர் அறிவித்துள்ளார்.

தற்போதைய விற்பனை நிலையத்தின் தோற்றமே இங்கு பிரசுரிக்கப்பட்டுள்ளது.

வேலை வசதிகளுக்காகவும், சொந்த இல்லங்களை வாங்கிக் கொண்டும் பிரம்டன் மாநகரில் அண்மைய காலங்களில் தமிழ் மக்களிற் பலர் குடியேறினர். இதனை அவதானித்த பேரானந்தன் ருத்திராணி தம்பதியினர் பெரு முயற்சி செய்து, முதன் முதலாக அங்கே எஸ். ரீ. பி. சுப்பர் மார்க்கட் என்ற இந்த ஸ்தாபனத்தை திறந்ததன் பலனாக தமிழ் மக்கள் பெரிதும் பயனடைநடதனர்.ஏனைய சமூகத்தவரது ஆதரவும் கிட்டவே பல்லின மக்களின் பலசரக்கு விற்பனையாளர்களாக மாறினார்கள். இன்று இடவசதியை விரிவாக்கம் செய்ய ஆயத்தமாகம் இவர்கள் தங்களுக்குப் பலசரக்கு இறைச்சி மற்றும், பிற வகைப் பொருட்களை விநியோகம் செய்யும் ஸ்தாபனங்களுக்கும், விளம்பரமாக்கும் நிறுவனங்களுக்கும், பல்லின வாடிக்கையாளர்களுக்கும், அவர்கள் தரும் ஆதரவிற்கும் நன்றி கூறுகின்றார்கள்.

கனடா வாழ் திருநெல்வேலி மக்களின் ஒன்று கூடல்

கனடா வாழ் திருநெல்வேலி மக்களுக்கான ஒன்றியத்தை அமைக்க எடுத்த நடவடிக்கையின் பயனாக, ஒன்றுகூடலையும் கலந்துரையாடலையும் நடத்த ஏற்பாடாகியுள்ளது. இதன் முக்கிய நோக்கம் கனடா வாழ் திரு நெல்வேலி மக்கள் ஒன்றிணைந்து செயற்படுவதற்கான அமைப்பொன்றினை உருவாக்குவதே ஆகும். இவ் ஒன்று கூடல் ஜூலை மாதம் 07ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.59ற்கு இலக்கம் 20 Nugget Ave Unit 01 ஸ்காபரோவில் அமைந்துள்ள நல்லூர் கந்தன் ஆலய மேல் மாடியில் நடைபெறும். இங்கு வாழும் திருநெல்வேலி மக்கள் ஒவ்வொருவருடனும் தனித்தனியாகத் தொடர்பு கொள்ள முடியாதிருப்பதால் திருநெல்வேலி மக்கள் அனைவரும் தொடர்பு கொள்ளுமாறும் உங்களுக்கு தெரிந்த திருநெல்வேலி மக்களை அழைத்து வருமாறும் கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள். இந்த வைபத்தில் ஒன்றியத்திற்கான அமைப்புக்குழு உருவாக்க ஆலோசிக்கப்பட்டுள்ளது. மேலதிக தொடர்புகளுக்கு: திரு. ந. நித்தி 416 439 5215, திரு. குலம் 416 287 8416, திரு. விவேகானந்தன் 905 946 2225, திரு. எஸ். திருச்செல்வம் 416 920 9250, திரு. ஆர். என். லோகேந்திரலிங்கம் 416 752 1524, திரு. சிவா. 416 2816084, திரு.நரேஸ் 416 283 4264, திரு. பாலா சிவா 905 472 2977 திரு. விவேகானந்தன் 416 287 9516

இடமாற்றம் பற்றிய அறிவித்தல்

Family Practice and Walk in Clinic

உங்களுக்கு மேலதிக வசதிகளுடன் சேவை செய்ய எங்கள் அலுவலகம்

No. 3430 Finch Avenue East

என்ற முகவரிக்கு

Finch - Warden Walk in Medical Clinic

என்ற பெயரில்

ஜூலைமாதம் 2ம் திகதி முதல் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

அலுவலக நேரங்கள்

திங்கள் முதல் வெள்ளி வரை

காலை 09.30 - இரவு 09.00

சனி, ஞாயிறு

காலை 09.00 - பிற்பகல் 03.00

உங்கள் நலனில் அக்கறையுள்ள

Dr. T. நித்தியலக்ஷ்மி MBBS, CCFP

Dr. S. மணிவண்ணன் MD, CCFP

Dr. V. விஜயரட்ணம் MD, FRCPC

தொலைபேசி இலக்கம்

416 496 1990

இன்று வரை நீங்கள் தந்து வரும் ஏகோபித்த ஆதரவிற்கு எங்கள் உளங்கனிந்த நன்றிகள்.

ரவி தமிழ்வாணன் மீண்டும் கனடா வந்துள்ளார்.

சென்னை மணிமேகலைப் பிரசுர நிலைய அதிபரும் அமரர் தமிழ்வாணணின் புதல்வருமான திரு. தமிழ்வாணன் தனது துணைவியார் சகிதம் மீண்டும் கனடா வந்துள்ளார். கனடாவில் ஸ்காபரோ, ரொறன்ரோ, ஒட்டாவா, மொன்றியல், வன்கூவர் ஆகிய நகரங்களில் இவரது புத்தகக் கண்காட்சியும், விற்பனையும் இடம்பெறவுள்ளன. அத்துடன் எதிர்வரும் 21ம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஸ்காபரோ அட்லாண்டா மண்டபத்தில் நடைபெறவுள்ள தூரமும் துயரமும் (சிறுகதைத் தொகுதி), வெளிச்ச அழைப்புக்கள் (கவிதைத் தொகுதி) ஆகிய நூல்களின் வெளியீட்டு விழாக்களிலும் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுவார்.

உதயன் தொடர்புகளுக்கு

Telephone - 416 752 1524

Fax - 416 7526703

Website - www.uthayan.ca

E-Mail - uthyan66@hotmail.com



STRATHY AUTO CLINIC

ஜப்பானிய, அமெரிக்க வாகனங்களின் சகல திருத்த வேலைகளுக்கும் நீங்கள் நாடவேண்டியவர்கள்

Brake, Tune ups, Muffler, Tire works, Mechanical & Electrical Repairs and more...

416-755-6700

1960 Lawrence Avenue East, Scarborough, ON, M1R 2Z1

CASTROL OIL CHANGE $18.99

அரபாத்தை பதவி இறக்கக் கோருவதற்கு புஷ்ஷிற்கு என்ன அதிகாரம் இருக்கின்றது?

"பலஸ்தீன அதிபர் யசீர் அரபாத் பதவி இறக்கப்படவேண்டும் என்பது ஜனாதிபதி புஷ்ஷினது பிந்திய "பிதற்றல்" ஆகும். இவ்வாறு கூறுவதற்கு அவருக்கு என்ன அதிகாரம் இருக்கின்றது என்பதே இஸ்லாமிய உலகின் கேள்வியாக இருக்கின்றது. அரபு நாடுகளை குறிப்பாக முஸ்லிம் களை ஆத்திரம் அடையச் செய்யும் கூற்றுக்களை அடுத்தடுத்து வெளியிடுவ தில் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் போகின்ற போக்கைப் பார்த்தால் கின்னஸ் சாதனை படைத்து விடுவார்போல் தெரிகின்றது.

மத்திய கிழக்கு சம்பந்தமான அமெரிக்க ஜனாதிபதியின் கொள்கைப் பிரகடனம் பெரும் ஆவலாக எதிர்பார்க்கப்பட்டது. சர்வதேச ஊடகங்கள் இந்தக் கொள்கைப் பிரகடனத்துக்குப் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தி இருந்தன. மத்திய கிழக்கு விவகாரத்தில் அமெரிக்கா ஏன் கொள்கைப் பிரகடனம் செய்ய வேண்டும்? மத்திய கிழக்கின் தலையெழுத்தை அமெரிக்காதான் தீர்மானிக்க வேண்டுமா? என்ற கேள்விகள் இங்கு எழுகின்ற போதிலும் அவற்றுக்கு விடைகாண்பதை இப்போதைக்கு ஒத்திவைப்போம்.

மத்திய கிழக்கு விவகாரம் குறித்து ஜோர்ஜ் புஷ் என்ன சொல்லி இருக்கின்றார்? அவரின் கூற்று ஏற்படுத்தியுள்ள தாக்கம் என்ன? என்பதை மட்டும் இப்போதைக்குப் பார்ப்போம். கடந்த 25ஆம் திகதி ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் வெள்ளை மாளிகையில் "ரோஸ் கார்டனில்"நிகழ்த்திய 16 நிமிட நேர உரை இன்று சர்ச்சைக்குரிய ஒருவிடயமாக உலக அரங்கில் ஆராயப் பட்டு வருகின்றது. மத்திய கிழக்கில் பலஸ்தீன மக்கள் எதிர்பார்க்கின்ற அமைதி கிடைக்க வேண்டுமானால் அவர்களுக்கு தனியான ஆட்சி அதிகா ரங்கள் கிடைக்க வேண்டுமானால் அவர்களின் அபிலாஷைகள் பூர்த்தியாவ தற்கு அமெரிக்க ஆதரவு தேவையானால் பலஸ்தீனத் தலைமைத்துவத்தில் மாற்றம் செய்யப்பட வேண்டும் என்பதே ஆகும். இதைக்கூற அவர்யார்?

இன்னும் 18 மாதங்களுக்குள் இந்த மாற்றம் செய்யபட்டாக வேண்டும். பயங்கரவாதத்தோடு இணங்கிப்போகாத ஒரு புதிய தலைமை பலஸ்தீனத்தில் ஏற்படுத்தப்பட வேண்டுமென அவர் நிபந்தனை விதித்துள்ளார். புஷ்ஷின் இந்த உரையில் வெளிப்படையாக அவர் யஸர் அரபாத் குறித்து எதுவும் குறிப்பிடவில்லை என்பது உண்மை. ஆனால் பலஸ்தீனர்கள் யஸர் அரபாத்தை நம்பக்கூடாது என்பதும் அவரை பதவியில் இருந்து தூக்கி எறிய வேண்டும் என்பதும்தான் அவரின் கூற்றுக்கான சரியான விளக்கம் என்பதை புரிந்துகொள்ளாதவர்கள் எவரும் இருக்க முடியாது. யஸர் அரபாத்தை ஏற்கனவே தீர்த்துக்கட்டத் தவறியமை தான்விட்ட பெரும் தவறு என்று இஸ்ரேல் பிரதமர் ஏற்கனவே பகிரங்கமாக ஒருமுறை குறிப்பிட்டிருந்தார். இப்பொழுது அவர் தூக்கி எறியப்படவேண்டுமென ஜோர்ஜ் புஷ் கோரிக்கை விடுக்கின்றார். யஸர் அரபாத்தின் தலைமையை நம்பி பலஸ்தீன மக்கள் ஏமாந்துவிட்டார்கள் என்றும் அரபாத் தனது மக்களுக்கு சரியான தலைமையை வழங்காமல் அவர்களுக்கு துரோகமிழைத்துவிட்டார் என்றும் ஜோர்ஜ் புஷ் ஏற்கனவே பல பொன்மொழிகளை உதிர்த்திருந்தமை யும் இங்கு நினைவூட்டத்தக்கதாகும். இந்தக் கூற்றுக்களை எல்லாம் ஒட்டுமொத்தமாகச் சேர்த்துப் பார்க்கின்றபோது பலஸ்தீனத் தலைவர் அரபாத் அமெரிக்காவுக்கும் இஸ்ரேலுக்கும் எந்தளவுக்கு வேண்டப்படாத ஒரு நபராக ஆகிவிட்டார் என்பது நன்கு புலனாகின்றது.

ஆனால்அரபாத் ஒன்றும் ஜோர்ஜ் புஷ்ஷைப்போல் ஜனாதிபதி ஆனவர் அல்ல. 1996ம் ஆண்டு இடம்பெற்ற பலஸ்தீன சுயாட்சிப் பகுதிக்கான பலஸ்தீன அதிகார சபையின் தேர்தலில் 88%மான பலஸ்தீனர்கள் அரபாத்துக்கு வாக்களித்து அவரை தமது தலைவராகத் தெரிவு செய்துள்ளனர். அரபாத்தின் இன்றைய ஆளுமை ஒஸ்லோ உடன்படிக்கை யை நம்பி அமெரிக்காவிடமும் மேற்குலகிடமும் அவர் சோரம் போனமையும் இன்றைய பலஸ்தீனம் அவரின் கட்டுப்பாட்டில் இருக்கின்றதா? பலஸ் தீனத்தை தொடர்ந்து அவரால் தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்க முடியுமா? என்பதெல்லாம் தீவிரமாக ஆராயப்பட வேண்டிய விடயங்கள். அவை ஒருபுற மிருக்க பலஸ்தீன ஒருமைப்பாட்டின் சின்னமாகவும் அரபாத் இன்னமும் இருக்கின்றார் என்பதையும் அரபுலகில் அவருக்கு இருக்கின்ற மரியாதை, செல்வாக்கு சர்வதேச அரங்கில் அவருக்குள்ள இடம், உலகில் அடக்கி ஒடுக்கப்பட்ட சக்திகள் அவர்மீது கொண்டுள்ள பேராதரவு என்பன மறுக்கப்பட முடியாத உண்மைகளாகும்.

பலஸ்தீன விவகாரத்தை மேற்குலகும் அமெரிக்காவும் கையாண்ட விதத்தாலும் மாறி மாறி பதவிக்கு வந்த சியோனிஸ அரசுகளின் எல்லைமீறிய கெடுபிடிகளாலும் படுகொலைகளாலும் இன்று பலஸ்தீனத்தில் தீவிரவாத சக்திகளின் கைகள் மேலோங்கியுள்ளன. பயங்கரவாதம் அங்கு தலைவிரித்தாடுகின்றது. ஆனாலும் அரபாத்தை அந்தமக்கள் இன்னமும் விரும்புகின்றனர். ஜோர்ஜ் புஷ்ஷின் உரையால் ஆத்திரமடைந்த அஹ்மத் அஹ்லேஷ் என்ற ஒரு பலஸ்தீன ஆசிரியர் ராய்ட்டர் செய்தி சேவைக்கு இது குறித்து கருத்துத் தெரிவிக்கையில் "பித்துப்பிடித்த ஒரு பலவீனமான பேர்வழியின் சூற்றே இது. அமெரிக்க மக்கள் தங்கள் தலைவரை தெரிவு செய்வதில் தவறிழைத்துவிட்டனர். அவர்கள் புஷ்ஷைவிட சிறந்த ஒருவரை தலைவராகப் பெற்றிருக்கலாம்" எனக் கூறியுள்ளார். இதே பாணியில் பல்வேறு மட்டங்களிலும் உள்ள பலஸ்தீனர்கள் தமது கருத்துக்களைத் தெரிவித்துள்ளனர். பலஸ்தீன மக்கள் மட்டுமல்ல ஜோர்ஜ் புஷ்ஷின் இந்தக் கூற்றை சர்வதேச மட்டத்தில் எந்த ஒரு நாடும் இதுவரை வரவேற்கவில்லை. இந்தக் கூற்றைத் தெரிவித்த கையோடு அவர் குழு -8 மாநாட்டில் கலந்துகொள்ள கனடா புறப்பட்டுச் சென்றார். இந்த மாநட்டில் பலஸ்தீன இஸ்ரேல் முரண்பாடு குறித்து தலைவர்கள் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்ட போதிலும் ஜோர்ஜ் புஷ்ஷின் கூற்றுக்கு எந்த ஆதரவும் கிட்டவில்லை. ஆனால் புஷ் மட்டும்தான் பலஸ்தீனர்கள் தமது தலைவரை மாற்றிக்கொள்ளத் தவறினால் அவர்களுக்கு அமெரிக்கா நிதி உதவிகளைக்கூட வழங்காது என அடம் பிடித்துள்ளார். பலஸ்தீன மக்கள் அரபு உலகத் தலைவர்கள் என முஸ் லிம் உலகம் ஜோர்ஜ் புஷ்ஷின் கூற்றால் மீண்டும் ஆத்திரமடைந்துள்ளது. இதற்குக் காரணம் பலஸ்தீனப் போராட்டத்தில் அரபாத்தின் பின்னணியும் பங்க ளிப்பும்தான். இந்த இடத்தில் அது குறித்து சுருக்கமாக விளங்கிக்கொள்வது சிறப்பானதாகும். அரபாத் 1929ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் நான்காம் திகதி பிறந்தார். இவர் கய்ரோவில் பிறந்ததாக சிலரும் ஜெருஸலத்தில் பிறந்ததாக வேறு சிலரும் கூறுகின்றனர். ஆனால் ஒரு செல்வந்த வர்த்தகக் குடும்பத்தில் பிறந்த அரபாத் வளர்ந்தது என்னவோ கய்ரோவிலும் ஜெருஸலத்திலும்தான்.

1947இல் ஜெருஸலத்திலுள்ள பிரதம முஸ்லிம் மதப்பெரியார் ஒருவருடன் இணைந்து யூதர்களுக்கு எதிரான போராட்டத்தில் குதித்தார். 1948இல் இஸ்ரேல் என்ற நாடு சட்டவிரோதமாகத் தோற்றுவிக்கப்பட்டதையடுத் து மீண்டும் கய்ரோவுக்குச் சென்று பொறியியல் துறையில் படிப்பை மேற் கொண்டார்.1956இல் எகிப்திய இராணுவத்தில் இணைந்த அரபாத் சூயஸ் கால் வாய் சம்பந்தமான போராட்டத்தில் இஸ்ரேலுக்கு எதிராகப்போரிட்டார். இதே ஆண்டில் எகிப்திலிருந்து வெளியேறி குவைத்தில் குடியேறிய அரபாத் அங்கு யூத அரசுக்கு எதிரான போராட்டத்தில் ஈடுபடுவதற்கான 'அல் பதாஹ்' அமைப் பைத் தோற்றுவிக்கும் ஆரம்ப பணிகளை மேற்கொண்டார். தொடரும்.....

உங்கள் பிரயாணச் சீட்டுகளை குறைந்த விலையிலும் சிறந்த சேவையுடனும் பெற்றுக் கொள்ள ஒரே நிறுவனம்

CANADIAN EXECUTIVE TRAVELS LTD.

Colombo	$1275.00	London	$499.00
India	$1499.00	Paris	$599.00
Singapore	$1299.00	Frankfurt	$629.00
		Zurich	$739.00
Colombo to Toronto one way	$998.00	Amsterdam	$629.00
		Vancouver	$289.00
		Edmonton	$259.00
		Montreal	$159.00
		New York	$289.00

CANADIAN EXECUTIVE TRAVELS LTD.

2555 Eglinton Ave. E, Suite 103, Scarborough, ON. M1K 5J1

Tel: 416-264-2193

உங்கள் வீட்டுச் சமையல்களிலும்
விருந்துகளிலும் கட்டாயம் இருக்கவேண்டியது.

So Soya+

இரசாயனக் கலப்பற்ற சோயா உணவு

Tel : 416-293-6555
Fax: 416-293-6459

Not a Genetically Engineered Product

Web: www.so-soyaplus.com
e-mail: info@portello.com

கனடிய நண்பன்
CANADIA NANPAN

யாழ் மண்ணின் ஈடிணையற்ற முதலாவது ஆங்கில பாடசாலை யூனியன் கல்லூரி

க. பாலசுந்தரம் (B.A. SLEAS)
யூனியன் கல்லூரி முன்னாள் அதிபர்

யாழ்ப்பாணத்தின் மேன்மைக்கும் மண்வளத்திற்கும் அறிவியல் உயர்வுக்கும் பெரும் பணி ஆற்றிய புகழ்பூத்த கல்லூரிகளின் வரிசையிலே தெல்லிப் பழை யூனியன் கல்லூரிக்கு ஒரு மகத்தான தனித்துவமான பங்கு உண்டு. உலக மொழியாகிய ஆங்கிலத்தை தமிழ் ஈழ மண்ணில் விதைத்த முதல் கல்விகூடம் யூனியன் கல்லூரியாகும். வட அமெரிக்காவின் வடகிழக்கில் உள்ள நியூஜேசி மாகாணத்தில் இருந்து மதம் பரப்ப யாழ்ப்பாணம் வந்த அமெரிக்க திருச்சபையினரே 1816ம் ஆண்டு தெல்லிப்பழையில் யூனியன் கல்லூரியை முதலாவது ஆங்கிலப் பாடசாலையை ஆரம்பித்து வைத்தனர். அதன்வழி வந்த ஆங்கிலப் பாடசாலைகளின் ஒருமித்த பெரும் பணியின் அறுவடையே யாழ்ப்பாணம் பெற்ற முதன்மையும் கௌரவமுமாகும்.

இன்னுமோரு ஈடிணையற்ற உரிமையும் பெருமையும் தெல்லிப்பழை யூனியன் கல்லூரிக்கு உண்டு. பனை ஓலையில் எழுத்தாணி கொண்டு தமிழ் ஆவணங்கள் பதிவு செய்த காலம் அது. அக்காலத்தில உதயதாரகை என்ற தமிழப் பத்திரிகை யூனியன் வளாகத்தில் அமைந்த அச்சு எந்திரத்தில் பதிக்கப்பட்டு முதன் முதலில் 1841ம் ஆண்டு வெளிவந்தது. அதுதான் அச்சு எழுத்தில் வெளிவந்த முதலாவது தமிழ் ஆவணம். அந்தப் பத்திரிகை 130 ஆண்டுகள் தொடர்ந்து வெளிவந்து சாதனை புரிந்தது. அந்த வகையிலே தமிழ் நூல் அச்சுப் பதிப்பு வரலாற்றிலே தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் சேவை பெருமையாகப் பேசப்படுகின்றது.

யூனியன் கல்லூரியை நாட்டி நீரூற்றி வளர்த்தவர்கள் அமெரிக்க திருச்சபையைச் சேர்ந்த மதபோதகர்கள். ஆங்கிலத்தை மட்டுமல்லாது தமிழ் மொழியையும் வளர்த்தார்கள். அந்த வகையிலே அரும்பணியாற்றிய பாடசாலை முல்வர்களே சங்கைக்குரிய டிக்சன், சிமித், உவாட் என்னும் மூன்று மேற்குலக தெய்வத் தொண்டர்கள்.

இவர்களை அடுத்து அதிபராக வந்த சகலதுறை விற்பன்னர் ஐ.பி. துரைரத்தினம் அவர்களே யூனியன் கல்லூரியின் முதலாவது இலங்கை அதிபராவார். இன்றைய யூனியன் கல்லூரியை வடிவமைத்து படிமம் கொடுத்த சிற்பி இவரே. இவர் மாணவர் தொகையை 750க்கு உட்படவே வைத்திருந்து ஆற்றிய பெரும் தொண்டின் விளைவே யூனியன் கல்லூரியின் வளர்ச்சியும் நீண்டு நிலைத்த பெருமையும் கல்லூரியில் இன்றும் தொடர்ந்தும் போற்றிப் பேணி வருகின்ற தனித்துவமான பாரம்பரியங்களாகும். அதிபர் துரைரத்தினம் யூனியனைக் கட்டிவளர்த்து பதிவு செய்த சாதனைகளை தொடர்ந்து பேணி நிலைக்க வைத்தவர்கள் அதிபர்கள் திரு. கிருஷ்ணபிள்ளை, திரு. நடராசா என்னும் கனவான்களாவர்.

அதிபர் கிருஸ்ணபிள்ளை அவர்களே முதன் முதலில் சரஸ்வதி பூசையை யூனியன் கல்லூரியில் நடத்தியவராவர். இவர் காலத்திலேயே யூனியன் கல்லூரிக்கு புதிய இலட்சினையை அறிமுகஞ் செய்யப்பட்டது. அதிபர் நடராசா அவர்களே முதல்முதலில் ஹொக்கி விளையாட்டை யூனியன் கல்லூரிக்கு அறிமுகஞ் செய்து வைத்தவராவர். இவரது காலத்தில் உதைபந்தாட்டம் உச்ச வளர்ச்சி கண்டது.

நான் யூனியன் அதிபராகக் கடமையாற்றிய ஒரு தசாப்த காலத்தை கண்முன் நிறுத்திப் பார்க்கிறேன். ஆரம்பப் பாடசாலை அதிபர்கள் திரு. சிவனேசன், பின்னர் திரு. சிவலிங்கம் ஆகியோர் தலைமையில் தந்தை செல்வா தொடக்க நிலைப்பள்ளியை மைந்தனாகக் கொண்ட யூனியன் கல்லூரியின் மறுமலர்ச்சிக் காலம் அது. புதிய கட்டட பிற வசதிகளோடு செழித்து வளர்ந்து பூத்து பழுத்து சொரிந்த காலம். சிறந்த புலமைப்பரிசில் பெற்ற வசதிபடைத்த மாணவர்கள் புகழ்பூத்த கல்லூரிகளுக்கு தாவும் வழமைமாறி சிறந்த நல்ல மாணவர்கள் யூனியனைத் தேடிவந்த காலம். 300த்துக்கு மேற்பட்ட மாணவர்கள், 100க்கு மேற்பட்ட ஆசிரியர்கள். கல்லூரி முடிந்து கால்மணி நேரம் தெல்லிப்பழைச் சந்தி வெண்பட்டாடை போர்த்தி நிற்கும். கல்விச் சேவையில் முதல்நிலைப் பாடசாலையாக கணிக்கப்பட்ட பொற்காலம் அது. தெல்லிப்பழை யூனியன் கல்லூரி வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர்கள் இருவரையும் அக்கால கட்டத்தின அதி சிறந்த நிர்வாகிகள், என்று Saturday Review பத்திரிகை அதன் ஆசிரிய தலையங்கத்தில் புகழாரம் சூட்டியிருந்தது. 1986ம் ஆண்டு கல்விப் பொதுத்தராதரப் (உயர்) பரீட்சையில் நா. சுகந்தன் 374 புள்ளிகள் பெற்று சாதித்த சாதனை இதுவரை முறியடிக்கப்படாத இமயமலைச் சாதனை. அவர் புலமைப் பரிசில் பெற்று பிரித்தனில் உள்ள கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம் சென்று அங்கும் இறுதித் தேர்வில் முதன் மாணவனாக வந்து ஏற்றிய வெற்றிக்கொடி யூனியன் கல்லூரி வளாகத்தில் என்றும் பறக்கும்.

95 சதவீத இந்து மாணவர்களின் வசதியீனங்களைக் கருத்தில் கொண்டு 1986ம் ஆண்டு கல்லூரி வளாகத்தில் புவனேஸ்வரி அம்பாள் ஆலயம் ஆகமவிதிப்படி கட்டப்பட்டது. மேலும் நடனம், நாடகம், சங்கீதம், சொற்பொழிவு, விவாதமேடை, கருத்தரங்குகள், இலக்கிய கூட்டங்கள், விழாக்கள், பரிசளிப்பு விழாக்கள், ஒன்றுகூடல்கள், மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் திருவிழா, இந்து சமயக் கொண்டாட்டங்கள், கிறிஸ்தவ சமயக் கொண்டாட்டங்கள் இல்ல விளையாட்டுப் போட்டிகள், ஹொக்கி, உதைபந்தாட்டம், வலைபந்தாட்ட விளையாட்டுப் போட்டிகள் என்று பல துறைகளிலும் உயர்ந்து ஒளிபரப்பிய யூனியன் கல்லூரியின் ஒரு தசாப்த பொற்கால வரலாற்றை கனேடிய புண்ணிய பூமியில் நின்று திரும்பிப் பார்க்கின்றேன். தேனாகத் தித்திக்கின்றது.

1990ம் ஆண்டு இடம் பெயர்ந்து இப்பொழுது மருதனாமடம் இராமநாதன் கல்லூரியின் புறவளாகத்தில் சுருங்கி நிற்கின்ற யூனியன் கல்லூரி மீண்டும் வானளாவிய விருட்சங்களின் செழுமை பொங்கிவழியும் நீண்டு பரந்த வசதிகள் நிறைந்த தெல்லிப்பழை வளாகத்துக்கு திரும்பி வரவேண்டும். அங்குள்ள கிறிஸ்தவ தேவாலயத்தின் மணி ஓசையும், புவனேஸ்வரி அம்பாள் ஆலயத்தின் மணி ஓசையும் சங்கொலியும் யூனியன் வளாகத்தில் மீண்டும் கேட்க வேண்டும். மாணவர்களின் ஆரவாரம் வானை முட்ட வேண்டும். அதுவே எனது தணியாத தாகம்.

யூனியன் கல்லூரி மீண்டும் ஒரு புகழ்பூத்த மறுமலர்ச்சி வரலாற்றை நீல வைடூரியத்தாலும் பச்சை மரகதத்தாலும் செய்ய வேண்டும். அதற்கு அனைத்துலகிலும் பரந்து வாழுகின்ற புலம்பெயர்ந்த பழைய மாணவர்கள் அயலவர்கள், நலன்விரும்பிகள் நிறைந்த மனத்தோடு அள்ளி வழங்க வேண்டும் என்று அன்போடு அழைக்கின்றேன். ★★★

AIR LINK Travel Ltd.
Your best choice for all destinations!
Air Canada
AIR FRANCE
BRITISH AIRWAYS
AIR-INDIA
GULFAIR
KOREAN AIR
KLM
Lufthansa
Emirates
KUWAIT AIR
SINGAPORE AIRLINES
Srilankan Airlines
416-292-6200
5200 Finch Ave. E, Suite 115,
Scarborough, ON

ஜனாதிபதி ஒரு பெண்ணாக இருந்தும் இலங்கைப் பெண்களின் நிலைமையை அவர் மேம்படுத்த முயலவில்லை

-சிங்கள பெண் எழுத்தாளர் கூறுகின்றார்

இலங்கையின் ஜனாதிபதியாக ஒரு பெண்மணி பணி புரிந்தும் இலங்கைப் பெண்களின் நிலைமையை மேம்படுத்த அவர் ஒருபோதும் முயலவில்லை. இது ஒரு கவலைக்குரிய விடயமே. இவ்வாறு பிரபல சிங்கள பெண் எழுத்தாளரும், பெண்நிலை வாதியுமான திலினா கூறியுள்ளார்.

இரண்டு சிறுகதை தொகுப்புகளுக்கும், ஒரு நாவலுக்கும் சொந்தக்காரர். சிங்கள வாரப் பத்திரிகையில் பணியாற்றிய அவர் தற்போது சுதந்திர பத்திரிகையாளராக பணியாற்றுகிறார். தனது பெண்ணிய கருத்துக்களால் சிங்கள சமூகத்தில் பல சர்ச்சைகளை ஏற்படுத்தியவர். பெண்கள் பிரச்சனை குறித்து பெரிதும் அக்கறை கொண்டுள்ள அவர் குறிப்பாக தமிழ் பெண்களின் பிரச்சனைகள் தம்மை பெரிதும் பாதித்துள்ளதாக தெரிவித்தார்.

அரசியல் குறித்தும், பெண்ணியம், இலக்கியம் குறித்தும் காத்திரமான கருத்துக்களை கொண்டுள்ள அவர் பெண்கள் அமைப்புக்களை விமரிசிக்கின்றார். பெண்ணியம் என்பது இன்று தவறான வார்த்தையாக கணிக்கப்படுகின்றது. பெண்ணியம் தொடர்பான தனது நூல்களை விற்க சந்தை வாய்ப்பில்லை என்று ஆதங்கப்படும் திலினவீரசிங்க பெண் எழுத்தாளர்களை ஊக்குவிக்க எந்த பெண்கள் அமைப்புமு முன்வருவதில்லை என்று கண்டனம் தெரிவித்தார். சமகால பெண்கள் பிரச்சனைகள் அரசியல் ஈடுபாடு குறித்து அவர் வழங்கிய செவ்வி கீழே தரப்படுகின்றது.

கேள்வி: உங்கள் பார்வையில் பெண்ணியம் என்றால் என்ன? இது மேற்கத்தேய கலாசாரம் என புறக்கணிக்கப்படுகின்றது. இது பற்றி உங்கள் கருத்து என்ன?

பதில்: வரலாறு முழுவதும் பெண்களுக்கு எதிரான அடக்குமுறைகள் இடம்பெற்றுக் கொண்டே இருக்கின்றன. பெண்ணியம் என்பது மேற்கத்தேய கலாசாரத்தின் பாதிப்பு என பரவலான கருத்து நிலவுகின்றது. ஆனால் பெண்ணியம் என்பது கீழைத்தேயத்திற்கும் உரியது. இந்து பாரம்பரியத்தில் பெண்களின் பிறப்பு துன்பம் என்றும் ஆண்கள் பிறப்பு சிறந்தது என்றும் கருத்து உள்ளது. இவ்வாறான சமூக மனப்பாங்குகள் பெண்களை அடக்கு முறைக்கு உட்படுத்தியுள்ளன.

எனினும், இந்த அனைத்துவித அடக்கு முறைகளுக்கும் எதிராக பெண்கள் மௌனமாக இருந்து விட்டனர்.

நான் பின்பற்றும் பௌத்த கலாசாரத்தில் பெண்களுக்கு முன்னைய காலப்பகுதிகளில் ஓரளவு சுதந்திரம் வழங்கப்பட்டிருந்தது. பெண்கள் சுதந்திரமாக செயற்பட துறவிகளாக மாறினர். இதனால் புத்த பகவான் வாழ்ந்த காலப்பகுதியில் பல பெண்கள் துறவிகளாக சேவையில் இணைந்து கொண்டனர்.

சீனாவில் சிறுமிகளின் கால்களில் குறுக்கு சப்பாத்துக்களை அணிவிக்கும் நடைமுறை காணப்படுகின்றது. இந்தியாவில் கருவில் உள்ள பெண் சிசுவை அழிக்க புதுப்புது இயந்திரங்கள் கண்டுபிடிக்கப்படுகின்றது. தற்போது சிறு தொகையை செலவு செய்யுங்கள் பிற்காலத்தில் அதிக தொகையை சேகரியுங்கள் என இந்த கருவிற்கு விளம்பரம் செய்யப்படுகின்றது. இவற்றுக்கு எதிராக போராடும் பொழுது பெண்களை தவறாக பேசுகின்றனர். 1800 களின் பின் பிரித்தானிய காலனித்துவத்தின் பயனாக வர்த்தக உறவுகளுடன் சிந்தனை பரிமாற்றம் நடைபெற்றது. இதனை அடிப்படையாக வைத்து பெண்ணியம் மேற்கத்தேய வரவு என்று தவறாக விளக்கமளிக்கப்படுகின்றது.

கேள்வி: பெண்களுக்கு உரிய வாய்ப்புக்கள் கிடைக்காததால் தான் அவர்கள் சில துறைகளில் பின்தங்கியுள்ளனர் என்பதை ஏற்றுக் கொள்கின்றீர்களா?

பதில்: நிச்சயமாக இங்கு ஒரு விடயத்தை குறிப்பிட வேண்டும். தந்தை வழி சமூக அமைப்பில் பெண்கள் எதிர்த்து போராடி ஆண்களுக்கு சரி சமமாக வாழ்ந்துள்ளனர். இந்த வரலாற்று உண்மைகளை ஆண்களால் எழுதப்பட்ட வரலாறுகள் புறக்கணித்து விட்டன. உதாரணமாக 17ம் நூற்றாண்டில் வாழ்ந்த சிறந்த பெண் கவிஞனான கஜமன் நோனா, ஆண் வேடமிட்டு விகாரையில் கல்வி கற்றுள்ளார். அதே போல் 2ம் இராஜசிங்க மன்னன் காலத்தில் வாழ்ந்த மடுவல்லிய திசாவே என்ற பெண் இந்திய போர்க்கலையை 12 வருடங்களாக ஆண்வேடமிட்டு கற்று ஆண்களால் மட்டுமே அன்று பெறக்கூடியதாகவிருந்த திசாவே என்ற பட்டத்தைப் பெற்றார்.

அடக்குமுறைகளும், கலாசார தளைகளும் நிலவிய அந்தக் காலப்பகுதியிலேயே பெண்கள் தமது திறமையை வெளிப்படுத்தியுள்ளனர். இது போல் பல உலக நாடுகளிலும் பெண்கள் எவ்வளவோ சாதனைகளை செய்திருக்கலாம்.

எனவே பெண்கள் முட்டாள்கள் அல்ல. அவர்கள் திறமைசாலிகள். ஆண்களை விட தன்னம்பிக்கை மிக்கவர்கள். உரிய வாய்ப்புக்களும், வசதிகளும் கிடைத்தால் பெண்கள் சாதனை படைப்பார்கள். துரதிஷ்டவசமாக இதற்கான வாய்ப்பை வரலாறு தரவில்லை.

கேள்வி: நீங்கள் ஒரு பெண்ணிய எழுத்தாளராகியதன் காரணம் என்ன?

பதில்: நான் வாழ்ந்த பௌத்த கலாசாரச் சூழலும் என்னுடன் பிறந்த (இரட்டைப் பிள்ளைகள்) தம்பி இந்த இரண்டு விடயங்களும் என்னை பெண்ணிய எழுத்தாளராக மாற்றியது. நான் பெண் என்பதால் எனது அனைத்து விடயங்களிலும் என் சுதந்திரம் மட்டுப்படுத்தப்பட்டது.

(தொடர்ச்சி 13ம் பக்கம் பார்க்க)

Canadian Tamil Youth Development Centre (CanTYD)

Job Posting (Full Time)

Job title: Program Coordinator

The Program Coordinator will work with CanTYD staff, volunteers, Board of Directors, relevant service sectors and others, to plan, organize and implement activities to enable the effective provision of the much needed services to Tamil youth in the GTA.

Experience/ Education:

The ideal candidate would have education and/or related experience in social service sector particularly in the field of youth development and program management. In addition, (s)he would have a clear understanding of the experiences of Tamil youth and their issues.

Responsibilities:

- Works with the project coordinators, staff and other volunteers to ensure success of the programs
- Hires and trains new staff members, supervises the youth outreach workers and leads all the youth projects
- Secures funding from various funding sources for CanTYD's youth development programs and produces reports requested by the funders
- Occasionally works with clients who have been referred through the justice system, schools, parents, friends and other agencies and provides informal counselling
- Advocates for youth and community issues to various decision makers in education, media, police and governments.
- Participates in various coalitions that focus on youth empowerment, development, crime prevention and gang intervention.
- Liaises with other agencies and institutions to make the service delivery efficient

Qualifications:

- Good understanding of issues faced by the Tamil youth in GTA
- Ability to interact with them informally and formally
- Excellent interpersonal, organizational and conflict resolution skills
- Awareness of settlement issues within a new immigrant community
- Fluency in Tamil and English is a must
- Culturally sensitive and aware of issues relating to Sri Lankan Tamils
- Ability to work with minimum supervision
- Access to computer and internet is a must
- Familiarity with CanTYD's programs and activities is an asset
- Valid license and car is an asset
- Management experience in a non-profit organizational setting will be an asset

Salary and hours of work: 35hrs/week. Salary would be decided based on the qualifications and experience. Salary Range: $30,000 to $36,000. Contract may be extended if required.

Application:

A copy of your resume and names of two referees who are able to comment on your professional abilities shall be sent. For each of the referees, provide his/her name, title, position, address, and telephone number so that we may contact them directly. A one-page typed document on why you consider yourself a suitable candidate for this position should be attached to the application. The above documents must be sent to us through email (in MS word format) or fax and received by **6:00pm, Wednesday, July 24th, 2002.**

FAX: 416 396 4522 **Email: coordinators@cantyd.org** **Phone: 416 396 4663**

We thank all applicants. However, only short-listed applicants will be contacted.

ஜனாதிபதி ஒரு பெண்ணாக இருந்தும் ...

(12ம் பக்கத் தொடர்ச்சி)

ஆண்களும், பெண்களும் இணைந்து வாழ்வதுதானமனித குல விருத்திக்கு உதவும். இந்த நிலைமையில் ஏன் இந்த பாரபட்சம்?

நான் கலவன் பாடசாலையில் படித்தபோது ஆண் பிள்ளைகள், பெண் பிள்ளைகள் மீது வன்முறைகளை பிரயோகித்தனர். இதனை ஒருவரும் எதிர்க்கவில்லை. பெண்பிள்ளைகளை அடித்தால் பரவாயில்லை என்ற கருத்தே இதற்குக் காரணம். அத்துடன் பௌத்த பாடசாலை என்றபடியால் கலாசார பாரம்பரியங்களின் பேரில் பெண்களின் ஆளுமைகள் சிதைத்து விடுகின்றனர். இந்த எண்ணங்களும் சிந்தனைகளும் என்னை எழுத்தாளராக்கியது. ஒரு பத்திரிகையாளராக கடமை வகித்த போது பெண் என்ற காரணத்தினால் பல அடக்குமுறைகளுக்கு உள்ளாகினேன். சில விடயங்களை எழுதவும், பேசவும் மட்டுமே எனக்கு அனுமதி கிடைத்தது. இந்த அனுபவங்கள் என்னை ஒரு பெண்ணிய எழுத்தாளராக மாற்றியது.

கேள்வி: உங்களின் மூன்று சிறுகதைத் தொகுதிகளிலும் பெண்ணியத்துடன் அரசியலும் கலந்துள்ளது. இந்த அரசியல் ஆர்வத்திற்கான காரணம் என்ன?

பதில்: நான் இலங்கையில் 20 வருடகாலமாக நீடிக்கும் கொடிய போரினால் மிகவும் பாதிக்கப்பட்டவள். குறிப்பாக பெண்களுக்கு ஏற்பட்ட பாதிப்புக்கள் இந்த யுத்தத்தில் ஏராளம். பாலியல் வல்லுறவு, கொலை என்று எத்தனையோ கொடுமைகளை பெண்கள் அனுபவித்து விட்டனர்.

கிரிஷாந்தி குமாரசாமி கொலை என்னுள் ஏற்படுத்திய பாதிப்புத்தான் நாந்துனை கெஹெனிய (இனம் தெரியாத பெண்) எனும் சிறுகதை. இதேபோல் அடையாள அட்டை எனும் ஒரு வியடம் தமிழர்களின் தன்மானத்தை பாதித்துள்ள விடயம் போன்று பல விடயங்கள் என் சிறுகதைகளில் கருவாக உள்ளன.

தமிழர்களின் இன்னல்களை நான் பெரிதும் உள்வாங்கியுள்ளேன். எனக்கு 13 வயதாக இருக்கும் போது யாழ்ப்பாணத்திற்கு என் தந்தை அழைத்துச் சென்றிருந்தார். அப்போது அங்கு சந்தையொன்றிலிருந்து ஒரு சோடி Hair Pin ஐ வாங்கினேன். அதை இன்னும் நான் பத்திரப்படுத்தி வைத்துள்ளேன். 1983ம் ஆண்டு இனக்கலவரம் ஏற்படுத்திய பாதிப்புக்கள் யாழில் இந்திய படை தமிழ் பெண்களுக்கு இழைத்த அட்டூழியங்கள் ஏற்படுத்திய பாதிப்புக்கள் என் படைப்புக்களில் வெளிப்படுகின்றமையை தவிர்க்க இயலவில்லை. மேலும் பெண்கள் அரசியல் பேச வேண்டும். அதற்கான முழு உரிமையும் பெண்களுக்கு உண்டு. இந்த உரிமையை நான் ஏன் இழக்க வேண்டும்.

கேள்வி: இலங்கையில் பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவம் குறித்து உங்கள் கருத்து என்ன?

பதில்: பிரதிநிதித்துவம் திருப்திப்படும்படி இல்லை. 1931 இல் இரண்டு பெண் உறுப்பினர்கள் அன்றைய பாராளுமன்ற ஆசனங்களை கைப்பற்றினர். இவர்கள் வாரிசு அடிப்படையில் இந்த பிரதிநிதித்துவத்தைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது. இன்று ஜனாதிபதியுடன் 11 பெண் பாராளுமன்ற உறுப்பினர்களாக உள்ளனர். 1931ம் ஆண்டு தொடக்கம் 2002 வரையிலான 70 ஆண்டு காலப்பகுதியில் பெண்களின் பிரதிநிதித்துவம் 8 ஆக அதிகரித்துள்ளது. ஆனால் இந்த 70 வருட காலப்பகுதியில் ஆண்களின் பிரதிநிதித்துவம் நூற்றுக்கணக்கில் அதிகரித்துள்ளது.

பொதுவாக தேசிய பிரதேச மாகாண, நகர மட்டத்தில் பெண்களின் பிரதிநிதித்துவம் 5 சதவீதத்திற்கும் குறைவானதாகும்.

இந்த ஒரு உதாரணம் போதுமானது. ஜனாதிபதி ஒரு பெண்ணாக இருந்த போதிலும், இலங்கையில் பெண்களின் நிலைமையை மேம்படுத்த அவர் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. தமது பொ.ஐ.மு. கட்சியில் கூட பெண்களுக்கு முக்கியத்துவம் வழங்க அவர் தவறிவிட்டார். இலங்கையில் நிலவும் வன்முறைகள் நிறைந்த அரசியல் கலாசாரம் பெண்களை தயக்கத்திலாழ்த்துகின்றது எனலாம்.

கேள்வி: இலங்கையில் பெண்களின் முன்னேற்றத்தை முதன்மைப்படுத்துவதில் பெண்கள் அமைப்புகளின் பங்களிப்பு எவ்வாறு உள்ளது என்று கருதுகிறீர்கள்.

பதில்: பெண்கள் அமைப்புகள் நிகழ்ச்சி நிரலின் அடிப்படையிலேயே செயற்படுகின்றன. பெண்கள் தினத்தை கொண்டாடுவது புத்தங்களை வெளியிடுவது, ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்வது, கருத்தரங்குகளை நடத்துவது, இவை தான் பெண்கள் அமைப்புகளின் ஆக்கபூர்வமான செயற்பாடுகள்.

இவற்றுக்கு அப்பால் சிந்தித்து செயற்பட பெண்கள் அமைப்புகள் தவறி விட்டன. பெண்களின் பிரச்சனைகள் குறித்து திட்டவட்டமான கொள்கைகள் அவற்றுக்குக் கிடையாது.

குறிப்பாக பெண்கள் அமைப்புகளுக்கு எதிரான நியாயமான விமர்சனங்களை ஏற்று நடத்த அவர்கள் விரும்பவில்லை. தூரதிஷ்டவசமாக ஈடுபாட்டுடனான பலமான பெண்கள் அமைப்புகள் இலங்கையில் இல்லை. சில பெண்கள் அமைப்புகள் ஆணாதிக்கத்திற்கு பக்கபலமாக இருக்கின்றன. பெண்களின் பிரச்சனைகளை தனிப்பட்ட வியடம் என ஒதுக்காமல் அரசியலாக மாற்ற பெண்கள் அமைப்புகள் முன்வர வேண்டும்.

கேள்வி: பெண்கள் தமது பிரச்சனைகள் உரிமைகளை சரிவர உணராமல் இருக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டு பற்றி...?

பதில்: பெண்கள் சகல விடயங்களிலும் பிரச்சனைகளை எதிர்நோக்குகின்றனர். ஆனால் இவற்றுக்கு எதிராக போராடாமல் தமது தலைவிதியை நொந்து அடங்கி விடுகின்றார்கள். பெண்களின் உரிமைப் போராட்டத்திற்கான தேவையை உணர வைக்க ஊடகங்கள் பெரும்பங்காற்றலாம். ஆனால், இந்த பங்கை ஊடகங்கள் சரிவர செய்வதில்லை. பெண்ணியத்தை கொச்சைப்படுத்தும் செயல்களிலேயே இவர்கள் ஈடுபடுகின்றனர். பெண்களுக்குள் மாற்றத்தை ஏற்படுத்த பெண்ணிய செயற்பாட்டாளர்கள், ஊடகங்கள், அரசியல்ச க்திகள் அனைத்தும் ஒன்றிணைந்து பணியாற்ற வேண்டும். புதிய சூழலை நடத்தையை ஏற்படுத்த வேண்டும்.

கேள்வி: இலங்கையில் நிலவும் யுத்தச் சூழல் இன்னும் நீங்கவில்லை. சமாதானத்திற்கான முதற்படி மட்டுமே எடுத்து வைக்கப்பட்டுள்ளது. இந்த நிலைமையில் பெண்களின் முன்னேற்றத்திற்கு முன்னெடுக்கப்பட வேண்டிய விடயங்கள் எவை என்று கருதுகின்றீர்கள்?

பதில்: அரசியலுக்கு வழங்கும் முக்கியத்துவத்தைப் போன்று பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகள் குறித்தும் அவதானம் செலுத்த வேண்டும். பெண்களுக்கு எதிரான சகல அடக்குமுறைகளையும், நீக்க வேண்டும். ஆனால் இன்று நாட்டில் நிலவும் பிற்போக்கு சூழல் நிச்சயம் இதற்கு வாய்ப்பளிக்காது. முக்கியமாக யுத்தம் நிறுத்தப்பட்டு நாட்டில் சமாதானம் மலர வேண்டும். இந்த நல்ல சூழல் பெண்களின் வாழ்க்கையை ஓரளவு மாற்றும். சமாதானத்தின் பேரில் நாம் மௌனமாக இருந்து விடமுடியாது. பெண்கள் அணிதிரண்டு போராட வேண்டும். மலையத்தில் பெண்கள் மிக கேவலமாக சுரண்டப்படுகின்றார்கள். இதே நிலைமை சுதந்திர வர்த்தக வலயத்திலும் காணப்படுகின்றது.

வடக்கு கிழக்கில் சிங்கள பாடையினரின் பாலியல் கொடுமைகள், தெற்கில் பெண்கள் மீதான பாலியல் வல்லுறவுகள் இந்த அனைத்துவித இன்னல்களையும் அட்டூழியங்களையும் எதிர்க்கும் வாய்ப்பில்லை. குறிப்பாக தமிழ் பெண்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கின்றனர். எனவே, இன்று பெண்ணியம் குறித்தான விழிப்புணர்வு சமூக மட்டத்தில் ஏற்பட வேண்டும். இந்த வரலாற்றுப் பணிக்காக ஊடகங்களும் உதவ வேண்டும். பெண்கள் பிரச்சனைகள் குறித்து முழு ஈடுபாட்டுடன் செயற்படும் பெண்கள் அமைப்புகள் தேவை. இவற்றை விட பெண்களின் பிரச்சனைகளை அரசியல் மயப்படுத்தும் பலம் ஏற்பட வேண்டும். இந்த பலத்தை அரசியல் பிரதிநிதித்துவம் மூலமே பெற முடியும். ★★★★

Canadian Tamil Youth Development Centre (CanTYD)

Job Posting (Part Time)
4 Positions

Job title: Youth Outreach Workers
The youth outreach worker will be working with Tamil youth in high schools and at a drop-in centre to provide them with counselling, activities and workshops.

Experience/ Education:
The outreach worker must have education and/or related experience in social service particularly in the field of youth development. S/He should have a clear understanding of youth and youth related issues.

Responsibilities:
- Works with the Program Coordinator; designs and implements a youth empowerment program at high schools and at the drop-in centre
- Develops and coordinates workshops on issues useful to the Tamil youth
- Reaches out and encourages youth to attend the program
- Provides reports and statistics as required
- Encourages and assists the initiatives taken by the youth
- Provides informal counselling and mediation and maintains a detailed and confidential record of client information
- Coordinates the Area Specific Parents' Network and also provides workshops for parents
- Coordinates the volunteers who assist in the Outreach Program
- Assists with other duties as required or as assigned

Qualifications:
- Good understanding of issues faced by the Tamil youth in GTA
- Ability to interact with youth informally
- Excellent interpersonal, organizational and conflict resolution skills
- Awareness of settlement issues within a new immigrant community
- Fluency in Tamil is an asset
- Culturally sensitive and aware of issues in Sri Lanka
- Ability to work with minimum supervision
- Access to computer and internet is a must
- Valid license and car is an asset

Salary and hours of work: $14-15/ hr and 15-20hrs/week (September 2002 – June 2003). Contract may be extended if required.

Application:
A copy of your resume and names of two referees who are able to comment on your professional abilities shall be sent. For each of the referees, provide his/her name, title, position, address, and telephone number so that we may contact them directly.
The above documents must be sent to us through email (in MS word format) or fax and received by **6:00pm, Wednesday, August 7th, 2002.**

FAX: 416 396 4522
Email: coordinators@cantyd.org
Phone: 416 396 4663

We thank all applicants. However, only short-listed applicants will be contacted.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் ஆதரவோடு செல்வி அகிலா, மிதிலா சகோதரிகளின் இன்னிசைக் கச்சேரி

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் ஆதரவோடு வடக்குக் கிழக்குத் தமிழ் மாணவர்களின் கல்வி மேம்பாட்டு நிதிக்காக இங்கிலாந்து இராமகிருஸ்ணன் சகோதரிகள் அகிலா, மிதிலா (பாரதிய வித்ய பவன் சிவசக்தி சிவநேசனின் மாணவிகள்) பெருமையுடன் வழங்கும் இன்னிசைக் கச்சேரி இம்மாதம் 13ம் திகதி 2002, சனிக்கிழமை பி.ப. 6:00 மணிக்கு 75 அஷ்ரொன்பி வளாகம், சென்ரானியல் கல்லூரி (வோடன்- எக்லிங்ரன் சந்திப்பில்) நடைபெற உள்ளது.

இக் கச்சேரிக்கு ரொறன்ரோவின் முன்னணிப் பக்க வாத்தியக் கலைஞர்கள் பக்க வாத்தியம் வாசிக்க உள்ளனர் என்பதை அறியத் தருகின்றார்கள்.

கல்வித்துறையில் சாதனை புரியும் தமிழ் மாணவி ஆரணி

ஸ்காபரோ Stephen Leacock உயர் கல்லூரியில் கல்வி கற்றபோது கல்வியில் மிகவும் அக்கறையாக இருந்த செல்வி ஆரணி சண்முகலிங்கம் தொடர்ந்து பல விருதுகளைப் பெற்று வருகின்றார். இதில் குறிப்பிடத்தக்க விடயம் என்னவென்றால் கல்விச் சாதனைகளுக்காக வழங்கப்படும் இரண்டு உயர் விருதுகள் ஒரே நேரத்தில் கிடைத்துள்ளன இவருக்கு.

Miller Thomson Foundation வழங்கிய Miller Thomson Scholarship என்னும் புலமைப் பரிசிலும் Governer General Academic பதக்கமும், இவருக்குக் கிடைத்துள்ளது. செல்வி ஆரணியை பாராட்டும் அவரது பெற்றோர் மற்றும் நண்பிகளோடு உதயனும் தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றான்.

எமக்கென்று ஓர் இல்லம்
அமைத்திட...

எம்மை அழைத்திடவும்.

உங்கள் உழியன்

- ஊதியத்திற்கேற்ப வீடு வாங்க
- நிதிவசதி ஒழுங்கு செய்ய
- வியாபாரங்களை வாங்க
- வாடகையை சொத்தாக மாற்ற

Web: http://www.royallepage.ca/neel
E-mail: neel@royallepage.ca

Bus. (416) 560-4728
(905) 793-5000
Res. (905) 678-7343
Fax. (905) 793-5020

Neel Surendran
Sales Representative
ROYAL LEPAGE
Royal LePage Real Estate Services Ltd., Broker

RESP SAVINGS PLAN
கல்விச்சேமிப்புத் திட்டம்

- You are eligible to apply for an Education Savings Grant of up to $400 per child per year.
- Your savings are more safe and secure.
- You can start with a small amount.
- More flexible plan.

Education is a great gift for your children.
உங்கள் பிள்ளைகளின் கல்விக்கான சேமிப்பு உங்கள் எதிர்கால தலைமுறைக்கான முதலீடு.

For Further Information Please Contact
S. Ganthiy B.A. (Sri Lanka)
416-955-9303

Heritage
Scholarship Trust Plan
Distributed by
Allianz Education Funds Inc.

தீராத நோய்களைத் தீர்க்க ஓர் அரிய சந்தர்ப்பம்

Dr. (Mrs.) K. வசந்தகுமார்
(அக்யுபஞ்சர் வைத்தியர்)
D.AC., M.AC.F., M.AC.A.N.A., M.CACA.,

★காசநோய்(Asthma)★மூட்டுவலி(Rheumatism & Rheumatoid)
★நீரழிவுநோய்(Diabetes) ★சர்மவியாதிகள்(Skin diseases)
★மனத்தளர்ச்சி(Depression) ★வயிற்றுவலி(Gastritis)
★வயிற்றுப்புண்(Ulcer) ★தலைவலி(Headache, Sinusitis)
★பீனிசம்(Rhinitis) ★உடல்பருமன் குறைத்தல் (Loss of Weight)
முதலான தீராத நோய்களுக்கு அழையுங்கள்

Mon. - Fri
9.30-12.00, 4.00-8.00
Sat. 9.00-1.00, 3.00-8.00

416-754-4024, 416-321-5557
4565 Sheppard Ave. East, #205 Mccown & Sheppard

வீடு வாங்க விற்க
அல்லது இலவச ஆலோசனைகளுக்கு
your #1 Choice

Century 21
Affiliate Realty Inc.
80 Corporate Drive #208
Toronto, ON M1H 3G5

வீடு விற்பவர்களுக்கு
special package
available!

Arun Chellappah
Bus: 416-290-1200 Res: 905-472-5089
Cell: 416-994-9411

பயணம்

ஆசிரியர்: ஸ்ரீபதி சிவனடியான்

ஜேர்மனி, பிரான்ஸ், சுவிஸ், இலண்டன், நெதர்லாந்து, டென்மார்க், நோர்வே ஆகிய நாடுகளுக்கான உதயனின் விஷேட இணைப்பு

பாரிஸில் 'சொர்க்கங்களும் தண்டிக்கின்றன'

திருமறைக் கலாமன்றத்தினர் பிரான்ஸ்- பாரிஸ் மாநகரில் கல்லாறு சதீஷின் சொர்க்கங்களும் தண்டிக்கின்றன! எனும் நூலின் அறிமுக விழாவொன்றினை வெகு சிறப்பாக நடாத்த ஏற்பாடுகளைச் செய்து வருகின்றனர்.

இம்மாதம் 21.7.2002 ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு ஆரம்பமாகும் இவ்விழா Salle Monfort, 350Rue Helene Cocfenic, 93300- Fort Aubervillier, France என்னுமிடத்தில் நடைபெறவுள்ளது.

குறித்த நேரத்திற்கு விழாவினை ஆரம்பிக்கும் அமைப்பு எனப் பெயரெடுத்த திருமறைக் கலாமன்றத்தினரின் ஏற்பாட்டில் நடைபெறும் இவ்விழாவில் இலக்கிய கர்த்தாக்களின் கருத்துரைகள், வாழ்த்துரைகள் என்பனவற்றுடன் கல்லாறு சதீஷ் ஏற்புரையாற்றவுள்ளார்.

சமூக மேம்பாட்டையும், இலக்கிய ஆர்வத்தையும் கொண்டு சிறந்த வாழ்வியலினூடாக நகரும் அனைத்து அன்புள்ளங்களையும் விழா அமைப்பினர் அழைக்கின்றார்கள்.

பிரான்ஸிலிருந்து வெளிவரும் வண்ணை சஞ்சிகை இந்த விழா தொடர்பான செய்திகளையும் கல்லாறு சதீஷின் சிறுகதைகள் தொடர்பான கட்டுரையையும் பிரசுரித்து தனது இதழை இலவசமாக வெளியிட்டுள்ளது.

கொந்தல் மாங்காய், பொல்லாத மனிதர்கள் ஆகிய நூல்களின் ஆசிரியரும், ABC தமிழ் ஒலி அறிவிப்பாளரும், வானலைகளில் எங்கள் கவிதைகள் என்கின்ற இரு நூல்களின் தொகுப்பாசிரியரும், கவிஞரும், வண்ணை சஞ்சிகையின் ஆசிரியருமான வண்ணைத் தெய்வம் அவர்கள் இப்படி எழுதுகிறார்.

கல்லாறு சதீவ் அவர்களும் அவரின் சிறுகதைகளும்

வண்ணை தெய்வம்

கல்லாறு சதீஷ் அவர்களை காலம் வழங்கிய கருத்துப் பெட்டகம் என்றோ, இன்றைய தலைமுறை எழுத்தாளர்களில் இவர் முதன்மையானவர் என்றோ, இங்கு இவருக்கு ஒரு புகழாரம் சூட்டிவைக்கப் போவதில்லை.

ஆனால் நிகழ்காலத்தின் நிகழ்வுகளைப் பதியவைத்துக் கொண்டிருக்கின்ற கற்பகதருக்களில் இவரும் ஒருவர் என்று சொல்லிவைக்கத் தயங்கமாட்டேன்.

இவரது பனிப்பாறைகளும் சுடுகின்றன என்னும் சிறுகதைத் தொகுப்பை படித்துவிட்டு இவர் காலத்தை ஞானக் கண்களால் பார்க்கின்றாரோ என எண்ணிக் கொண்டேன். ஏன் எனில் இவர் தனது கதைகளுக்கு எடுத்துக்கொண்ட கருக்கள் நடந்தவைகளை மட்டுமல்ல நடக்க இருப்பவைகளையும் அதன் பின் விளைவுகளுக்கு காணப்பட வேண்டிய பரிகாரங்களையும் முன்கூட்டியே சொல்லி வைத்திருக்கும் அந்தப் பாங்கு.

கனடிய நாட்டிற்கு இயற்கை கொடுத்த கொடையாம் மலையில் இருந்து சீறி விழுந்த நயக்காரா நதியின் வேகமும் அழகும் போல் இருக்கின்றன இவரது கதைகள்.

இவரின் கதைகளின் கருவில் இருக்கின்ற ஆழம், கதையில் இருக்கின்ற வேகம், அதே நேரத்தில் கதையின் சொல் ஓட்டங்களில் கடினம் இல்லாது வாசிப்போரை மயங்க வைக்கும் நயனம். அதுவே இவரின் கதைகளின் சிறப்பு.

பனிப்பாறைகளும் சுடுகின்றன நூலைப் படித்துவிட்ட நான் இவருக்கு எழுதிய கடிதத்தில் உங்கள் கதைகளின் கருத்துக்கள் மிக ஆழமானவை. அநேகமாக அனைத்துக் கதைகளும் சமுதாயத்தைச் சார்ந்தபடி நிற்கின்றன. இன்றைய காலகட்டத்தில் மண்ணையும் மக்களையும் சார்ந்திராத படைப்பாளிகள் மக்களிடத்தில் இருந்து அன்னியப்பட்டுப் போய்விடுவார்கள். நீங்கள் மக்களுடன் சேர்ந்தே நிற்கின்றீர்கள். உங்கள் கன்னிப் படைப்பிலேயே பல பிள்ளைகளைப் பெற்ற ஒரு தாயின் முதிர்ச்சி தெரிகின்றது என்னும் வரிகளை அந்நூலின் இரண்டாவது பதிப்பில் பதிய வைத்திருக்கின்றார்.

தான் சொல்வதைச் சூறாவளிக் காற்றைப் போல் வேகமாகச் சொல்லாமல் தென்றலைப் போல் இதமாக, சுகமாக, சாமர்த்தியமாக நகர்த்திச் செல்கின்றார்.

உண்மை என்னும் உருவத்திற்கு தனது கற்பனையில் உருவான வசனங்களை ஒப்பனையாகக் கொடுத்து அழகுபடுத்தியிருக்கின்றார்.

இவைகள் எல்லாம் ஒருங்கே அமைந்திருப்பதனால் கல்லாறு சதீஷ் அவர்களின் சிறுகதைகள் எல்லாம் நிறைகுடமாகவே இருக்கின்றன.

சதீஸ் அவர்கள் சில கதைகளில் தான் சொல்லவந்ததை புரியவைப்பதற்காக அதிகமான விளக்கங்களைக் கொடுத்திருக்கின்றார்.

இது இவர் வாசகர்களை எடைபோட்டு வைத்திருக்கும் விதமாக அல்லது விடுக்கப்பட்டிருக்கும் கருப்பொருளை முழுமையாக விளங்க வைத்துவிட வேண்டும் என்கிற ஆதங்கமா? என்பது எமக்கு ஒரு கேள்விக்குறியாக இருந்தாலும் கதையின் முடிவை அறிந்து கொள்வதில் ஏற்படும் ஆர்வம் இவரின் அறிவுரைகளை அலட்டலாக எடுத்துவிடாமல் தடுக்கின்றது.

சொர்க்கங்களும் தண்டிக்கப்படுகின்றன சிறுகதைத் தொகுப்பில் பதிவாகியுள்ள பத்துக் கதைகளும் ஒன்றோடு ஒன்று முட்டிக்கொள்ளாமல் ஒவ்வொன்றும் சும்மா ஒவ்வொரு செய்தியை மட்டும் சொல்வதோடு நிற்கவில்லை. மக்கள் தெரிந்து கொள்ள வேண்டிய செய்திகளைச் சொல்லியிருக்கின்றது.

எழுத்தாளர்களுக்கு முற்போக்கு எழுத்தாளர்கள், நற்போக்கு எழுத்தாளர்கள் என முத்திரை குத்தப்படுவது உண்டு. சதீஸ் அவர்களுக்கு இந்த இரண்டு முத்திரைகளையும் குத்திவிடலாம்.

ஏனெனில் இவர் முற்போக்கு கருத்துக்களுக்கு நற்போக்கு சிந்தனை என்னும் முலாம் பூசி ஆக்குகின்றார்.

முற்போக்கு பேசுகின்ற பலருக்கு பேச்சினில் மட்டும்தான் முற்போக்கு இருப்பதனை காணமுடிகின்றது. காலம் பூராவும் கண்ணீரில் வாழ்கின்ற பாட்டாளி மக்களைப் பற்றி மேடையில் கண்ணிர் சிந்தும் அழிவிற்குப் பேசுகின்ற தனவந்த முற்போக்கு எழுத்தாளர்கள் பலரைப் பற்றி அறிந்திருக்கின்றோம். ஆனால் கல்லாறு சதீஷ் யாரோ கண்காணாத ஒரு ஏழை எழுத்தாளன் உயிருக்காக யமனோடு பணத்திற்காக வாழ்க்கையோடும் போராடிக் கொண்டிருந்த வேளையில் அந்த முகம் தெரியாத உறவிற்காக பனிப்பாறைகளும் சுடுகின்றன நூலுக்குக் கிடைத்த பரிசுப் பணத்தை படுதலம் சுகுமாரன் என்ற அந்த எழுத்தாளனுக்கு அன்பளிப்பாக கொடுத்ததன் மூலம் எழுதுவதை எழுத்தோடு மட்டும் நிறுத்திக் கொள்ளாது வாழ்வோடும் இணைத்துக் கொண்டிருக்கிறார்.

சொர்க்கங்களும் தண்டிக்கின்றன என்னும் இந்த நூலுக்கு கவியரசு வைரமுத்து அவர்கள் அணிந்துரை வழங்கியதோடு நூலின் வெளியீட்டு விழாவிற்கு சுவிசிற்கு நேரில் வருகை தந்து வெளியிட்டும் வைத்து இவரை கௌரவப்படுத்தியுள்ளார்.

பார்த்திபனின் வில்லினைப் போல் உறுதியாக நிற்கின்ற இவரது எழுத்துக்களின் இரண்டாவது படைப்பான இந்த சொர்க்கங்களும் தண்டிக்கின்றன என்னும் நூலும் வாசகர்கள் மத்தியில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தும் என்பது எனது நம்பிக்கை.

நம்பிக்கைதானே வாழ்க்கை. எதிலும் நம்பிக்கை வைப்போம்.

***

வெற்றிகரமாக நடைபெற்ற கல்லாறு சதீஸின் அறிவியல் கலை இலக்கிய விழா

சுவிஸ் - லுசேர்ண் தமிழ் மன்றத்தின் ஆதரவில் கல்லாறு சதீஷின் சொர்க்கங்களும் தண்டிக்கின்றன- எனும் நூல் அறிமுகத்துடன் நடைபெற்ற அறிவியல் கலை இலக்கிய விழா பல நூற்றுக்கணக்கான மக்கள் முன்னிலையில் வெகு சிறப்பாக நடைபெற்றது.

வீரகேசரி ஆசிரியர் வி. தேவராஜ், மணிமேகலைப் பிரசுர அதிபர் ரவி தமிழ்வாணன், விஞ்ஞானியான கலாநிதி. நா. கண்ணன், கணிப்பொறியாளர் சுபாவினி கனகசுந்தரம், வணக்கம் ஜேர்மன் மெழிச் சஞ்சிகையாசிரியர் அன்ரன் பொன்ராஜ், கணிப்பொறி வரைகலைஞர் கிரிதர சர்மா ஆகியோர் இவ் விழாவில் கலந்து சிறப்புரை ஆற்றினார்கள்.

மேலும் பல பிரமுகர்களும் கல்லாறு சதீஷின் கதைகளைப் பாராட்டி உரை நிகழ்த்தினார்கள்.

கல்லாறு சதீஷின் இந்த நிகழ்விற்கு பதினெட்டுக்கும் மேற்பட்ட வர்த்தக நிறுவனங்கள் ஆதரவு வழங்கியிருந்தது குறிப்பிடத்தக்கது.

உறவுக்காக...!

உதயன்

(22..ம் பக்கத் தொடர்ச்சி)

எனக்குக் கூட அப்பிடி வராது. இனி தங்கட வேலையளை தாங்களே செய்யுதுகள். . சுகி பெருமையடிக்க..

வெள்ளைக்காரன் வீட்டில வளர்ந்த பிள்ளைகள் தானே!

பிள்ளையளை பிரச்சனைப்படாம கூடியமட்டும் உன்னோட வைச்சக் கொள் சுகி.. வெள்ளையள் தங்கட பழக்கங்களை பழக்கிவிட்டிடுங்கள். பிறகு அதுகள் பெத்ததுகளை மதிக்காதுகள்..

லீலா நான் வேணுமெண்டே பிரச்சனைப்படுறன். என்ர மாமியால தான் எல்லாம். என்ரமனிசனும் அவவின்ரை சொல்தான்.'. கேட்பார்

கனடா வந்துவிட வேமெண்டு ஆனைதாறம் பூனை தாறம் என்று சொல்லிப்போட்டு செய்யாமவிட்டா கோபப்படுகிறது.. நியாயம்தானே! மீரா நியாயம் பேச ஜஸ்மிக்கு அவர்களின் பேச்சு விளங்கவில்லை. ஏதேனும் குடிக்க சாப்பிட வேணும் பேல இருந்தது. பலருக்கு நடுவில் கேட்கத் தயக்கமாக இருந்தது. லாசி கொடுத்த பேப்பரும் கலரும் எடுத்து கீறத் தொடங்கினாள்.

அப்ப சுகி.. இப்ப ரெண்டு தரம் கொண்டு போயிட்டினம். இனிக் கொண்டு போன திருப்பித்தரமாட்டினமே!

மூன்று தரத்துக்கு மேல என்றால் தான் பதினெட்டு வயதுக்கு மேலதான் தருவினம். பிறகு அதுகளுக்கு அப்பா.. . . அம்மாவின்ர பராமரிப்பு தேவையில்லைத்தானே!

மாசக்கணக்கில். பிள்ளையளை எப்படித்தான் பிரிஞ்சு இருக்கிறியோ!

முதல்ல மாமியாரைத் திருத்த வேணும். பிள்ளை செய்யிற தப்பை கண்டுக்காம ஆதிச்கவைச்சு தூண்டிவிடுறா தன்ர சுயநலத்திற்காக..

அங்கபார் பிள்ளை தூங்கி வழியுது போ.. போய் தூக்கி கிடத்து.

ஜஸ்மி போ. . . . போய்ப்படு. . . .! தூக்கக் கலக்கத்தோடு வயிறும் பசித்தது. சீச்சீ. . .அம்மா கதைச்சுக் கொண்டு இருக்கும் போது குறுக்கிடக் கூடாது. லாசி இவள் நண்பர்களுக்கு பல தடவைகள் சொல்லியிருக்கிறாள். கேட்காமலேயே போய்ப்படுத்தாள்.

அவனவன்.. காரில வந்து பிள்ளையளை ஸ்கூல்ல இறக்கிவிட்டுப் போகேக்கிள. முன்பு நீ உந்தக் குளிரில உந்த இரண்டு சின்னதுகளையும் இழுத்துக் கொண்டு போறதைப் பார்த்த என்ர மனிசன் கூடக் கவலைப்பட்டிருக்கு..!

உங்களுக்கிருக்கிற அனுதாபம் . . எங்கட குடும் பத்தில உள்ளவைக்கு இல்லை..!

நன்றாக உறங்கி விட்டிருந்த ஜஸ்மி திடுக்கிட்டு விழித்துக் கொண்டாள். எங்கும் இருட்டாக இருந்தது.. கையால் இருளைத் துழாவி பழக்கத்தில் லாசி.. லாசி என்று கூப்பிட்டாள். வெளியே பலமான பேச்ச சத்தங்கள் .. கால்களை மடித்து கட்டிலிலே இருந்தாள் பயத்துடன்.

இஞ்சை வாங்கோ..,! எங்க போறீங்கள்? பிள்ளையள் நித்திரை.. எழுப்பாதீங்கோ?

என்னையும் என்ர தாயையும் தான் பிரிக்கப் போட்டாய். என்ர பிள்ளையளையும் என்னையும் பிரிக்கப் பார்க்கிறியே?

சத்தம் போடாம பேசுங்கோவன். ஒருமணி.. இப்படி சாமம் சாமமாய் குடிச்சுப் போட்டு வந்து ரகளை பண்ணினீங்கள் எண்டால் திரும்பவும் பிள்ளையளை பிடிச்சுக் கொண்டு போகப் போகினம்!

ஜஸ்மிக்கு வந்திருப்பது அப்பாதான் என்று புரிந்தது.

என்னடி எனக்குப் புத்தி சொல்லுறியே! நீ மட்டும் பெரிய சத்தமா நாடகத்தை போட்டிட்டு கதவு தட்டினதும் கோளாமல் இருந்தால். . . எனக்கு கோபம் வராதே!

பாத்திரங்கள் கழுவும் சத்தமும், சமையல் மணமும் வர ஜஸ்மிக்கு அன்று முழுவதும் சரியாகச் சாப்பிடாமல் இருந்ததில் பசித்தது. கட்டிலைவிட்டு இறங்கி வெளியே வந்தாள். ஷோபாவில் இருகால்களையம் அகல விரித்தபடி கண்ணைக் கசக்கிக் கொண்டு பார்த்தாள். அப்பா காலையில் பார்த்த அப்பா போலில்லாமல் தலை கலைந்து. . . உடுப்புகள் தாறுமாறாக சப்பாத்துகள் திசைக்கொன்றாக ரி.வியும், ரேடியோவும் பெரிதாக அலறிக் கொண்டிருந்தது.

அம்மா.. பசிக்குது.. தாயின் இடுப்பைக் கட்டிக் கொண்டு கேட்டவளை..!

நீயும் வந்திட்டியே .. இந்தா பாலைக் குடி சத்தம் போடாம.. போய்ப்படு.. அப்பா சண்டைக்கு நிற்கிறார்.

ஜஸ்மி.. மதியை ஒரு பயங்கரமான பிராணியைப் பார்ப்பது போல் மிரள மிரளப் பார்த்தவாறே போய் தலையணையில் முகத்தைப் புதைத்துக் கொண்டாள்.

என்னடி அங்க முணுமுணுக்கிறாய்? மீன் பொரிச்சனியே? அரை மணித்தியாலமா காவல் இருக்கிறன்..

உழைக்கிறதில அரைவாசியும் அங்க போகுது.. மிச்சத்தில இனி பிள்ளையளும் வந்தாச்ச.. எப்படி வாழ்க்கை போகப் போகிறதோ!

என்னைப் பெத்ததாய்க்கு நான் குடுக்கிறதில.. என்ன என்ன பிழையடி .. நீயும் உன்ர ஆட்களும்...

எனக்குச் செய்த துரோகம்.. ம்.. நெஞ்சு வெகுது..!

எதுவோ விழுந்து உடையும் சத்தம் இருவரும் மாறி.. மாறி.. உரத்த குரலில் சண்டை பிடிக்க ஜஸ்மிக்கு கைகால் எல்லாம் நடுங்கியது. சின்ன இதயம் படபட என்று துடித்தது. அய்யோ.. என்ர அம்மா. அடிக்கிறானே.. சுகி கத்த.. ஜஸ்மி இரு விரல்களையும் இரு காதுகளுக்குள் விட்டு இறுக்கிக் கொண்டாள்.

சிறிது நேரத்தில் எல்லாம் அமைதியாக .. சுகி வந்து கட்டிலில் படுக்கும் அரவம் அழுவது போல் மூக்கை சீறும் சத்தம். ஜஸ்மி எழுந்து உட்கார்ந்தாள்.

அம்மா.. அம்மா...!

ம்....!

நான்.. நான் லாசியிட்ட போகவேணும்...!

.....!

அம்மா.. எங்களைக் கொண்டு போய் லாசியிட்ட விடுங்கோ...

பேசாமப்படு.. விடியப்பாப்பம்..!

இல்லை.. இப்பவே போகவேணும். இவர்கள் வாழ்க்கையின் விகாரங்கள் அந்தச் சிறு பிஞ்சின் உணர்வுகளை காயப்படுத்தியிருக்க லாசியின் அரவணைப்பின் நிழல் தேவையாயிருந்தது. அதனால் பிடிவதமும் மனதை முற்றுகையிட்டிருக்க..

அம்மா.. அம்மா...! என்று சுகியை உலுப்ப. இடையே படுத்திருந்த ஜஸ்மி விழுனித்துக் கொண்டு லாசி.. லாசி என்ற அலற ஏற்கனவே கொதித்தப் போயிருந்த சுகி.. எட்டி ஜஸ்மியின் கன்னத்தில் தன் விரல்களை அழுந்தப் பதித்தாள்.

அம்மா.. ஆ...ஆ...ஆ.. அலறினாள் ஜஸ்மி...

என்ர உயிரை எடுக்கவென்றே வந்திருக்குதுகள்.. ஜஸ்மிக்கு கன்னம் வலியைக் கொடுக்க.. லாசி சொன்னது.. அடிக்கடி சொன்னது மனதில் வர எழுந்து வெளியே போக எத்தனித்தாள்.

ஜஸ்மி.. எங்க போறாய்? வந்து படு..

மாட்டன்..

என்ன செய்யப் போறாய்?

911க்கு அடிக்கப் போறன்.

அதிர்ந்து போய்நின்ற அம்மா சுகியின் மனதில் ஒரு சிறிய கதவை திறந்து விட்டோம் என்று உணராமலேயே தொலைபேசியை நோக்கி நகர்ந்த ஜஸ்மியை ஓடிப்போய் இழுத்து அணைத:தக் கொண்டாள் சுகி

(முற்றும்)

SHEPPARD -JANE DENTAL CLINIC

15 வருடங்கள் யாழ்ப்பாணம், கொழும்பு போதனா வைத்தியசாலைகளில் கடமையாற்றிய

டாக்டர் முத்துராஜா சத்தியபாலன்

DR. M. SATHIYABALAN

கனடா பல் மருத்துவ பீடத்தில் பல்வைத்திய துறையில் இரு வருட பயிற்சியை முடித்த பின் மீண்டும் கனடாவில் சேவையாற்றுகிறார்

சகல வயதினருக்கும் பற்களை நேராக்கி ஒழுங்கு படுத்தல்
Orthodontics - Braces / Removable Appliance

சிறுவர்களுக்கு பற்கள் கோணலாக, நெருக்கமாக முளைத்தலைத் தடுத்தல்
Paediatrics & Preventive Orthodontics

முரசு கரைவதை நிறுத்துவதற்கான சிகிற்ச்சை
Gum Disease Treatment

பழுதடைந்த வலிதரும் பற்களை அகற்றாது பாதுகாத்தல்
Root Canal Treatment

நிரந்தரமான செயற்கைப் பற்கள் கட்டுதல்
Crown & Bridge

இயற்கையான வெள்ளை நிறத்தில் பல் அடைத்தல்
White Filling

பற்களை சீராக்கி அழகு படுத்தும் சிகிற்ச்சை
Cosmetic Bonding

பற்களை வெண்மையாக்குதல்
Tooth whitening

சகல காப்புறுதிகளும் ஏற்றுக் கொள்ளப்படும்
Family benefit and Welfare உதவி பெறும் குடும்பத்தினருக்கு இலவச பற்சிகிற்சை

சனி, ஞாயிறு தினங்களிலும் திறக்கப்படும்

NORTH YORK
2715 Jane Street
(inside jane & sheppard mall)
TEL: 416-742-5111



தமிழில் தொடர்புகளுக்கு: 416-743-0498

அரசின்மீது நாம்கொண்ட நம்பிக்கை குறைந்து வருகின்றது -தமிழ்ச்செல்வன் கவலை

கடந்தவாரத் தொடர்ச்சி.....

அத்துடன் இந்த உடன்படிக்கை அமுலாக்கல் நிறைவடைகின்ற பொழுதுதான் அதற்கான சாத்தியப்பாடுகள் உறுதியாக இருக்கும்.

கேள்வி: அரசாங்கத்திற்காகக் காத்திராமல் நீங்கள் ஒரு திகதியைக் குறிப்பிட்டு நாங்கள் பேசத் தயாராக இருக்கின்றோம் என்று நீங்கள் சொன்னால் அந்தப் பத்து நாட்களுக்கு முன்பு அவர்கள் அந்தத் தடையை அகற்றி பேச்சுவார்த்தை களுக்கான முன்னேற்றம் ஏற்படும் என்பதை நீங்கள் கருதவில்லையா?

பதில்: பேச்சு வார்த்தைக்கான முன்னேற்றம் என்பதற்கு முன்னர் யுத்த நிறுத்தத்தில் நாங்கள் ஓர் உடன்படிக்கையை நோர்வே அரசாங்கத்துடைய அனுசரணையுடன் செய்திருக்கின்றோம். அந்த உடன்படிக்கை எவ்வளவு தூரம் விரைவாக இருதரப்பாலும் விசுவாசமாக நடைமுறைப்படுத்தப்படு கின்றதோ அதன் அடிப்படையில்தான் எதிர்கால நடவடிக்கைகள் தங்கி யிருக்கின்றன. ஏனெனில் நாங்கள் உடன்பாடு கண்ட விடயங்களை நடை முறைப்படுத்தாமல் அடுத்த கட்டப் பேச்சுக்களை நடத்தி உடன்பாடு காண்ப தென்பது கஷ்டமான விடயம். நாங்கள் அடுத்த கட்டப் பேச்சுக்களில் கூட இதைப்பற்றிக் கதைப்பதில் அர்த்தமில்லை. ஒன்றில் நாங்கள் இரண்டு தரப்பு இணக்கப்பாடு கண்டிருக்கின்றோம். உடன் படிக்கையில் கைச்சாத்திடப் பட்டிருக்கின்ற ஒரு நிறைவோடுதான் அடுத்த கட்டப் பேச்சுக்களை நாங்கள் தொடங்கலாம். அதில் குறிப்பாக இலங்கை அரசாங்கம் ஏற்றுக்கொண்ட விட யங்களை விரைவாக அமுலுக்குக் கொண்டு வருவது எமது அடுத்த கட்டப் பேச்சுக்களுக்கான சாத்தியப்பாடுகளை அதிகரிக்கும் என நான் நினைக்கின்றேன்.

கேள்வி: இந்த உடன்பாட்டில் நடைமுறைப்படுத்தப்படாத பெரிய சிக்கலான விடயம் என்று எதனை நீங்கள் கருதுகின்றீர்கள்?

பதில்: உடன்படிக்கையில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. வழி பாட்டுத்தலங்களிலிருந்து 30 நாட்களுக்குள் இராணவ முகாம்கள் அனைத்தும் வெளியேறவேண்டும் என்று. உடன்படிக்கை வந்த காலத்திலிருந்து 90 நாட்களுக்குள் படிப்படியாக எமது மீனவர்கள் கடலிலே சென்று தமது தொழில் முயற்சிகளை மேற்கொள்வதற்கான சகல தடைகளும் நீங்கி அவர்கள் சுதந்திரமாக கடலிலே சென்று தமது தொழிலைச் செய்யலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளபோதிலும் இதுவரையில் குடா நாட்டில் இருக்கின்றவர்கள் அவ்வாறு சென்று தமது கடலிலே மீன்பிடி தொழிலை மேற்கொள்வதற்கான வாய்ப்புக்கள் இன்னும் ஏற்படுத்தப்படவில்லை. இது யுத்த நிறுத்த உடன் படிக்கையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயங்களில் நடைமுறைக்கு வராத வற்றில் முக்கியமானதாகும். அடுத்தது பாடசாலைகள் குறிப்பாக பொது இடங்கள் மக்கள் வாழ்விடங்கள் இராணுவம் படிப்படியாக வெளியேறி 160 நாட்களுக்குள் ஒரு பூரணமான நிலையை அடைய வேண்டும் என்று ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றது. ஏற்றுக் கொள்ளப்பட்ட விடயங்கள் ஒரு சில இடங்களில் ஓரளவுக்கு அமுலுக்கு வந்திருந்தாலும் இன்னும் அவைகள் நிறைவடையவில்லை. அவற்றை நடைமுறைப்படுத்துவன் ஊடாகத்தான் இந்த உடன்படிக்கையின் உடன்பாடு நிறைவடையும். பேச்சக்களுக்கு முன்னர் மக்களுக்கு இயல்பு நிலையைக் கொண்டு வரவேண்டும் என்பதில் இருதரப்பும் உறுதியாக இணக்கப்பாடு காணவிருக்கின்றோம். இன்று நீங்கள் யாழ்ப்பாணம், வவுனியா, மட்டக்களப்பு போன்ற பகுதிகளில் பார்த்தால் பொதுமக்கள் வாழ்விடங்களில் இராணுவம் நெருக்கமாக முகாம்களை அமைத்துள்ளது. காவல் நிலைகள் இருக்கின்றன. இன்னும் சோதனைக் கெடுபிடிகள் இருக்கின்றன. இவை இருக்கும் வரையில் இராணுவ நெருக்குவாரங்கள் நீங்கியதாக கருதமுடியாது. அது எமது மக்களுடைய இயல்பு வாழ்வு நிலையை இன்னும் சிக்கல்படுத்திக்கொண்டிருக்கின்றதே தவிர இயல்பு நிலையைக் கொண்டு வரவில்லை. இவை நடைமுறைக்கு வருகின்றபோதுதான் எமது மக்கள் மனதிலே அமைதி சமாதானம் ஏற்பட்டு உறுதியான நம்பிக்கை கட்டியெழுப்பப்படும். ஆகவே இவை அமுல் படுத்துவது மிகவும் அவசியமாகும். ***

நோய்களின் எதிரி நம் கீரை வகைகளே!

12 ம் பக்கத் தொடர்ச்சி

2. இக்கீரையைச் சாம்பார் செய்து சாப்பிடுவதினால் சரீர எரிச்சல், மூட்டுவலி, வீக்கம், சிறுநீர் மஞ்சள் நிறமாக இருத்தல் முதலிய நோய்கள் குணமாகும்.
3. வல்லாரைத் துவையல் மலச்சிக்கலை அகற்றும்.
4. குடல்புண், வாய்ப்புண், சொறி, சிரங்கு, மாரடைப்பு, மாலைக்கண், நீரிழிவு, காக்கை வலிப்பு, காய்ச்சல், மூளைக் கோளாறு போன்ற நோய்களுக்கு சிறந்த நிவாரணி.
5. இரத்தத்தை சுத்தப்படுத்தும். தாதுபலத்தைக் கொடுக்கும்.
6. அதிகமான நினைவாற்றலை கொடுக்கும். அறிவை ஏற்படுத்தும் 'ஞானரச மூலிகை' என்றும் சித்தர்கள் இதனைக் கூறுவார்கள். ஞாபகசக்தி, மூளை வளர்ச்சி, நரம்புத் தளர்ச்சிக்கு மிகவும் சிறந்தது. பள்ளி செல்லும் குழந்தைகளுக்கு மூளை சுறுசுறுப்பையும் சிந்தனைத் திறத்தையும் தரவல்லது.

முடக்கத்தான் கீரை: முடக்கத்தான் தழைகளை வதக்கி உப்பும், மிளகாயும் சேர்த்து துவையல் செய்து சாப்பிடலாம். துவரம் பருப்பு, பாசிப்பருப்பு இவற்றுடன் சேர்த்து உண்ணலாம். இலையை அரிசி மாவுடன் கலந்து அடை செய்து சாப்பிட உடல்வலி தீரும். வாதம் சம்பந்தமான நோயுள்ளவர்களுக்கு மிகச் சிறந்த பயனைத் தரவல்லது.

பயன்கள்:

1. வெப்ப ஆற்றல் அதிகம் உண்டு. 61 கலோரி வெப்ப ஆற்றலை இது அளிக்கிறது.
2. புரதச் சத்தும், தாது உப்புக்களும், மாச்சத்தும் உடல் வளர்ச்சிக்குப் போதுமான அளவு இக்கீரையில் உள்ளன.
3. முலம், மலச்சிக்கல், பாதவாதம் போன்றவைகளுக்கு சிறந்த நிவாரணி
5. இலையை விளக்கெண்ணெயில் வதக்கி வலி உள்ள இடங்களில் கட்டிவர கீல்களில் உள்ள வாதப் பிடிப்பு, வீக்கம் தீரும்.

இவை தவிர பசளைக்கீரை, கொத்துமல்லிக் கீரை, வெந்தயக் கீரை, கரிசலாங்கண்ணி, புளியாரைக் கீரை ஆகியனவும் மிகுந்த சத்துக்களும் நற்பயன்களும் தரவல்லன. கீரையை சமைக்கும் முன் சரிவர சுத்தம் பண்ணி உப்பு நீரிலும் தூய நீரிலும் பலமுறை கழுவ வேண்டும். மண்ணில் பலவகை யான கிருமிகள் இருப்பதே இதற்குக் காரணம். இயற்கையின் கொடையான நிகரற்ற நற்குணம் வாய்ந்த மூலிகைகளைக் கீரையாக சமைத்தும் துவையலாக அரைத்தும் பொடியாக உணவில் கலந்தும் சாப்பிடுவதன் மூலம் சித்த மருத்துவம் உணவு மருத்துவமாக மாறுகிறது. கீரை உணவுகளை காலை மதிய வேளைகளில் மட்டுமே உட்கொள்ள வேண்டும். இரவில் உண்ணுவதை தவிர்த்து விட வேண்டும்.

நோயின்றி நல்ல உடல் நலத்துடன் வாழ அன்றாடம் நாம் உணவில் ஏதாவதொரு கீரையை சேர்த்துக் கொள்ளுதல் நல்ல பல பயன்களைத் தரும். வாட்டம் போக்கி ஊட்டம் கொடுக்கும் சிறந்த உணவு கீரைகள்.***

Condo Townhouse
50 Scarborough Golf Club Road

Asking only $154,900

Multi level Condo Townhouse with 3 bedrooms
Washrooms 1 X 4, 1 x 2
Updated Kitchen
New Paint
New Broadloom in Living and Dining Room
Overlooks Park

Facilities;
Gym
Indoor Pool
Sauna

Mortgages arranged for qualified purchasers with 5% Down

Call:
Tam Sivathasan, Bsc. Eng.
Sales Representative
Royal LePage Real Estate Services Ltd,
Phone: 416-284-4751
Cell: 416-804-3443

ROYAL LEPAGE

சுகதுக்கம் பகிர்ந்திட.....!

கோடை இனிக்கிறது வெயில் இதமாய்
இலைதுளிர் மனதை வருடிவிட சுகமாய்
மண்ணின் நினைப்போ மார்பை நனைக்க
தமிழ் நிலம் நிமிர்கிற வேளை
தாயகம் விடிகிற வனப்பு விடிகாலை
போற்றிப் பாட புலவர்கள் ஆவலாய்
வெற்றி நிச்சயமாக வேளையொன்று வாராதா
சுற்றிநாம் கூடி சுகதுக்கம் பகிர்ந்திட.....!

ஆக்கம்: சுகந்தினி சுதர்சன் (யேர்மனி)

நோய்களின் எதிரி நம் கீரை வகைகளே!

நோய்களின் எதிரி எது என்று கேட்டால் மருந்து என்பார்கள். அதில் உண்மை யில்லை. நோய் களின் எதிரிகள் கீரை வகைகளே! இவைமிக மலிவாவே கிடைக்கின்றன. ஆனாலும் ஐயோ கீரையா? யார் ஆய்ந்து கழுவிச் சமைப்பது?" எனச் சலித்துக் கொண்டாலும் மனித வாழ்வுக்கு இன்றியமையாத உணவு கீரைகள்தாம். "கீரை உணவுகளே, நம் வீட்டின் மருந்துப்பெட்டிகள்" விட்டமின் ஏ. சி. உயிர்ச்சத்துக்களும், சுண்ணாம் புச் சத்து, மணிச்சத்து, இரும்புச்சத்து முதலிய கனிமச் சத்துக்களும் கீரை இனங்களில்தான் அதிகம்!

கீரைகளைப் பச்சையாகவும் உண்ணலாம்; சமையல் செய்தும் சாப்பிடலாம். பொரியல், அவியல், துவையல், சூப் வைத்தும் உண்ணலாம். கண் ஒளி, மூளைபலம், உடல் உரம், எலும்பு பலம், பல் உறுதி என்பன இதன்மூலம் பெறப்படுகின்றன.

இதயம், கல்லீரல், குடல் போன்ற உள் உறுப்புகள் அனைத்துமே சரிவர இயங்க வைக்கிறது என்றும் இளமையுடன் வாழ உதவும் சஞ்சீவி கீரைகளே என்றும் அதனால்தான் கீரைத் தோட்டத்தை நமது மருந்துப் பெட்டி என்கிறார் அறிஞர் டால்ஸ்டாய்.

ஒரு நபருக்கு தினம்தோறும் 'விட்டமின் ஏ' 5000ஐக் கிடைக்கிறது எனவும் ஒவ்வொருவரும் தினம் 120 கிராம் கீரைகளை உட்கொள்ள வேண்டும் எனவும் உணவியல் நிபுணர்கள் கூறுகின்றனர். எந்தெந்த கீரைகளில் என்னென்ன சத்துக்கள் உள்ளதென தெரிந்து அறிவோமா?

அகத்தி: அக - தியை அகற்றும் கீரை அகத்திக் கீரை. அதாவது உடம்பின் உள்ளே ஏற்படும் சூடு இக்கீரையால் தணிக்கப்படுவதால் அகத்தி என பெயர் பெற்றுள்ளது. அரிசி கழுவிய இரண்டாவது நீரில் அகத்தியை வேகவைத்து தாளிதம் செய்து "சூப்" ஆக அருந்தினால் மிகுந்த சுவை தரும். இந்தக் கீரையை பொரியல் செய்யலாம். தேங்காய்பால் விட்டு சமைத்தும் உண்ணலாம்.

பயன்கள்:

1. 63 சத்துக்கள் அகத்தியில் இருக்கின்றன.
2. விட்டமின் ஏ.பி.சி உயிர்ச்சத்துக்கள் மிகுதியாக உள்ளன.
3. புரதச்சத்தும், சுண்ணாம்புச் சத்தும் நிறைய உள்ளன.
4. 100 கிராம் கீரையில் 1.130 மி. கிராம் சுண்ணாம்புச் சத்தும் 80 மி. கிராம் மணிச்சத்தும் 3.9 மி.கி. இரும்புச்சத்தும் அடங்கியுள்ளன.
5. விட்டமின் 'ஏ' 9.0 மி.கி. விட்டமின் 'சி' 169 மி.கிராமும் கிடைக்கிறது.
6. புகையிலையைப் பயன்படுத்துவதால் ஏற்படும் நிகோடின் நச்சுத் தன்மையைப் போக்கும் சக்தி கொண்டது.
7. வயிற்றுச் சூடு, வயிற்றுப் புண், வாய்ப்புண், நினைவாற்றலையும் பார்வைத் தெளிவையும் தரவல்லது.
8. மலச்சிக்கல், காப்பி டீ இவை குடிப்பதால் ஏற்படும் பித்தம் ஆகியவை தீரும். நீரடைப்பை போக்கும்.
9. பித்தச் சூட்டைத் தணிக்கும். உடலின் நச்சு நீர்களை முறிக்கும்.
10. தாய்ப்பாலினை சுரக்க வைக்கும்.

அறுகீரை: அரை கீரை என்ற பெயரில் விற்பனையாகும் அறுகீரை, உணவுக்கு உகந்தது. பத்திய நோயாளிகளுக்கு மிகச் சிறந்த சத்துணவு என்றால் அது மிகையாகாது. பருப்புடன் மிளகாய் போட்டு தாளித்து அவியல் பண்ணினால் மிகவும் சுவையாக இருக்கும். பொரியலும் செய்து உண்ணலாம்.

பயன்கள்:

1. தங்கச் சத்தும், இரும்புச்சத்தும் கொண்டது.
2. 100 கிராம் அரைக்கீரையில் 364 மி. கிராம் சுண்ணாம்புச் சத்தும் 52 மி.கி. மணிச்சத்தும் 385 மி.கி புரதச்சத்தும் கிடைக்கிறது.
3. காய்ச்சல், குளிர்காய்ச்சல், ஜன்னி, காசம், வாதபித்த நோய்களுக்கு சிறந்தது.
4. வாய் சம்பந்தப்பட்ட நோய்கள் நரம்பு சம்பந்தப்பட்ட நோய்கள் ஆகியவற்றைக் குணமாக்கும்.
5. மலச்சிக்கல், ருசியின்மை, பசியின்மையைப் போக்கவல்லது.
6. கண்களுக்கு குளிர்ச்சியையும் முடிக்கு வளர்ச்சியையும் தரவல்லது.

பொன்னாங்காணி: பொன்னாங்காணி கீரையில் ஒளிமிக்க கண்கள் நமக்குக் கிடைக்கிறது. இதனை கற்பக மூலிகை என்றும் கூறுவார்கள். இக்கீரையை நெய்விட்டு வதக்கி மிளகும் உப்பும் சேர்த்து துவையல் செய்யலாம். தண்டுகளை சூப் வைத்துக் குடிக்கலாம். துவரம் பருப்பு சேர்த்துப் பொரித்தும் கூட்டு வைத்தும் சாம்பார் செய்தும் உண்ணலாம்.

பயன்கள்:

1. விட்டமின் ஏ. உயிர்ச்சத்து 100 கிராம் கீரையில் 3210 மி.கி. உள்ளது. விட்டமின் சி 17 மி.கிராம் உள்ளது.
2. மேலும் 100 கிராம் கீரையில் 310 மி.கிராம் சுண்ணாம்புச் சத்தும் 60 மி.கி. மணிச்சத்தும் 16.7 மி.கி. இரும்புச் சத்தும் உள்ளது.
3. கண் எரிச்சல், கண் மங்கல், கண்கட்டி, கண்ணில் நீர் வடிதல், பீளை கட்டுதல் போன்ற கண்நோய்கள் குணமாகும்.
4. வாய்ப்புண், வாய் நாற்றம், ஈரல் நோய், மூலச்சூடு, மேகம், வெள்ளை முதலியவை குணமடையும்.

முருங்கைக் கீரை: கற்பகம், காமதேனு என்று மக்களால் புகழப்படும் முருங்கை மரம் அதிக மருத்துவப் பயனுடையதாகும். முருங்கை மரத்தின் எல்லாப்பகுதிகளுமே மருத்துவ குணம் உடையவை. துவரம் பருப்பு சேர்த்துப் பொரியல் செய்யலாம். சாம்பார் வைத்தும் சாப்பிடலாம். இந்தக் கீரையை தேங்காய், பருப்பு, மிளகாய் சேர்த்துத் தாளித்துச் சாப்பிட்டால் நல்ல சுவையாக இருக்கும்.

பயன்கள்:

1. விட்டமின் ஏ.சி இரும்புச்சத்து, சுண்ணாம்புச் சத்து அதிக அளவில் உள்ளன. 100 கிராம் கீரையில் 220 மி.கிராம் விட்டமின் சி. கிடைக்கிறது.
2. ஒரு கப் முருங்கை இலைச்சாற்றில் 80 கப் பசும்பால், எட்டு வாழைப்பழங்கள், 25 கிலோ மாம்பழங்களில் உள்ளசத்து கிடைக்கிறது.
3. கீரை சூப் கிட்டப்பார்வை , எட்டப்பார்வை, கண்மங்குதல் முதலிய கோளாறுகளை நீக்கும்.
4. இதன் சாற்றுடன் சுண்ணாம்பு, தேன் கலந்து தொண்டைக் கடியில் தடவினால் இருமல், கம்மல் தீரும்.
5. இதன் சாற்றை வடிகட்டிப் பாலுடன் சேர்த்துப் பருகினால் எலும்புகள் உறுதி அடையும். இரத்தம் தூய்மையாகும்.
6. இக்கீரையை பூண்டுடன் சமைத்துப் பகலுணவில் நெய்யுடன் சாப்பிட்டு வந்தால் தாய்ப்பால் பெருகும்.
7. இரத்தக் கொதிப்பு, சூதக வயிற்று வலிகளுக்கு நல்லது.
8. ஒரு தேக்கரண்டி சாற்றில் சிறிதளவு உப்பு சேர்த்து ஒரு தடவை கொடுத்தால் வயிற்று உப்புசம் மாறிவிடும்.
9. வசம்பு சுட்ட கரியையும் சாற்றையும் குழைத்துக் குழந்தைகளின் தொப்புளைச் சுற்றித் தடவினாலும் வயிறு உப்புசம் உடனே நீங்கிவிடும்.
10. பூவை பாலில் காய்ச்சி இரவில் பருகிவர ஆண்மை பெருகும்.

வல்லாரைக் கீரை: வலிமையற்றவனுக்கு வலிமை கொடுப்பதால் இக்கீரையை வல்லாரை என்பர். இதுவும் ஒரு கற்பக மருந்து. உழுந்தை வறுத்து அதனுடன் வல்லாரையை வதக்கி தேங்காய், உப்பு சேர்த்து துவையல் செய்து உண்ணலாம். பாசிப்பருப்புடன் சேர்த்து கூட்டு செய்தும் உண்ணலாம்.

பயன்கள்:

1. வல்லாரைக்கீரை செம்புச் சத்தையும், தங்கச் சத்தையும் கொண்டது. 100 கிராம் கீரையில் 2.24 மி.கி சுண்ணாம்புச் சத்தும் 32 மி.கிராம் மணிச்சத்தும் 68.8 மி.கிராம் இரும்புச் சத்தும் உள்ளன.

...17...தொடர்ச்சி ம் பக்கம் பார்க்கவும்

உங்கள் சட்டத் தேவைகள் எதுவானாலும் நம்பகரமான சேவைகளைப் பெற்றுக் கொள்ள நாடவேண்டிய இடம்



ராவணா & ராவணா

திறமையும் அனுபவமுமிக்க சட்ட வல்லுனர்கள்

RAWANA & RAWANA

Barristers Solicitors & Notaries

REGINALD P. RAWANA L.L.B
37 வருடங்களுக்கு மேலான அனுபவம்

RICHARD A. RAWANA B.A, L.L.B
முன்னாள் அரச வழக்கறிஞர்
குற்றவியல் வழக்கறிஞர்

416-281-8505

CRIMINAL LAW - குற்றவியல் சட்டம்
Bails Breal & Enter Robbery Assault Theft Mischief Impaired Driving Possession Weapon Offences Young Offenders Etc.
பிணை அத்துமீறி உட்புகுதல் கொள்ளை தாக்குதல் களவு பொல்லாப்பு மது அருந்தி வாகனம் ஓட்டல் களவெடுத்த பொருளை வைத்திருத்தல் ஆயுதம் பாவித்த குற்றங்கள் இளம் தவறாளிகள்

REAL ESTATE LAW - வீடு, காணிகள், வர்த்தக சட்டம்
Buying or Selling - House or Condo வீடுகள் அல்லது கொண்டோ வாங்க விற்க Mortgage Transactions அடமான மாற்ற ஒழுங்குகள்

FAMILY LAW - சகல விதமான குடும்ப விவகார வழக்குகள்
Divorce Custody Access Support Separation Agreement Etc.
மணவிலக்கு பிள்ளைகளை வைத்திருக்கும் உரிமை பிள்ளைகளை சந்திக்கும் வாய்ப்பு பிள்ளைகளுக்கு படி கட்டுவித்தல் பிரிதல் உடனபாடு

IMMIGRATION / REFUGEE - குடிவரவு அகதிகள் சட்டம்
TRAFFIC OFFENCES - வாகனம் செலுத்திய வழக்குகள்
WILLS - உயில் PARDONS - தண்டனைக் குறைப்பு

FREE INITIAL CONSULTATION ~ LEGAL AID WELCOME

தமிழிலும் உரையாடலாம்

416-281-8505

8130 Sheppard Ave. East, Suite #209, (Just East of Morningside Ave.)
Scarborough, ON M1B 3W3

கனடிய தமிழர்களின் அபார வளர்ச்சி

தமிழ் கனடிய தொழில்நுட்ப கண்காட்சி 2002 பங்குபற்றுவதற்கான ஒரு அழைப்பு

கடந்த ஆண்டில் நடைபெற்ற தமிழ் உயர் தொழில்நுட்ப கண்காட்சியின் வெற்றியானது கனடிய மக்களுக்கு தமிழ் மக்களின் வளர்ச்சியையும் கடின உழைப்பையும் எடுத்து இயம்பியது. கடந்த 15 வருடங்களில் எவ்வளவு முன்னேறியுள்ளார்கள் என்பதை எடுத்துக் காட்டும் ஒரு நிகழ்வாகவும் இது அமைந்தது. எமது சமூகத்தின் முன்னேற்றத்தை அளக்கும் ஒரு அளவுகோலாக இத் தொழில்நுட்ப கண்காட்சி அமைகிறது.

புதிய நடைமுறைகளை அறிமுகப்படுத்தும் நோக்கத்தோடு இவ்வருட கண்காட்சியானது எமது சமூகத்திற்கு பயன்படக்கூடிய சில புதிய விடயங்களை உள்ளடக்கியதாக அமையும். கண்காட்சியில் நடைபெறும் நிகழ்வுகளும் அதில் நீங்கள் எவ்வாறு பங்குபற்றலாம் போன்ற விபரங்கள் பின்வருமாறு:

1. வர்த்தக கண்காட்சி: தொழில் நுட்ப துறையில் சேவை புரிவோரை மக்களுக்கு வெளிச்சம் போட்டுக் காட்டும் நிகழ்வாக இது அமையும் இந்தக் கண்காட்சி போன்ற தொழில் நுட்பங்களையும Biotechnology உள்ளடக்கும்.

2. பல்கலைக்கழக மாணவர்களுக்கானது: பொறியியல் துறை பல்கலைக்கழக மாணவர்கள் தங்களின் (Projects) பாடங்களை இந்த நிகழ்வில் காட்சிக்கு வைப்பதன் மூலம் அவற்றை சந்தைப்படுத்தலுக்கான வாய்ப்புக்களை அறிந்து கொள்ளலாம்.

பங்குபற்றுவதற்கான விதிமுறைகள்:

* Projects தொழில் நுட்பம் சார்ந்ததாக இருக்க வேண்டும் என்பது அவசியம் இல்லை.
* ஒரு நாட்டின் அபிவிருத்தி சார்ந்ததாக இருப்பின் அது வரவேற்கத்தக்கது.
* மாணவர்கள் தங்களது விபரங்களை சமர்ப்பிக்கும் முடிவு திகதி ஆடி. 20. 2002 (இந்நேரத்தில் விபரங்கள் மட்டுமே தேவை)
* மேலதிக விபரங்களுக்கு info@teedor.ca

பாடசாலை மாணவர்களுக்காக:

மாணவர்கள் குழுவாக Lego Robotics போட்டியில் பங்குபற்றலாம். மாணவர்கள் மத்தியில் குழுவாக பணியாற்றி அறியும் ஆற்றலை வளர்ப்பதற்காக இப்போட்டி நடாத்தப்படுகிறது. மேலும் மட்டுப்படுத்தப்பட்ட கருவிகளைக் கொண்டு Lego ஒரு Engineering Design ஐ செய்வதற்கு அவர்களை தயார்படுத்தவும் இப்போட்டி நடாத்தப்படுகின்றது.

பங்குபற்றுவதற்கான விதிகள்:

* ஒவ்வொரு குழுவும் குறைந்தது 3 மாணவர்களைக் கொண்டிருக்க வேண்டும்.
* Robot ஐ Lego Mindstorm System கொண்டே அமைக்க வேண்டும். (http://www.legomindstorms.com)
* ஒவ்வொரு குழுவும் தங்கள் robot எவ்வாறு இயங்க வேண்டும் என்ற விபரங்களை http://www.teedor.ca/expo2002/de.html என்ற முகவரியில் அறியலாம்.
* 12 வயதிற்கு உட்பட்ட மாணவர்கள் விசேட பயிற்சிகளை செஞ்சோலை அமைப்பினூடாக பெறலாம்.

3. தொழில் நுட்பரீதியான கலைவடிவங்கள்: தொழில் நுட்பத்தை பயன்படுத்தும் கலைஞர்கள் மற்றும் animatorகள் தங்களின் திறமைகளை உலகிற்கு தெரியப்படுத்துவதற்காக இந்நிகழ்வு நடைபெறுகின்றது.

4. கருத்தரங்குகள்:

இதில் இரண்டு வகையான கருத்தரங்குகளும் உள்ளடங்கும்.

தொழில் நுட்பம் சார்ந்த கருத்தரங்குகள்: தொழில் நுட்பம் சாந்த வியாபாரங்கள் எவ்வாறு ஆரம்பிப்பது முதல் பல்வேறு தொழில்நுட்பங்களை பற்றி அறிமுகப்படுத்துதல் இங்கே வழங்கப்படும்.

அபிவிருத்தி சாந்த கருத்தரங்குகள்: எங்களில் பலர் எங்களின் தாயகத்திற்கு சென்று அங்கு நடைபெற்றுக் கொண்டிருக்கும் அபிவிருத்தி பணிகளுக்கு உதவி செய்துள்ளார்கள். இந் நிகழ்வானது நீங்கள் அங்கு செய்த உதவிகள் மற்றும் அங்கு பெற்ற அனுபவங்களை மற்றவர்களுக்கு தெரியப்படுத்தவும், அவர்களை இம்மாதிரியான திட்டங்களுக்கு உதவி செய்ய ஊக்கப்படுத்தவும் நடத்தப்படுகிறது

மேலதிக விபரங்களுக்கு info@teedor.ca http://www.teedor.ca

PHALAPPASS PARTY SERVICE

பாலப்பாஸ்

Tel:416-614-9669

கேற்றறிங் அன்ட் ரேக் அவுட்
1635 Lawrance Ave West, Unit 5
North York, Ont. M9L 3C9
416- 248-5999, 416-568-6591

உங்களது திருமணம், பூப்புனித நீராட்டு விழா, மற்றும் அனைத்து மங்கள வைபங்களையும் ஒரே கூரையின் கீழ் ஒருங்கமைத்திட எங்களை அழையுங்கள்

Hyw 27 and Albion பகுதியில் 100 பேர் முதல் 900 பேர் வரை அமரக்கூடிய இரண்டு அழகிய மண்டபங்களுடன் ஸ்காபரோ பகுதியில் 450- 550 பேர் அமரக்கூடிய மண்டபமும் ஒழுங்கு செய்து தருகின்றார்கள்.
அழையுங்கள்
பாலப்பாஸ் பார்டி சேர்விஸ் அன் கேற்றரிங்

416- 248-5999, 416-568-6591

உங்கள் வீடு ஒன்றை
விற்க விரும்புகிறீர்களா?
வாங்க விரும்புகிறீர்களா?

HOMELIFE/CHAMPIONS
Realty Inc. Realtor Member

HOMELIFE

தரமான
சுத்தமான சூழல்
சுற்றாடல்
நியாயமான விலை
குறைந்த வட்டி வீத
அடைமான ஒழுங்குகள்
★இலவச பெறுமதி மதிப்பீடு வெற்றிகரமான
★சந்தைப்படுத்தும் திட்டம்

இவை யாவும் கலந்த எனது மாசற்ற சேவைக்கு எனது உத்தரவாதம்
விபரங்களுக்கு
அழையுங்கள்
மீனா சக்திவேல்

Gold Award Winner up to 2000
Platinum Award Winner 2001
Meena Sakthivel
(Sales Associate)
Bus: 416-281-8090
Res: 905-428-9299
Fax: 416-281-2753

Home Life/Champions
Reality Inc. Realtor Member
8130 Shepard Ave.E., Suite 206, Toronto, Ont. M1B 3W3

குரு அரவிந்தனின்
என் காதலி ஒரு கண்ணகி

திறனாய்வு
எஸ். பத்மநாதன். – (BA Hons, Dip in Ed.)

உதயன் பத்திரிகை நடத்திய சிறுகதைப் போட்டியில் தங்கப்பதக்கம் பெற்ற குரு அரவிந்தன் தான் ஒரு தலைசிறந்த எழுத்தாளன் என்ற முத்திரையை தமிழ் கூறும் நல்லுலகெங்கணும் முழு மூச்சாகவே இன்று பதித்து வருகின்றார். ஆனந்தவிகடன், கல்கி, குமுதம் போன்ற தமிழ்நாட்டு பிரபல வாராந்திகளும், புதினம், வெற்றிமணி, உயிர்நிழல் போன்ற பிற வெளிநாட்டுப் பத்திரிகைகளும் இவரது சிறுகதை களை விரும்பி வெளியிட்டு வருகின்றன. இவரது கதைகள் சில வேறுமொழிகளிலும் மொழிமாற்றம் செய்யப்பட்டிருப்பது இவரது எழுத்தாற்றலுக்குக் கிடைத்த நல்லதொரு சான்றாகும்.

கனடா தமிழ் சிறுவர் இலக்கிய வளர்ச்சியிலும் குரு அரவிந்தன் அதிக அக்கறை காட்டி வருகின்றார். இவர் தமிழ் ஆரம் என்ற ஒளியிழையையும், சிறுவர் பாடல்கள் அடங்கிய குறும்தட்டையும், பயிற்சி நூல்களையும் வெளியிட்டிருக்கின்றார். தமிழ் மக்களிடையே பரபரப்பை ஏற்படுத்திய உதயன் பத்திரிகையில் வெளிவந்த 'உறங்குமோ காதல் நெஞ்சம்' என்ற இவரது நாவலை கனடா தமிழ் எழுத்தாளர் இணையம் பெருடையுடன் வெளியிட்டு வைத்ததையும் இங்கே குறிப்பிடலாம்.

குரு அரவிந்தன் அவர்கள் பழகுவதற்கு இனிய அன்பர். நல்ல பண்பாளர். இவரது பண்பு நலம் மிகுந்த படைப்புக்கள் இலக்கிய உலகத்தின் எதிர்காலத்தை இன்னும் அதிகமாகவே செழுமை ப்படுத்தும் என்பது உறுதி.

கலாநிதி வி.கந்தவனம்
தலைவர், கனடா தமிழ் எழுத்தாளர் இணையம்.

இன்று எமது மத்தியில் சிறந்த ஒரு எழுத்தாளராக உலக வலம் வந்து கொண்டிருப்பவர் குரு அரவிந்தன். ஈழநாடு பத்திரிகையில் 'அணையாததீபம்' என்ற சிறுகதையை எழுதியதன் மூலம் எழுத்துப் பணியை ஆரம்பித்த இவரது எழுத்துக்கள் கனடாவுக்கு இவர் புலம்பெயர்ந்த பின்னரே மிகவும் பிரகாசிக்கத் தொடங்கின. இங்கிருந்து இவர் எழுதிய எழுத்துக்கள் தமிழகத்தில் வெளிவரும் ஆனந்தவிகடன், கல்கி, குமுதம், பிரான்சிலிருந்து வெளிவரும் உயிர்நிழல், மலேசியாவில் இருந்து வெளிவரும் நண்பன், லண்டனில் இருந்து வெளிவரும் புதினம், ஜேர்மனியில் இருந்து வெளிவரும் வெற்றிமணி, கனடாவில் இருந்து வெளிவரும் உதயன், நம்நாடு, ஈழநாடு, போன்ற பத்திரிகைகளிலும் தொடர்ந்து வெளிவருகின்றன. குறிப்பாக கனடாவில் உதயன் பத்திரிகை நடத்திய சிறுகதைப் போட்டியில் தங்கப்பதக்கம் பெற்றதைத் தொடர்ந்து மிகவும் உற்சாகமாக இவர் எழுதி வருகின்றார். எமது எழுத்தாளர் ஒருவரது கதைகள் இவ்வளவு சர்வதேச முக்கியத்துவம் பெற்றுள்ளதற்கு இவரது தனித்துவம் முக்கிய காரணியாகலாம்.

குரு அரவிந்தனின் தனித்துவமான எழுத்துக்கள் பல எழுத்தாளர்களாலும், வாசகர்களாலும் மிகவும் ரசிக்கப்பட்டு பாராட்டப்படுகின்றன. அவர் தனது துரிதமான படைப்புக்கள் மூலம் எழுத்துலகில் மிகவும் பிரபல்யமாகி வருகின்றார். உண்மையில் இவர் இன்றைய வாசகர்களை நாடிபார்த்து, இளைய சமூகத்தினரின் தேவைகளைப் புரிந்து எதனையும் சுருக்கமாகக் கூறுவதில் வல்லவர். இவரது எழுத்துக்கள் பலரது சிந்தனைகளைத் தூண்டுவதுடன் மனதில் கிளர்ச்சியை ஏற்படுத்துவதிலும் வல்லமை படைத்துள்ளன. 'உறங்குமோ காதல் நெஞ்சம்..?' என்ற அவரது குறுநாவல் வாசகர்களிடையே மிகவும் பிரபல்யம் அடைந்ததற்கு இதுவும் ஒரு முக்கிய காரணமாய் இருக்கலாம். எனவேதான் இவரது படைப்புக்கள் இன்று பிறமொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டும், மீள்பதிவு செய்யப்பட்டும் வருகின்றன.

குரு அரவிந்தனின் 'என் காதலி ஒரு கண்ணகி' சிறுகதைத் தொகுதியைப் பொதுவாக நோக்குகின்றபோது அவை அனைத்தும் உணர்ச்சிப்பதிவு (Unity of impression) இரண்டறக்கலக்கும் ஆற்றல்(Immediacy) கொண்டவைகளாக உள்ளன. காதற்கதைகளாக இவை உள்ளதனால் இளம் வயதினரின் புதுமையான உணர்வுகளை புலப்படுத்தி நிற்கின்றன. பல்வேறு நாடுகளிலும் இவை வெளிவந்துள்ளதுடன் காதலர் தினங்களை ஒட்டி வெளிவந்தமையால் பலராலும் விரும்பிப் படிக்கப்பட்டுள்ளன.

இந்தியாவில் உள்ள மணிமேகலைப் பிரசுரத்தால் வெளியிடப்பட்ட இச் சிறுகதைத் தொகுதி 160 பக்கங்களைக் கொண்டது. பதினைந்து சிறுகதைகள் இதில் உள்ளன. இந் நூலில் ஆசிரியர் தனது உரையில் 'காதலிப்பதும், காதலுக்காக ஏங்குவதும், காத்திருப்பதும், கிடைக்காமற் போனால் அதற்காக மனமுடைந்து போவதும், காலாகாலமாய் தொடர்ந்து கொண்டேதான் இருக்கப்போகிறது' என்று கூறுவது தான் இக்கதைகள் பலவற்றின் அடிப்படை. மேலும் 'காதலில் தோல்விகள் எல்லாம் தோல்விகளுமல்ல, வெற்றிகள் எல்லாம் வெற்றிகளுமல்ல, வாழ்க்கை வாழ்வதற்கே' என்ற கருத்தையும் சில கதைகள் மூலம் வாசகர்களுக்கு நன்கு தெளிவு படுத்துகின்றார்.

ஒவ்வொருவரின் வாழ்க்கையிலும் இப்படியான காதல் அனுபவங்கள் கிடைத்திருக்கும். எனவே அவர்கள் தங்கள் நினைவுகளை இரைமீட்டிக் கொள்ள இக் கதைகள் உதவப் போகின்றன. அல்லது இனிமேல் இவ் அனுபவங்களைப் பெறப்போகிறவர்களுக்கும் இவை சுவைக்கப் போகின்றன. எப்படி இருந்தாலும் இதில் வருகின்ற பாத்திரங்கள் அனைத்திலும் நம்மவர்கள் இருக்கின்றார்கள்.

இக் கதைத் தொகுதியில் முதலில் இடம் பெறும் சிறுகதை 'என் காதலி ஒரு கண்ணகி'. கனடாவில் வெளிவரும் ஈழநாடு பத்திரிகையில் வெளிவந்த கதை. ஊடல் எனப்படும் செல்லமான கோபம் இக்கதையில் ஊடிச் செல்கிறது. அவளுக்கொருகடிதம், காதல் என்பது' ஆகிய இரண்டு கதைகளும் ஆனந்தவிகடனில் வெளிவந்தவை. இக் கதைமின் இறுதி வரிகளில் வரும் 'ஒருவரை ஒருவர் முழுமையாக புரிந்து கொள்ளுதலே உண்மையான காதல் என்பதும், அப்படிப்பட்ட காதல் என்றும் தோற்பதில்லை என்பதும் புரிய மனோவின் கைகளை அழுத்திப் பற்றிக் கொண்டாள் உஷா.' மிகவும் யதார்த்தமான அற்புத வரிகள் இவை.

ஏனைய கதைகள் முறையே கீதவாணியிலும், நம்நாடு, வாசகன், புதினம், வெற்றிமணி, நண்பன், உதயன் போன்ற பத்திரிகைகளிலும் வெளிவந்தன. இக் கதைகளில் மிகவும் தத்ரூபமாகப் பிரச்சினைகள் அணுகப்படுகின்றன. புதிய தலைமுறைக்குத் தேவையான புதிய பல சிந்தனைகளை இக் கதைகள் மூலம் இங்கே ஆசிரியர் தருகின்றார். அதே சமயம் அடுத்த தலைமுறை இப்படியும் வாழப்போகிறதா என்ற கேள்வியையும் இங்கே எழுப்பி விடுகின்றார்.

இறுதிக் கதை இங்கேயும் ஒரு நிலா' கனடாவில் வெளிவரும் ரோஜா சஞ்சிகையில் வெளிவந்தது. நல்ல புதிய கவிதைகளை இடைமிடையே புகுத்தி ஒரு பரீட்சார்த்தமான சிறுகதையை இவர் படைத்திருக்கிறார். ஹைக்கூ கவிதைகூட இடையே நுழைகிறது. 'கட்டிய மனைவியையும் காதலியாய்ப் பார்க்கலாம், அவளையும் காதலிக்கலாம்' என்ற வரிகள் பலரைச் சிந்தித்து செயற்பட வைக்கும் என்பதில் சந்தேகமேயில்லை. இக்கதை ஒருதலைக்காதல் கதையா என்ற சிந்தனையையும் எழுப்புகிறது.

'என் காதலி ஒரு கண்ணகி' என்ற இச் சிறுகதைத் தொகுதியில் பரிமாணங்கள் பலவாக உள்ளன. பல்வேறு சஞ்சிகைகள், பத்திரிகைகள், நாடுகள் இக் கதைகளை ஆக்கிரமித்துக் கொண்டன. காதல் பற்றிய பல்வேறு சர்ச்சைகள் இதில் பேசப்பட்டன. இளசுகளின் இன்றைய காதல் உணர்வுகளுக்கு களம் அமைக்கப்பட்டன. வார்தைகளால் காதல் ஓவியம் தீட்டப்பட்டன. மென்மையான உணர்வுகளுக்கு வாசம் ஊட்டப்பட்டன. உண்மையில் காதலர்களின் உணர்வுகளை அற்புதமான வார்த்தைகளில் கொட்டித் தீர்க்கிறார் இவர். இவருக்கு இணை இவரேதான்.

இன்று சர்வதேசரீதியாக சிறுகதைகளை இவர் எழுதுவதற்கு ஒரு நோக்கம் உண்டெனப் புலப்படுகின்றது. ஏற்கெனவே பழகிப்போன வாசகர்கள் பலர் இன்று புலம்பெயர்ந்து பல நாடுகளிலும் வாழ்கிறார்கள். காதல் உணர்வுகள் எங்கும், எல்லோருக்கும் ஒன்றேதான். தன் எழுத்துக்களை சர்வதேசரீதியாக பிரகாசிக்கச் செய்ய வேண்டும் என்ற இவ் ஆசிரியரின் எண்ணங்கள் இன்று மெய்ப்பிக்கப் பட்டுவிட்டன. இவரது எழுத்துக்களுக்கு எதிர்காலம் களம் அமைத்தே தீரும் என்பதை இதன்மூலம் உறுதியாகக் கூறமுடிகிறது.

"உதயன்" வாசகர்களின் அமோக பாராட்டுக்களைப் பெற்ற **"ஒரு சிறீலங்கா நாயின் கதை"**, **"மிஸ் ஆச்சி"** ஆகிய நகைச்சுவைத் தொடர்களைத் தொடர்ந்து உங்கள் அபிமான நகைச்சுவை எழுத்தாளர் **"டொன்மில்ஸ்" சிவப்பிரகாசம்** எழுதும் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கின்றது என்பதை மிகவும் மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றோம். - பிரதம ஆசிரியர்

அங்கம் - 4

பெரியப்பாவின் ஆவி!

- டொன்மில்ஸ் சிவப்பிரகாசம்



"வாருங்கோ பெரியப்பா! இந்த கொப்பிலை இருங்கோ" என்று பெரியப்பாவை வரவேற்றா நாகு. நாகு காட்டிய அரசமரத்து கிளையில் அமர்ந்து கொண்டார் பெரியப்பா. அதைத் தொடர்ந்து நாகு, பெரியப்பா இவரைத் தெரியுதோ? என்று பக்கத்தில் இருந்த ஒருவரைக் காட்டி கேட்டா.

எட! இது 'புளிச்சல்' எல்லே என்றவர். "எட புளிச்சல் நீயும் இறந்து போனியோ? நான் கேள்விப்பட இல்லை" என்றவர் உன்ரை மனிசி இன்னும் மானிட உடம்பிலைதானோ? என்று இழுத்த பெரியப்பாவை தொடர்ந்து புளிச்சல், அவ வெளிநாட்டிலை பெரியப்பா. ஏதோ 'சீனியர் சிட்டிசன் கோம்மிலை' இருக்கிறதாகப் பெடியன் எழுதி இருந்தான். மனிசிக்கு யோகம் அடிச்சிருக்காம். வெள்ளைக் காறர்தானாம் சமைக்கிறது உடுப்பு தோய்க்கிறது எல்லாம். இப்பிடி ஒரு அதிஷ்டம் ஆருக்கு வரும். அப்பு நீயும் வா, வா எண்டு கடிதம் எழுதிக் கொண்டிருந்தான்.

அதுக்கிடையிலை ஒருநாள் நல்லா 'புளிச்சல் கள்ளை' அடிச்சுப்போட்டு இருட்டுக்கை சயிக்கினிலை வந்தன். மதகோடை மோதுப்பட்டதுதான் தெரியும். இப்ப இஞ்சை இப்பிடி மாறி இருக்கிறன். இப்பவும் எனக்கு பெயர் புளிச்சல்தான்.

நாகுதான் சொல்லிச்சு பெரியப்பா கனடாவிலை இருந்து வந்திருக்கிறார் எண்டு. அதுதான் உங்களைப் பார்த்துப் பேசிப்போட்டுப் போக வந்தனான் என்றார் புளிச்சல். இவர்களின் சம்பாசனைக்கு நடுவில் சரவணமுத்துர் திடீரெண்டு காற்றோடு காற்றாக வந்து மற்றக் கிளையில் அமர்ந்தார்.

"எட சரவணமுத்து என்னோடை கனடாவிலை சேர்ச்சிலை இருந்தாய். பிறகு உன்னை ஆளையே காணன் என்ன நடந்தது" என ஆச்சரியமாகக் கேட்ட பெரியப்பாவை நோக்கிய சரவணமுத்தர் தொடர்ந்து, நான் வாற வழியிலை கொழும்பு பக்கம் போனன் பெரியப்பா. அங்கை எங்கடை யக்கய்யா, யக்கா, பண்டார, மெனிக்கா, யக்கி, குவேனி எல்லாரையும் சந்திச்சன்.

"ஆரடாப்பா கேள்விப்படாத பேர்களாகக் கிடக்கு" என்று கேட்ட பெரியப்பாவை நோக்கி "பெரியப்பா எங்கடை ஜே.ஆர், சிறீமா எல்லாரும் சிங்கள பிசாசுகளாக மாறி கனத்தை மயான மரங்களிலை இருக்கினம். எனக்கும் சிங்களம் தெரியும்தானே. பக்கத்திலைபோய் இருந்து கேட்டுக்கொண்டு இருந்தன். இடையிலை யக்கய்யா அவர்தான் ஜே.ஆர். ஏய் பற தெமலு யக்கா" என்று இடையிலை பேச்சை நிற்பாட்டி போட்டார். நான் பறந்து இஞ்சை வந்திட்டன். அதுசரி என்ன அப்பிடி கதைச்சவர் என ஆவலாக் கேட்டார் பெரியப்பா. இல்லை பிரேமதாசா நாட்டை தெமிலுக்கு பிரிச்சு கொடுக்க போறாராம் எண்டு சிறீமா பிசாசை போய் மோகிளியாக மாறி பிரேமதாசாவை மயக்கி கலியாணம் முடிக்கட்டாம். தான் அவைக்கு மகனாக பிறந்து இதை தடுக்க வேண்டும் எண்டு திட்டம் போடுகினம். இது எங்கை போய் முடியப்போகுதோ? என தலையில் அடித்தார் சரவணமுத்தர்.

எட எங்கடை சின்னப்பு பிசாசும் வந்திட்டார் என்ற நாகு எல்லாரும் இருங்கோ எல்லாருக்கும் 'மாட்டுத் தலை சூப்' செய்து வைச்சிருக்கிறன். குடிச்சு, குடிச்சு கதையுங்கோ என்றுசூறி ஆலமரப் பொந்துக்குள் நுளைந்தா.

பெரியப்பா! "புல்லாகி, பூண்டாகி, கல்லாகி, மரங்களாய் பேயாய் கணங்களாய் எண்டு சொல்லுவினம். இனி எங்களுக்கு என்ன பிறப்பு கிடைக்கும்" என ஆவலாகக் கேட்டார் சின்னப்பு.

அவரைத் தொடர்ந்து பெரியப்பா, சின்னப்பு! நான் வெளிநாட்டிலை இருக்கிற காலத்திலை மனிசனா இருக்கிறபோதே எல்லாப் பிறப்பும் எடுத்திட்டன். இனி எனக்கு என்ன பிறப்பு என்று ஒருவித அலட்சியத் துடன் கூறிய பெரியப்பாவை விளங்காமல் பார்த்தார் சின்னப்பு. அதை அவதானித்த பெரியப்பா தொடர்ந்து இல்லை நான் இந்த நாட்டிலை இருக்கிறபோது செக்கண்ட் கிளாஸ் கிளறிக்கல் வேலை செய்தனான். எவ்வளவு மதிப்பா இந்த நாட்டிலை இருந்தன். வெளிநாட்டிலை கொட்டிக் கிடக்கு அள்ள வா....அள்ள வா....எண்டு அடிச்சு, அடிச்சு கூப்பிட்டாங்கள். அங்கை போனா என்ரை துறையிலை வேலை கிடைக்கும் எண்டு அலையா அலைஞ்சன். கிடைக்க இல்லை. பிறகு காஸ் ஸ்டேசனிலை அட்டெண்டர் வேலை தான் கிடைச்சுது. 'வயிறு எண்டு ஒண்டு இருக்கே' எண்டு அதை செய்தன். பிறகு சாப்பாட்டு கடையளிலை கோப்பை கழுவி டிஷ் வாசரா காட்சி அளித்தன். கனரக தொழிற்சாலை வேலையாளாகக் காட்சி கொடுத்தன். இன்சூரன்ஸ் ஏஜன், வீட்டு ஏஜன் என்று கடைசியில் வாயில் காப்போனாக மாறி காட்சி அளித்தன். இவ்வளவு பிறப்பும் அந்த 10 வருசங்களில் எடுத்து இப்ப பேயாக மாறி நிற்கிறன். இனியும் ஒரு பிறப்பு தேவையே? இனி எந்த பிறப்பு எடுத்தாலும் சமாளிக்க கூடிய தகுதி எனக்கு இருக்கு சின்னப்பு.

அதுசரி பெரியப்பா, வெளிநாடு போய் வந்தா மனிசராக இருக்கிறபோதுதான் வழக்கமாக வெளிநாட்டு பொம்பிளையைக் கூட்டிக்கொண்டு வருகினம் எண்டு கேள்விப்படுகிறம். நீங்கள் ஆரோ வெளிநாட்டு வெள்ளைக்காற பிசாசை கூட்டிக் கொண்டு வந்ததாக 'கிசு கிசுக்கள்' என்று இழுத்தார் சின்னப்பு.

எட இந்தப் பேய் உலகத் திலையும் கிசு, கிசு இருக்கே சின்னப்பு எனத் தொடர்ந்தார் பெரியப்பா.

தொடரும்.....

அருள்மிகு ஸ்ரீ நல்லூர் கந்தசுவாமி கோவில் – கனடா

ஸ்ரீ நல்லூர் சிவன் கோவில்
20 Nugget Ave #01 (McCowan/Shepperd)

ஸ்ரீ சபரி பீட ஐயப்ப சுவாமி
அலங்காரத்திருவிழா

ஐயப்பன் அடியார்களே!
நல்லூர் அருள் மிகு ஸ்ரீ கைலாசநாதர் சிவசன்னிதானத்தில் பரிவார மூர்த்தியாக வீற்றிருக்கும் ஸ்ரீ சபரி பீட ஐயப்பனுக்கு நிகழும் சித்திரபானு வருடம் ஆனி மாதம் 29 ம் நாள் சனிக்கிழமை (13 – 07 – 2002) 16 தினங்கள் அலங்காரதிருவிழா நடைபெற திருவருள் கூடியுள்ளது. எனவே ஐயன் அன்பர்கள் மாலையிலே நிகழும் பூஜை திருவிழாவில் கலந்து கொண்டு ஐயப்பசுவாமியின் திருவருளைப் பெற்று பெருவாழ்வு வாழ தங்களை பணிவன்போடு அழைக்கின்றோம்.

திருவிழாவிபரம்

மாலை 07.00 ஐயப்பசுவாமிக்கு அபிசேகம் மாலை 08.00 மணிக்கு மூலவர் பூஜை மாலை 08.15 மணிக்கு வசந்த மண்டபபூஜை தொடர்ந்து வேதம்,ஆசீர்வாதம், பஞ்சபுராணம் சுவாமி உள்வீதி வலம் வருதல் அருள்பிரசாதம் வழங்கல்.

விஷேடதினங்களில் அபிஷேகம், நவக்கிரகசாந்தி ,சர்ப்பசாந்தி,கலத்திர தோஷ சாந்தி ,பிரசாதபூஜை, திருவீழாக்கள்,திவசம், மோட்சஅர்ச்சனை ,நூல்கட்டல்,அன்னதானம் என்பன நடைபெறும்.

உபயம்,திருவீழா செய்யவிரும்பும் அன்பர்கள் ஆலயத்துடன் தொடர்பு கொள்ளவும

ஆலயத்தில் நடைபெறும் பூஜை ஆபிசேகம், என்பனவற்றில் கலந்துகொண்டு பேரருள் பெற்று பெருவாழ்வுவாழ்க.

ஜாதகம்பலன்பார்த்தல்,விவாகப்பொருத்தம்,குறிப்புஎழுதுதல், தோடிபாரிகாரம்செய்தல்,வீடுகுடிபுதல்,சுதுசாந்தி,திருமணம் போன்றவற்றைச்செய்திடதொடர்புகொள்க

மேலதிகத்தொடர்புகளுக்கு (416) 293 –9004

'உதயன் 2002' சிறுகதைப் போட்டியில்
நான்காவது பரிசு பெற்ற தேவிகா பாலச்சந்திரனின்
(ஸ்காபரோ) சிறுகதை

உறவுக்காக...!

(சென்ற வாரத் தொடர்ச்சி)

அதுகளுக்கும் தாயைப் போல என்னைப் பிடிக்கேல்லை!

அம்மா. புதுசுதானே.. கொஞ்ச நாள் போக பழகிவிடுவினம்..

எனக்கு என்னை நினைச்சாத்தான் கவலை. நாலு இரண்டு என்று பிள்ளையளுமாச்சு. அவளைப் பெத்தவையள் பாராமுகமாக இருக்குமாப்போல என்னால முடியேல்லை..!

அம்மா. இந்தப் பிரச்சனையால எனக்கு நிம்மதியில்லை. இதுகளும் அனாதைப் பிள்ளையள் போல அலையுதுகள்!

ஊரிலை இருந்து பொம்பிளை எடுத்தம். குடும்பப் பொறுப்பா இருக்கும்.. வயசான என்னைப் பார்க்கும் எண்டு ஒன்றுமில்லை! குடும்ப மானத்தையும் சந்தி சிரிக்க வைச்சுவிட்டு உன்னையும் ஏமாளியாக்கிப் போட்டு..!

கனகம் சொல்லச் சொல்ல அப்பாவின் முகம் கோபத்தில் மாறுவதை ஜஸ்மியால் உணர முடிந்தது.

அவன் தமையன் நல்ல மாதிரி இருக்கிறான். கொஞ்சம் இறுக்கிப் பிடிச்சா தருவினம்.!

சரி.. அம்மா. சலித்துக் கொண்டவன் இந்தப் பிள்ளையளுக்கு ஏதேனும் குடிக்கக் கொடேன்!

இந்த மாசம் இஞ்ச தங்கிற நாலுநாள் காசில வருமதி இருக்குது.. எனக்கு வர்ற காசிலை நானே சீவிக்க முடியேல்லை..!

கனகம் முணுமுணுத்தவாறே கொடுத்த குளிர்பானங்களை அருந்திவிட்டு வெளியே வந்தபோது .. சுகி!

எங்களைக் கொண்டே வீட்டை விட்டுப்போட்டு போங்கோவன்..?

எனக்கு வேலைக்கு இரண்டு மணி நேரம் லேட். நீ.. பிள்ளையளைக் கூட்டிக் கொண்டு பஸ்ஸில போ...

நடுத்தெருவில விட்டிட்டுப் போறது. கை வந்த கலை!

அம்மாவும் அப்பாவும் எந்நேரமும் முறைத்துக் கொள்வது ஜஸ்மிக்கு விசித்திரமாக இருந்தது. பிழை செய்தால் ஷாசி சிரிப்புடன் தான் கண்டிப்பாள். முகத்தை உம்மென்றே வைத்துக் கொள்ள மாட்டாள். ஜசியை தோளில் போட்டுக் கொண்டு.. விறு விறு என்று நடக்கும் அம்மா சுகியின் பின்னால் ஜஸ்மி ஓடி ஓடிப்போக கால் வலித்தது. கடுங்குளிரில் கைகள் விறைத்தன. வீடு வந்து சேரும் போது நன்றாகக் களைத்து விட்டிருந்தார்கள்.

சுகி அவசர அவசரமாக கிடந்த சோறு கறிகளைக் குழைத்து சாப்பிடுங்கோ.. நானும் சாப்பிட வேணும்.. ஊட்டி விட ஜஸ்மி கஷ்டப்பட்டு விழுங்க. ஜஸ்மியைப் போல் ஜஸியால் முடியவில்லை. உணவுப் பழக்கங்கள் மாறுபட்டதில் தொண்டையில் உணவு இறங்க மறுத்தது. அம்மா வேண்டாம்! என்ற பாவனையில் தலையை ஆட்டி மறுக்க சுகி கவனிக்காது கடமையே என்று மேலும் மேலும் ஊட்ட அவ்வளவும் வாந்தியாக வெளியே வந்தது. முன்பெல்லாம் அம்மா அடித்தது புகைப்படலம் மாதிரி ஞாபகம் வர..

ஸாரி அம்மா.. நானே கிளீன் பண்ணிவிடுறன்..! ஓடிப்போய் ஸ்பொஞ்ச் எடுத்து வந்தாள்.

இஞ் சை விடு.. இருக்கிறதையும் அசிங்கப்படுத்தப் போறாய்..! என்று சுகி பறித்து சுத்தம் செய்ய அம்மாவுக்கு உதவுகிறோம் என்ற ஆர்வம் நீர்க்குமிழி போல வற்றிப் போனது ஜஸ்மிக்கு

ஜஸ்மி.. இதுதான் உங்கட அறை. தம்பியோட படுத்துக்கொள். அம்மாவுக்கு கன வேலை இருக்கு.. குழப்படி செய்யக் கூடாது. ஓ.கே!

சொல்லிவிட்டு சுகி அகல.. சுவரில் வண்ணப் படங்கள் புத்தக அலமாரி .. விளையாட்டுப் பொருட்கள் தனிக்கட்டில் என்ற எதிர்பார்த்தது எட்டிப் பார்த்த ஜஸ்மியின் முகம் வெளுத்து ஒரு மூலையில் உடுப்புகள் குவிக்கப்பட்டு அங் கொன்றும் இங் கொன்றுமாக சப்பாத் துக்கள், பேப்பர்கள், சிதறுப்பட்டு கட்டிலிலும் துணிகள் பரவியிரு ந்தன. ஜஸ்மி ஷாசியை நினைத்தாள். அவளுக்கு இதெல்லாம் பிடிக்காதே. உடுப்புக் களை தனக்க தெரிந்த மாதிரி மடித்தாள்.

சிதறுண்டு கிடந்த வறை ஒரமாக அடுக்கி வைத்தாள்.. கட்டிலை சீராக்கிவிட்டாள். ஜசி கட்டிலில் எறிப் படுத்து ஷாசி.. ஷாசி.. என்று அரற்றிக் கொண்டி ருந்தான். அவனுக்குப் பக்கத்தில் அமர்ந்த ஜஸ்மி. அவன் தலையை ஷாசியைப் போல் கோதிக் கொடுக்க நனறாக உறங்கிவிட்டான். வெளிளே அம்மா சுகி காரசாரமாக யாருடனோ தொலைபேசியில் பேசிக் கொண்டிருப் பது தொந்தது. ஷாசி கொடுத்த புத்தகத்தை எடுத்தாள் படிக்க விடாமல் அம்மா சுகியின் உரையாடல் அவளைக் குழப்பியது.

தகுதிக்கு மேல் வாக குறுதியளை குடுக்கிறது. பிறகு பிள்ளையள் எப்படிப் போனால் என்ன என்று ஒதுங்கிறது!

.....

வசதி வரேக்க கொடுப்போம் என்று ஆறுவருஷமா.. இதே பல்லவிதான்

.....

இப்ப ஏன் கண்ணைக் கசக்கிறாய்? எதுவும் தா என்ற கேட்க வரேல்லை. எனக்கும் மான ரோஷம் இருக்கு. அவையளின் வாயை அடைக்க வேணும். அதுக்கு நான் வேலைக்குப் போக வேணும். பிள்ளையளை நீதான் வந்து பார்த்துக் கொள்ள வேணும்.

.....

என்ன திடீரென்றோ.. அண்ணா.. அண்ணி வேலைக்குப் போக மூன்று வருஷமா பிள்ளையளைப் பார்த்திருக்கிறாய். என்ர பிள்ளையளைப் பார்க்கிற கடமையும் உனக்குத் தானே

.....

என்ர மனிசன் அப்படி இப்பிடி என்றால் நாங்கள் தான் கண்டும் காணாத மாதிரி இருக்க வேணும்..

. . . .

ஐயோ அம்மா அது அடிமை. . . வாழ்க்கை இல்லை

. . .

அப்ப வரமாட்டாய். விடு.. விடு.. என்னிலையும் என்ர பிள்ளையளிலையும் எப்பதான் உனக்கு அக்கறை இருந்தது. நாங்கள். . . அனாதையள். . . அனாதையள். . . .! பட் டென்று போனை அறைந்து வைத்து விட்டு ஷோபாவில் சரிந்து அழும் அம்மாவைப் பார்க்க ஜஸ்மிக்க அழுகை வந்தது.

சில சமயங்களில் இவள் அழுதாலோ கோபமாக இருந்தாலோ ஷாசி துடித்துப் போய்விடுவாள். இவளைத் தடவி முத்தமிட்டு நூறுதரம் மன்னிப்புக் கேட்பாள். தாயை நெருங்கி கண்ணீரைத் துடைத்தவாறே அம்மா அழாதே! என்றாள். அப்படியே இழுத்து அணைத்துக் கொண்ட சுகியின் அணைப்பின் இறுக்கத்தில் ஜஸ்மிக்கு பயமாக இருந்தது. அதன்பிறகு சுகி தொலைபேசியில் பலருக்கும் அழைப்பு விட வந்தவர்கள் சுகியின் நண்பிகள். ஜஸ்மியின் கன்னத்தை கிள்ளியும் தடவியும் ஜஸ்மிக்கு அவர்களின் பேச்சும் கலகலப்பும் நிறையப் பிடித்தது. அவளுக்குக் கூட நிறைய நண்பர்கள் உண்டு.

தகப்பன் மாதிரி நல்ல நிறம். முகச்சாயலும் அப்பிடித்தான். .. இருக்குது!

தமிழ் கதைக்க வராது. இங்கிலீஷ் அந்தமாதிரி கதைப்பினம்.

(தொடர்ச்சி.. 16 ம் பக்கம்)

கீழ்திசை மாகாண சுற்றுலா
ஓகஸ்ட் 3 முதல் 10 வரை
★நோவாஸ்கோஷியா ★நியூபிரன்ஸ்விக்
★பிறின்ஸ் எட்வேட் ஐலன்ட் ★கியூபெக்
☞ ஹரட்டானிக் பெகின்கோவ்
☞ ஜேப் பிறெட்டன் தீவு
☞ அலைக்சான்டர் கிரஹம் பெல் காட்சிச்சாலை
☞ கொன்பெடரேஷன் பாலம்
☞ உலகின் அதி உயர்ந்த அலைகள்
☞ மக்னற்றிக் குன்று
☞ பின்னோக்கிப் பாயும் நீரோட்டம்
☞ அவொன் வீ
☞ ஜெநசலம் லசக்கிறோறாமா
☞ மற்றும் பல.....
★ சொகுசு பஸ்
★கப்பல் பயணம்
றேடியன்ட் ரூவர்ஸ்
416-920-5641

மாவீரர்களின் இரத்தினாலேயே புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது

-விடுதலைப்புலிகளின் பிரமுகர்

அரசும் விடுதலைப்புலிகள் இயக்கமும் கையொப்பமிடடுள்ள புரிந்துணர்வு ஒப்பந் தம் 17 ஆயிரத்து 600க் கும் மேற்பட்ட மாவீரர் கள் இரத்தத்தினால் எழுதப்பட்ட வரலாற்றுச் சுவடு ஆகும் மாவீரர்களின் உயிர்த்தியாகங்கள் ஈழத்தமிழர்களை சிந்திக்கச் செய்துள்ளன அவர்களின் உன்னத தியாகமே இன்று தமிழர்களை தலைநிமிர வைத்துள்ளது என விடுதலைப்புலிகளின் அர சியல் துறைப் பிரமுகர் பாப்பா தெரிவித்தார்.நேற்று முன்தினம் புதன் கிழமை தீவகக் கோட்ட விடுதலைப் புலிக ளின் அரசியல் பணிமனையின் திறப்பு விழா வில் பங்குபற்றி சிறப்புரையாற்றும் போதே இப்படி தெரிவித்தார் பாப்பா.இந்த வைபவத்தில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது. இன்று உலகமே வியந்து பார்க்கும் அள வுக்கு எமது தியாகத் தீபங்கள் பல சாதனைக ளைப் படைத்துள்ளன.அந்த மாவீரர்களின் குருதியின் பயனாகவே ஸ்ரீலங்கா அரசு இந்த இனப்பிரச்சினையை தீர்த்து வைக்க வேண்டும் என்ற நிலையில் எமது தலைவருடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றைச் செய்துள்ளது.

நாங்கள் யாழ்.குடாநாட்டை விட்டு வெளியேறிச் சென்ற 1995ஆம் ஆண்டுக்குப் பின் னர் 9ஆயிரம் போராளிகளை இழந்துள் ளோம். அவர்களை வன்னி மண்ணில் விதைத்து விட்டே இங்கே அரசியல் வேலை செய்வதற்கு ஆயுதமற்ற நிராயுதபாணிகளாக வந்துள்ளோம். வன்னி மண்ணில் போர் மேகம் சூழ்ந்திருந்த வேளையில் எதிரியின் பிடியில் இருந்து ஒரு கிலோ மீற்றர் தூரத்தைக் கூட கைப்பற்ற நூற் றுக்கணக்கான போராளிகளை இழந்துள் ளோம். அவ்வாறு அளப்பரிய தியாகத்தின் மூலம் பெற்ற வெற்றியின் மத்தியில் எமது மண்ணை எதிரியிடம் கொடுக்க ஒரு போதும் அனுமதிக்க மாட்டோம்.

தீவகப் பகுதி மக்களைப் பொறுத்த மட்டில் கடந்த ஆறு வருடங்களாக கடற்படை மற்றும் தேசவிரோத சக்திகளினால் பல துன்பங்களை அனுபவித்து வந்துள்ளீர்கள். ஆனால் இனி நிலைமை அவ்வாறு அமையாது.

அத்துடன் இந்த சமாதான முயற்சி வெற்றி பெறவேண்டும் எனின் அதற்காக எங்கள் உயிர்களை இந்தநிமிடத்தில் விடக்கூட எங் கள் போராளிகள் தயாராகவே உள்ளோம். மக்கள் எழுச்சியின் மூலமே உலகநாடுகள் எல்லாம் சுதந்திரம் பெற்றுள்ளன. அந்த நிலை எம் இனத்திற்கும் ஏற்பட்டுள்ளது. எனவே எமது விடிவும் வெகு தொலைவில் இல்லை எனக் கூறினார்.

இந்நிகழ்வில் பங்குபற்றி உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் பேசுகையில் கூறியதாவது:-

12 வருடங்களாக அடிமைப்பட்டிருந்த இத் தீவுப் பகுதி இன்று விடுபட்டு புதுப் பொலிவு டன் காட்சி அளிக்கின்றது. பல துன்பங்க ளுக்கு மத்தியில் வாழ்ந்த நீங்கள் எமது கூட் டுக்கட்சிக்கு வழங்கிய பேராதரவினை நாங் கள் ஒரு போதும் மறக்கமாட்டோம்.

எங்களு டைய கோட்டை தான் தீவுப்பகுதியென மார் தட்டியவர்களுக்கு மத்தியில் நீங்கள் கொடுத்த ஆதரவு அளப் பரியது அது போலவே இன்று நீங் கள் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் ஆதரவுவழங்கி வருகின்றீர்கள். ஆயுதமின்றி அரசியல் பணிகளை மேற் கொள்ள வந்துள்ள புலிகளுக்கு காப்பாளராக விளங்க வேண்டியவர்கள் நீங்களே. இத னையே செம்மணன் தாக்கப்பட்ட போது, நீங் கள் கொடுத்த உரிமை குரலினால் எதிரிப் படை விலகி ஓடியது. இதன் மூலம் ஏற்பட விருந்த பெரும் விபரீதம் தவிர்க்கப்பட்டது எனவும் கூறினார். அடுத்து பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா உரையாற்றும்போது, ஆயுதங் கள் இன்று உறங்கிக் கிடக்கிறதே தவிர தமி ழர்களின் விடிவு இன்னும் எட்டப்பட வில்லை. எனவும் இராணுவத்தில் ஒரு பகுதி இந்த சமாதானத்தினை குழப்பி மீண்டும் போர் கலாசாரத்தினை தூண்ட நினைக்கிறது. அதற்கு ஒரு போதும் இடமளிக்கக் கூடாது எனவும் தெரிவித்தார்.

வை.கோவை.....(24ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த முக்கியமான பிரச்சினையில் பா.ஜ.க அரசின் நிலைப்பாட்டையொட்டி பொடோ சட்டத்தை வைகோ தலைமையிலான ம.தி.மு.க வும் ஆதரித்தது என்பது சுவாரசியமான விர்யம். இருப்பினும் தற்போது வைகோ பகிரங்கமாக பொடோ சட்டத்தை மீறுகிறார் என்பதை கவனிப்பது அதிர்ச்சி அளிக்கிறது. அதன் மூலம் அவர் மத்திய அரசின் அதிகாரத்தை கேள்விக்குரியதாக்கி சவால் விடுகிறார். மத்தியிலுள்ள தேசிய ஜனநாயகக் கூட்டணியில் அங்கம் வகித்து மத்திய அமைச்சர்களாக அதன் உறுப்பினர்கள் பணிபுரியும் கட்சியின் தலைவரான வைகோ குத்துக்கரணம் அடித்திருப்பதாக இது அமைந்துள்ளது. இப்படியிருந்து ஏதோ ஒரு தீய திட்டத்துடன் அவர் விடுதலைப்புலிகள் போன்ற ஒரு தடைசெய்யப்பட்ட பயங்கரவாத அமைப்புக்கு பகிரங்கமாக ஆதரவு தெரிவிக்கிறார்.இதனை ஒடுக்கத் தவறினால் சிமி அல்கொய்தா போன்ற தடை செய்யப்பட்ட அமைப்புக்கள் உள்ளிட்ட நாட்டின் பல பகுதிகளில் செயல்படும் பல அடிப்படைவாத அமைப்புக்களின் ஆதரவாளர்கள் தைரியம் அடைந்து இப்படிப்பட்ட அபாயகரமான அமைப்புகளுக்கு இதுபோன்று பகிரங்கமாக ஆதரவு தெரிவிக்கத் தொடங்குவதுடன் மத்திய அரசு பார்வையாளராக இருக்கவேண்டும் என்றும் எதிர்பார்ப்பார்கள்.வைகோவின் பேச்சு விவரம் சந்தேகத்துக்கு இடமின்றி சட்டவிரோத நடவடிக்கைகள் (தடுப்புச் சட்டம்) 1967 மற்றும் பொடோ சட்டத்தின் பிரிவுகளின்படி குற்றமாகும். இந்த தனி நபர் மீது பொடோ சட்டத்தின் கீழும் சட்டவிரோத நடவடிக்கைகள்(தடுப்பு) சட்டத்தின் கீழும் நடவடிக்கை எடுத்து நாட்டின் சட்டங்களை முற்றிலும் மதிக்காமல் மீறி பயங்கரவாத அமைப்பை பகிரங்கமாக ஆதரித்து பேசிய தனி நபரை கைது செய்வதைத் தவிர எங்களுக்கு வேறு வழியில்லை.

இந்தச் சம்பவத்தை ஒதுக்கித் தள்ளுவது என்பது பயங்கரவாத அமைப்புக்களுக்கு எதிராக தீவிரமான தடுப்பு நடவடிக்கைகளை எடுக்க என்னுடைய அரசும் மத்திய அரசும் எடுத்து வரும் முயற்சிகளை வேடிக்கையானதாக்கிவிடும் என்பதால் நான் இதை உங்களது கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.மக்களவையில் தற்போது உறுப்பினராக உள்ளவரும் மத்தியில் உள்ள ஆளும் தேசிய ஜனநாயகக் கூட்டணியில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சி ஒன்றின் தலைவருமான ஒருவர் சம்பந்தப்பட்ட இந்த அதிர்ச்சி அளிக்கும் சம்பவத்தை மத்திய உளவு அமைப்புகள் நிச்சயமாக உங்களது கவனத்திற்கு கொண்டு வந்திருக்கும் என்று நான் உறுதியாக நம்புகிறேன். அதேசமயம் இந்த கவலையளிக்கும் பிரச்சினையில் தமிழ்நாட்டு மக்களின் கவலையைப் பிரதிபலிக்க நான் கடமைப்பட்டுள்ளேன். இவ்வாறு ஜெயலலிதா தனது கடிதத்தில் கூறியுள்ளார்.

தமிழ் மக்களின் நெருங்கிய நண்பர்

ரவி நடராஜா

தற்போது இரண்டு இடங்களில் சேவையாற்றுகின்றார்

- வாகன விபத்துக்குள்ளாகியவரின் நஷ்டஈடு பற்றி தகுந்த ஆலோசனைகள் வழங்கப்படும்
- உரிய நஷ்டஈடுகள்
- மற்றைய இழப்புகள்
- விபத்துக்குள்ளாகியவரின் சம்பள இழப்பீடுகள்
- மற்றும் வாகன விதிமுறைகளை மீறிய குற்றங்கள்

Accident & Traffic Ticket

(12 Years Insurance Claims Experience)

Weston நகரில்
2095 Weston Road, Suite 203,
Toronto, ON
Tel: 416-245-6555
Fax: 416-245-7766

Scarborough நகரில்
2390 Eglnton Ave. E., Suite 223,
Scarborough, ON
Tel: 416-755-2801
Fax: 416-755-8030

Century 21

Affiliate Realty Inc.
80 Corporate Dr., Suite 208
Toronto, ON, M1H 3G5
416-290-1200

Thiravie Murugesu (B.A Ceylon)
11 வருடங்கள் இலங்கை மத்திய வங்கியில் கடமையாற்றியவர்

நீங்கள் பசி நோக்காது கண் துஞ்சாது சேர்த்த பணம் காலவெள்ளத்தில் கரைந்திடாமல் உங்களுக்கென ஒரு வீடு வேண்டாமா?

வீடு வாங்க, விற்க அடமானம் சம்பந்தமான ஆலோசனைகளுக்கு பெற

அழையுங்கள்
திரவி. முருகேசு

416-290-1200
416-298-8643 Res.

தொடர் நாவல்

திசை மாறிய தென்றல்

தொடர்: 9 - அகில், U.K

கடந்த வாரத் தொடர்ச்சி.....

"ஸாரி சும்மா தமாசுக்கு சொன்னனான். இரவு துணைக்கு பக்கத்து வீட்டு மாமி வருவா. சரி நீங்க சாப்பிட வாங்க"

அரசு சாப்பாட்டு மேசையில் வந்து அமர்ந்து கொண்டான். தேன்மொழி அரசுக்கு சாப்பாடு போடும் போது தனக்கும் ஒரு தட்டில் சாப்பாடு எடுத்துக் கொண்டு மேசையில் வந்து அமர்ந்து கொண்டாள்.

சாப்பிட்டபடியே அரசு கேட்டான் "என்ன தேன்மொழி புதுவிதமான சாப்பாடாக இருக்குது எங்க இந்த 'ரெசிப்பி' கிடைத்தது?"

ஒரு ஆங்கில் பத்திரிகையில் பார்த்தேன். இதற்கு பெயர் 'சிக்கன் ராப்' இந்த சாப்பாடு அமெரிக்கா இங்கிலாந்தில் பாப்புலர். சரி எப்படி இருக்கு என்று பார்ப்பம் என்று செய்து பார்த்தேன். நல்லாக இருந்தது . அதுதான் உங்களைக் கூப்பிட்டேன்"

"சாப்பாடு சும்மா சொல்லக்கூடாது ரொம்ப நல்லா இருக்குது" சாப்பிட்டபடி சொன்னான்.

"பொய் சொல்லாதீங்க"

"உண்மையைத்தான் சொல்லுறன்" இருவரும் சாப்பிட்டார்கள். அரசு சாப்பிட்டு கைகழுவி விட்டு சோபாவில் அமர்ந்தபோது தேன்மொழி டீயோடு வந்தாள். சாப்பிட்ட பிறகு டீ குடிப்பது அரசுக்கு ரொம்பவும் பிடிக்கும் என்பதை ஒருநாள் கதையோடு கதையாக அறிந்து கொண்ட தேன்மொழி அன்றைய நாளுக்குப் பிறகு அரசுக்கு சாப்பாட்டுக்குப் பிறகு டீ கொடுப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தாள். தேன்மொழி நீட்டிய டீ கோப்பையை கையில் வாங்கிய படியே 'தாங்ஸ்' என்றான்.

"அரசு ஒரு விசயம் தெரியுமா?" என்று அவள் சொல்ல, அவள் என்ன சொல்லப்போகிறாள் என்பதை உணர்ந்து அவளைப் பார்த்தான் அரசு.

"நண்பர்களிடமோ, நெருங்கிப் பழகியவர்களிடமோ தாங்ஸ் என்று சொல்லக்கூடாதாம் தெரியுமா?

"அது தெரியாது, ஆனா இனி நான் உங்களிடம் சொல்லமாட்டேன் போதுமா?" என்று அரசு புன்னகைத்தான்.

"அரசு உங்களை இரண்டு விசயத்துக்காகக் கூப்பிட்டனான். ஒன்று சாப்பிடுவதற்கு மற்றது அண்ணாவைப்பற்றிப் பேசுவதற்கு"

"அவருக்கு என்ன?" பதட்டத்துடன் கேட்டான்.

"அது வந்.....து" இழுத்தாள்.

"தேன்மொழி என்னிடம் சொல்லலாம் என்றால் சொல்லுங்க இல்லை என்றால் பரவாயில்லை"

"நோ!.....நோ!.....அப்படியெல்லாம் இல்லை. பல தடவை அண்ணாவிடம் சொல்லிவிட்டேன் திருமணம் செய்யச் சொல்லி. ஆனா அவர் சொல்லுறார் எனக்குத் திருமணம் நடந்த பின்புதான், தான் செய்வன் என்று ஒவ்வொரு முறையும் மறுக்கிறார். எனக்கு நடந்த பின்புதான் அவர் செய்யிறதெண்டால் குறைந்தது ஐந்து வருடங்கள் செல்லும். நான் இப்ப பிளஸ் ரூ படிக்கிறேன். பிளஸ்ரூ முடிச்ச பிறகு டிகிரி முடிக்க வேண்டும். எனவே நீங்கள் தான் அண்ணாவிடம் சொல்லி அவரைச் சம்மதிக்க வைக்க வேண்டும்"

"நீங்க அதைப்பற்றி யோசிக்க வேண்டாம். நான் அவரைச் சந்தித்துப் பேசிறன். சரி தேன்மொழி நான் வாறன்" என்று அரசு புறப்பட வாசல்வரை வந்த தேன்மொழி, "அரசு நீங்க போறப்போ பக்கத்து வீட்டு மாமியை வரச்சொல்லிவிட்டுப் போங்க"

"நான் செல்லிவிட்டுப் போறன்" என்று வெளியே வந்த அரசு பக்கத்து வீட்டு மாமியிடம் சொல்லிவிட்டு ரெயில் ஏறி விடுதிக்கு வந்தான். அடுத்தநாள் மதிய இடைவேளையில் மூர்த்தியை சந்திக்க 'ஸ்ராப் ரூமுக்கு' சென்றான்.

"வாங்க அரசு!" என்று மூர்த்தி வரவேற்றார். பக்கத்தில் இருந்த சக ஆசிரியர்களிடம் அரசை அறிமுகம் செய்து வைத்தார். அவர்களிடையே அரசுக்குப் பாடம் எடுக்கும் சில ஆசிரியர்களும் அமர்ந்திருந்தார்கள். அவர்களில் ஒருவர் மூர்த்தியைப் பார்த்து சொன்னார் "சார் இவர் சரியான இன்டலிஜென்ட்..." வகுப்புக்கு வந்த முதல் நாளே இவரைப்பற்றி புரிஞ்சுகிட்டன் என்று அவர் சொல்ல அரசு தலையைக் குனிந்து புன்னகை பூர்த்தான்.

"அரசு ஏதாவது அலுவலா?" என்று மூர்த்தி கேட்க

"ஓம்சார், உங்களிட்ட நான் தனியாகப் பேசவேண்டும்" அதைத்தொடர்ந்து மூர்த்தி எழுந்து வெளியே வர அரசு அவரைப் பின் தொடர்ந்தான். வெளியே பெரிய வேப்பமரம் பேசுவதற்கு ஆதரவாக வேர்களை ஆசனமாக்கியிருந்தது. அத்தோடு நிழலும் குளிர்ச்சியைக் கொடுத்தது. இருவரும் அமர்ந்து கொண்டார்கள். வேப்ப மரத்தின் மகிமையைப்பற்றி முன்பு ஒரு சோப் விளம்பரத்தில் படித்ததை அரசு மனதுக்குள் நினைத்துக்கொண்டான்.

"என்ன அரசு ஏதோ பேச வேண்டும் என்று வந்துவிட்டு இப்ப சிந்தனையில இருக்கிறீங்க? மூர்த்தி அரசின் சிந்தனையைக் கலைக்க அரசு நேரடியாக விசயத்துக்கு வந்தான்.

"சார் நேற்று தேன்மொழி சாப்பாட்டுக்குக் கூட்பிட்டிருந்தா...."

"காலயில வீட்ட போய்விட்டுத்தான் கல்லூரிக்கு வந்தேன், அப்ப சொன்னா நீங்க நேற்று வீட்டுக்கு வந்திட்டுப் போனதாக"

"அப்ப என்னிடம் ஒரு விசயத்தைச் சொன்னா! நீங்க உங்க திருமணத்தை பின் போடுவதாகவும் தனக்காக 'வெயிட்' பண்ணாம உங்களைத் திருமணம் செய்யச்சொல்லி சொல்லும்படி"

"அரசு! எனக்கு உறவு என்று சொல்லிறதுக்கு இருக்கிறது அவள் மட்டும்தான். அவளை நல்ல இடத்தில பிடிச்சுக் கொடுத்திட்டன் என்றால் அதற்குப் பிறகு எனக்கொரு வாழ்க்கையை அமைச்சிடுவேன். எனக்கு இருக்கிற மற்றுமொரு ஆசை அவளை நல்லாப் படிக்கவைக்க வேண்டும் என்பது"

"அதை நீங்க திருமணம் செய்த பிறகுகூட செய்யலாம்தானே சார்?"

"முடியும்! ஆனா எனக்கு திருமணம் ஆனபின் செய்யிறதைவிட, அவளுக்கு திருமணத்தை செய்யிறது தான் எனக்கு நல்லதாகத் தெரியுது. அப்பதான் என்னால முடிந்தவரை சிறப்பாகச் செய்யமுடியும் என நினைக்கிறேன். இப்ப எனக்கு இருக்கிற இலட்சியமே அவளின் முன்னேற்றம்தான்"

"அப்ப இதுதானா உங்க முடிவு?"

"ஸாரி அரசு! இதுதான் என்னுடைய முடிவு"

"சரி சார் கிளாசுக்குப் போக நேரம் வந்து விட்டது. நான் வாரன்" என்றவாறு அவரிடம் இருந்து விடைபெற்றுக்கொண்டு கிளாசுக்குப் போனான். "நீங்க யோசிக்காதீங்க! நான் அவரை சம்மதிக்க வைக்கிறன்" என்று தேன்மொழியிடம் சொன்னது முடியாது போய்விட்டதே என்ற ஆதங்கத்தால் வகுப்பில் பாடத்தை கவனிக்க முடியவில்லை. இதை எப்படி தேன்மொழியிடம் சொல்வது என்ற நினைப்பிலேயே மதியநேர வகுப்பு முடிந்தது. அன்று மாலை தேன்மொழியை டெலிபோனில் தொடர்பு கொண்டு மூர்த்தியுடன் பேசிய விபரத்தைச் சொன்னான்.

அத்தியாயம் - 8

அரசு கல்லூரியில் இருந்து விடுதிக்கு வந்தபோது தகவல் ஒன்று அவனுக்காகக் காத்திருந்தது. ரவி திருச்சியில் இருந்து வந்து சென்னையில் தங்கியிருப்பதாகவும் உடனே தன்னைச் சந்திக்கும் படியும் எழுதியிருந்தான். அக்கடிதத்திலேயே தான் எங்கு தங்கியிருக்கிறேன் என்ற முகவரியையும் எழுதியிருந்தான். அரசு அவனைச் சந்திப்பதற்காக ஆட்டோ பிடித்து குறிப்பிட்ட முகவரிக்குச் சென்றான். வாசலில் "வாச்மென்" நின்றிருந்தான். அரசு அவனிடம் கேட்டான். "ரவியென்று யாராவது திருச்சியில இருந்து இங்க வந்து தங்கியிருக்காங்களா?" அரசை ஒருதரம் நன்றாகப் பார்த்த வாச்மென் கேட்டான் நீங்கதானா அரசு!

"ஓம்"

"அவர் உள்ளதான் இருக்கிறார். நீங்க வந்தா கேட்டைத் திறந்து விடும்படி சொன்னவர். நீங்க போங்க" என்றவாறு கேற்றைத் திறந்து விட்டான். அரசு உள்ளுக்குள் சென்று அழைப்பு மணியை அழுத்தியபோது ஒரு இளைஞன் கதவைத் திறந்தான். அவன் கேட்டான், "ஹலோ! நீங்கள்தானா அரசு?"

"ஓம்"

"வாங்க உங்க நண்பர் காத்திருக்கிறார்" உள்ளே போனபோது ரவி இருந்தான்.

தொடரும்.....

PROMOTERS AUTO CENTER

பத்து வருடங்களை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்த எம் நிறுவனத்திற்கு விருதுகளும் பாராட்டுகளும் கிடைத்த வண்ணம் உள்ளன.

CELEBRATING 10 YEARS OF SERVICE 1992-2002

We Offer Following Service

- *Air- Condition Service and Repair*
- *Annual Inspection Sticker for Vans & Cube Vans*
- *Brake Repair*
- *Body Work & Painting*
- *Computerzsed Wheel Alignment*
- *Clutch Repair*
- *Drive Clean Test*
- *Drive Clean Repair Facility*
- *Engine Rebuilding*
- *Electrical Systems*
- *Exhaust Systems*
- *Engine Shampoo*
- *Front end & Rear end Works*
- *Fuel Injection & Carburetor*
- *Fuel Injector Cleaning*
- *Heating Systems Repair*
- *Insurance Claims Works (All Types)*
- *Oil & Filter Change*
- *Safety Inspection & Certification (While you wait)*
- *Tune-up*
- *Tire, Wheel Balancing*

416-285-8608 416-752-9797

WARDEN - SHERRY CENTRE

773 Warden Avenue, Unit 08,

Scarborough, Ontario

www.promotersauto.com

வாழ்க்கையின் உயர்வை நோக்கி.....

யோகாச்சார்யா வி.என். பரராஜசிங்கம் (416) 266-3413 e.mail:yogacharya@hotmail.com

அண்மையில் ஒரு காற்றலைகளில் மிதக்கும் அரங்கமொன்றில் ஓர் அடுக்கு மொழியாளர் தெரிவித்திருந்த 'அறிவீனமான' கருத்து ஒன்றைப்பற்றி எனது மாணவர்கள் என்னிடம் கூறி விசனித்தனர். அதாவது 'அகம் - புறம்' என்ற தலைப்பில் நடைபெற்ற கருத்துப் பரிமாறல்களில் இந்த 'தவ்வல்', "அகத்தைப் பற்றிப் பாடிய - கூறிச்சென்ற ஞானிகள் புறத்தைப்பற்றிக் கூறவில்லையே" என அங்கலாய்த்திருக்கிறார். ஒரு விடயம் பேச முதல் கொஞ்சமாவது அதுபற்றி சிந்தித்திருக்க வேண்டும். "தங்களது அறிவீனத்தைப்பறை சாற்றுகிறார்களே; வானொலி மைக் கிடைத்தும்" எனப்பலர் கூறினர்.

முதலில் அகம் என்றால் என்ன என்று பார்ப்போம். "அகத்தின் அழகு முகத்தில் தெரியும்" என்பது பழமொழி. "அஹம் பிரம்மாஸ்மி" என்ற வடமொழிச் சுலோகம்; உள்ளுக்குள் பிரம்மமான பரம் பொருள் இருக்கிறது என தமிழ்படுகிறது. எமக்கு உள்ளுக்குள் இருக்கும் சூக்குமமான கருவிகள் மனம், அகங்காரம், சித்தம் என்ற ஞாபகவங்கி, புத்தி என்ற நான்கும் (அந்தக் கரணங்கள்) அகத்தில்தான் இருக்கின்றன. அகம் என்றால் கண்ணுக்குத் தெரியாதது. புறம் கண்ணுக்குத் தெரிவது. இந்தப் பன்மைத் தோற்ற உலகின் அகக்காரணமாகவும் (Subjective) புறக்காரணமாகவும் (Objective) இருப்பது பரம்பொருளே. படைப்பு என்றால் உருவப் படைப்பு மட்டுமல்ல உடல், மன, அறிவு மட்டங்களிலுள்ள மனித வாழ்க்கையும்தான்.

படைப்புலகமான பன்மையில் அதாவது புறத்தில் ஒரு ஒருமை காணப்படுகிறது. மாறும் பொருள்களில் மாறாத தனிமங்கள் இருப்பது உண்மை. அந்த ஒருமையே புறத்தில் பன்மையாகக் காட்சி அளிக்கிறது. "ஏழு மாமுனிவர்கள் மூலம் (சப்தரிஷி மண்டலம்) பிரபஞ்சத்தில் படைப்பு தோன்றுகின்றது" எனப் புராணங்கள் கூறும் கருத்தின் உண்மை என்ன? இந்த உருவத்தின் அர்த்தம்தான் என்ன?

அறிவு, அகந்தை, ஐம்பெரும் மூலத் தனிமங்கள் (பஞ்ச பூதங்களான ஆகாயம், காற்று, நெருப்பு, நீர், மண்) ஆகிய ஏழும் அந்த சப்த ரிஷிகள். இந்த ஏழும் சேர்ந்து ஒருவருக்குப் புலனாகும் அனுபவ உலகைப் படைக்கின்றன. நமது உள்ளத்தில் நடப்பதைச் சற்று உற்று நோக்கிச் சிந்தித்தால் இந்த உருவத்தின் உட்பொருள் நன்கு விளங்கும். நமது உள்ளத்தில் ஒரு சிந்தனை எழுகின்றது என்று வைத்துக்கொள்வோம். அது உடனே உள்ளத்தைக் கலக்கி விடுவதில்லை. அதற்கு அந்தச் சக்தி இல்லை. சிந்தனையில் ஒரு வேட்கை எழுந்தவுடன் நாமும் அதனுடன் இணைந்து மீண்டும் மீண்டும் சிந்தனையை அதன்மீதே செலுத்தி அதைத் தீவிரமாக்குகிறோம். அவ்வாறு அந்த வேட்கையின் - அவாவின் வேகம் அதிகரித்து நமது மன அமைதி அடியோடு சீர்குலைகிறது. உலகத்தைப் பற்றிய நமது கருத்துக்களும் அனுபவங்களும் இச்சிந்தனைக் கொந்தளிப்புக்கு ஏற்றபடி வெவ்வேறு மாதிரி அமைகின்றன. எனவே உள்ளமும் அது உருவாக்கும் தோற்றங்களும் நமது குறுகிய சுக துக்க உலகிற்கு காரணிகளாகின்றன. தன்னிலை ஆய்வு அடிப்படையில் இதன் உட்பொருளை விளங்கிக் கொள்ள வேண்டும். பெரு உலகமாகிய பிரபஞ்சத் திற்கும் சிறு உலகமாகிய தனி மனிதனுக்கும் இயக்கம் அளிக்கும் மெய்ப்பொருள் ஒன்றேதான். அது தன்னை வெளியிட்டுக்கொள்ளும் கருவிகள் வேறுபடுகின்றன. தோற்ற மறைவுகளுக்குட்பட்ட (ஐம்பூத) உலகத்திலிருந்து தம் உள்ளத்தைத் திருப்பி அழியாத மெய்பொருளில் அதை உறுதியாக நிலை நிறுத்தும் சக்தியை ஞானிகள் கூறிச்சென்றனர். இவ்வாறு உள்நோக்காக ஈடுபடும் மனநிலையை "அன்பு ததும்பும் உணர்வு" என்றுகூறி மனிதனை முழுமைப்படுத்த ஏவினர்.

இனிப் புறத்தைப்பற்றிப் பார்த்தால் இன்று நமக்குக் கிடைக்கும் விஞ்ஞான முன்னேற்றத் தகவல்களுக்கு ஞானிகளின் கருத்துருவமே (Concept) முன்னோடி என்பதைக் கற்றவர்கள் அறிவார்கள். வானசாஸ்திரம், ஜோதிடக்கலை, ஆயுர்வேதம் ஆதியில் சத்திரசிகிச்சை செய்தவரே சுஸ்ருதர் என்ற முனிவர். கட்டிடக்கலை, சிற்பக்கலை, தனுர்வேதம் என்ற போர்ப் பயிற்சிக்கலை ஆணையும் பெண்ணையும் படைத்த இறைவன் அவர்களின் கட்லொக் (Catalogue) காக ஒரு முனிவரின் அதாவது வாத்ஸ்யானரின் மனதில் தோன்றச் செய்த உலகெங்கும் பிரசித்திபெற்ற 'காமசூத்ரா' நாட்டியக்கலை, வானளாவிய கோபுரங்கள் கட்டும்கலை, இன்னோரன்ன மனித நாகரீகத்தை முன்னேற்றிய கலைகள் எல்லாம் இதே ஞானிகளால்தான் படைக்கப்பட்டதென்பதை இந்தப் பிரகிருதியின் அறிவுக்குப் புலப்பட வில்லையே!

மாறாத அளவுகோல் ஒன்று இருந்தால்தான் மற்றவை மாறுகின்றனவா, இல்லையா என்று அளந்து தெரிந்துகொள்ளமுடியும். மாற்றத்திற்கு உள்ளாகும் எல்லாப் பொருள்களும் மாறா அடிப்படை ஒன்றை வைத்தே மாறகின்றன. இடம் - காலம் ஆகிய இரண்டுக்கும் ஏற்றவாறு உலகம் மாறிவருகிறது. உலக நிகழ்ச்சித் தொடரை நாம் அறிந்துகொண்டு மொத்தமாக அதைப்புரிந்து கொள்வதற்கு நிலைத்த மாறாத 'அறிவுத்தத்துவம்' ஒன்று இருக்க வேண்டும். தானே மாறாமல் மாறிவரும் நிகழ்ச்சிகளை அது எடுத்துக் காட்டுவதாக இருக்க வேண்டும். அவ்வாறு உள்ளது ஆன்மா. அது ஒன்றே இவ்வளவு பிரமாண்டமான புற உலகத்தை ஏற்படுத்தியுள்ளது என்ற மெய் அறிவு இருந்தால் அகமும் புறமும் ஒன்றே!

அக விஞ்ஞானிகளான ரிஷிகளும் புறவிஞ்ஞானிகளான (Scientists) இன்றைய விஞ்ஞானிகளும் தங்கள் கண்டு பிடிப்புகளை யெல்லாம் அகத்திலிருந்தே கண்டறிந்தனர். நவீன விஞ்ஞானிகள் ஒரு பொருளை ஆராய சோதனைச் சாலைக்குள்ளிருந்து அதைப் பல்வேறு கோணங்களில் ஆய்வு செய்தாலும் அப்பொருள் தன்னைப்பற்றிய ரகசியங்களை வெளிப்படுத்துவதைக் கண்டறிவது மனிதனின் மூளையுள்ளிருக்கும் அதாவது அகத்திலிருக் கும் அறிவே என்பது யாவருமறிந்த விடயம். ஆகவே அருவம் உருவத்தைத் தீர்மானிக்கிறது - இயக்குகிறது - வெளிப்படு கிறது. இப்பொழுது சொல்லுங்கள் புறம் என்பது வெறும் காட்சிகள் மட்டும்தானா? ஆகவே மறைந்திருந்து செயலாற்றும் அகத்தின் வெளிப்பாடுதான் புறமாகிறதல்லவா?

தொடர்வேன்.....

Need A Mortgage Fast and Low Rates

புதிய வீடு வாங்குகின்றீர்களா? அடமானத்திற்கு என்னை அழையுங்கள்

When Banks Says 'No'... We Say 'Yes'

New Immigrant / Self Employed WELCOME

புதிய குடிவரவாளர்களும், சொந்தத் தொழில் செய்வோரும் வரவேற்கப்படுகின்றார்கள்

★ Residential & Commercial ★ 1st, 2nd & 3rd Mortgages
★ Refinancing ★ Business Loans
★ Line of Credit ★ Good or Bad Credit/ Pervious Bankrupt

மேலதிக தொடர்புகளுக்கு அழையுங்கள்

Ganesh Murthi (Nick) 416-564-9321

பேன்சி பூக்கடை

கனடாவின் முதல் தமிழ் மக்களின் பூக்கடை



ROUND MANDAPAM

- பொதுவாக தமிழ் மக்களின் சேவையே மனதில் பெரிதாகக் கொண்டு அவர்களுடைய திருமணம் மற்றும் மங்களகரமான நாட்களுக்கு
- பூக்கள், மாலைகள், மணவறை விஷேசமாக பூ மணவறை முதலியன வற்றை அழகாகவும், மலிந்த விலையில் குறித்த நேரத்தில் செய்து தரமுடியும்
- மரணச்சடங்குகளுக்கு Wreath, Casket Spray அனைத்தும் அழகாகவும், குறித்த நேரத்தில் செய்து கொடுக்கப்படும்

முதன் முதலாக கனடா நாட்டில் நம் சொந்த ஊரில் உள்ளதைப்போன்று அழகான பூமணவறையைச் செய்து கொடுத்து அன்பர்களின் உள்ளத்தில் 14 வருடங்களாக இடம் பிடித்திருக்கும் முதல் பூக்கடை பேன்சி பூக்கடை என்பது சகலருக்கும் தெரிந்ததே

திருமணம் மற்றும் மங்களகரமான தேவைகளுக்கு ஏற்ற பூ மணவறை, பூமாலை, பூக்கள் வாங்கும் போது உங்கள் கொள்வனவில் 10 வீதத்தை நாம் உங்களுக்கு விரும்பிய கோவில்களுக்கு காசாகவோ அல்லது பூவாகவோ உங்கள் விருப்பப்படி உங்கள் பெயரில் நன்கொடையாக வழங்குவோம்

1668 Victoria Park Avenue, North York, ON
Tel: 416-288-1419

2119 Eggert Road, Amherst, NewYork, USA
Tel: 1-716-838-0844

யமலோக நீதிமன்றம்



பல்கலைச் செல்வன்
முஹம்மது ஹன்ஸீர்

"யமலோக நீதிமன்றம்" தொடர் நாடகம் -21

கதை வசனம்: பல்கலைச் செல்வன் முஹம்மது ஹன்ஸீர்

"உதயன்" ஏழாவது ஆண்டு நிறைவை ஒட்டிய விஷேட வெளியீடு

கடந்த வாரத் தொடர்ச்சி.....

சித்திர புத்திரன்: நன்றி, கனம் நீதிபதியவர்களே. டட்லி சேனநாயக்காவே! இலங்கை சுதந்திரம் பெற்றபின் நடைபெற்ற எல்லாவிதமான தமிழினப் படுகொலைக்கும் மிக முக்கிய மூல காரணமாக இருந்தது உமது பிதா டீ. எஸ். சேனநாயக்கா என்பதை ஏற்றுக் கொள்கின்றீரா?

டட்லி: இல்லை

சித்திர புத்திரன்: ஏன்?

டட்லி: ஐயா! எனது தந்தையை மட்டும் காரணமாகக் கூறவேண்டாம்.

சித்திர புத்திரன்: டட்லி சேனநாயக்காவே! காரணமல்ல மூல காரணம் என்றுதான் கூறினேன்!

டட்லி: இருக்கலாம்! இன்னும் பலர் இருக்கின்றனர்.

சித்திர புத்திரன்: யாரவர்கள்?

டட்லி: எஸ்.டபிள்யூ.ஆர்.டீ பண்டாரநாயக்கா, ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா

சித்திர புத்திரன்: வேறும் யார் இருக்கின்றனர்?

டட்லி: இதற்கு ஒரு பட்டியலே போட வேண்டியிருக்கின்றது.

சித்திர புத்திரன்: சுருக்கமாகக் கூறுங்கள்

டட்லி: அரசியல் தலைவர்கள், பொதுமக்கள் அதாவது சிங்களப் பொதுமக்கள், பௌத்த பிக்குமார்கள் காரணங்களாக இருந்திருக்கின்றனர்.

சித்திர புத்திரன்: அரசியல் தலைவர்கள், அதாவது சிங்கள அரசியல் தலைவர்கள், சிங்களப் பொதுமக்கள், பௌத்த பிக்குமார் இவர்களெல்லோரும் சேர்ந்து நாட்டை உருவாக்கும் பாதையில் சென்றனரா? அல்லது நாட்டை அழிவுப்பாதையில் இழுத்துச் சென்றனரா?

டட்லி: ஐயா! இப்பொழுதுதான் தெரிகிறது நாட்டை அழிவுப் பாதையில் கொண்டுபோனார்களென்று.

சித்திர புத்திரன்: இதனால் யாருக்கு இலாபம்?

டட்லி: ஒருவருக்குமில்லை லாபம். எப்படியாயினும் எல்லோருக்கும் கஷ்ட நட்டமும் துன்பமுமென்று இப்பொழுதுதான் கேள்விப்பட்டேன்.

சித்திர புத்திரன்: இங்கு நடந்திருப்பதெல்லாம் ஜனநாயகம் என்ற போர்வையிலே பெரும்பான்மை இனத்தவர் சிறுபான்மைத் தமிழ் மக்களை அழிக்கச் சதி செய்ததுதான். நீரும் அதற்கு உடந்தையாக இருக்கின்றீர்!

டட்லி: ஜனநாயக முறை அவ்வாறு இருந்ததனால் என்னால் ஒன்றும் செய்ய இயலாமலிருந்தது.

சித்திர புத்திரன்: ஆஹாஹா.....நன்றாகக் கூறிவிட்டீர். இது கூடாதது, செய்யக் கூடாதது என்பதை ஏற்றுக்கொள்கின்றீரா? இல்லையா?

டட்லி: ஏற்றுக் கொள்கின்றேன். எனினும் இதனை அவர்களிடம் கூற இயலாமல் இருந்தது.

சித்திர புத்திரன்: நடந்தது நடந்து விட்டது. இப்பொழுது ஒன்றும் செய்ய இயலாது. அதுசரி....தமிழரசுக் கட்சியோடு ஏதேனும் ஒப்பந்தங்கள் செய்து கொண்டதுண்டா?

டட்லி: ஆமாம். அதுதான் டட்லி - செல்வா ஒப்பந்தம். அதாவது டட்லி சேனநாயக்கா - செல்வநாயகம் ஒப்பந்தமாகும்.

சித்திர புத்திரன்: அந்த ஒப்பந்தத்திலே விஷேடமாக என்ன கூறப்பட்டிருந்தது.

டட்லி: தமிழர்களுக்கு உரிமைகள் வழங்குவது சம்பந்தமானது. தமிழரசுக் கட்சி பிரதேச சுயாட்சியை முன்னமேயே கேட்டிருந்தது. அதனை நாங்கள் கொடுக்க மறுத்து விட்டோம். அதற்குப் பதிலாக மாவட்ட சபைகளைக் கொடுக்க முன்வந்தோம். அதனை அவர்கள் ஏற்றுக்கொண்டனர். இந்த ஒப்பந்தத்தின் பிரதான அம்சம் இதுவாகும். இந்த ஒப்பந்தம் எனது கட்சி 1965ல் வெற்றி பெற்றதும் நடைபெற்றது. இதனை நீதியானது என அவர்கள் ஏற்றுக் கொண்டதன் பின்தான் எனது அரசாங்கத்தில் தமிழரசுக் கட்சி சேர்ந்து கொண்டது.

சித்திர புத்திரன்: நீர் செல்வநாயகத்தோடு செய்துகொண்ட ஒப்பந்தத்தை இலங்கையிலிருந்த எல்லாக் கட்சிகளும் ஏற்றுக் கொண்டதா?

டட்லி: இலங்கையைப் பொறுத்த மட்டில் அது நடைபெற முடியாத விடயம். தமிழர்களுக்கு நாட்டைக் கொடுத்துவிட்டேன் என்றே ஏனைய கட்சிகளெல்லாம் எதிர்ப்பைத் தெரிவித்துக் கொண்டிருந்தனர்.

சித்திர புத்திரன்: டட்லி சேனநாயக்கா அவர்களே! கடும் எதிர்ப்புக்கு மத்தியிலேனும் ஏன் ஒப்பந்தத்தை அமுல் நடத்தவில்லை.

டட்லி: ஐயா! அமுல் நடத்த விட்டால்தானே அமுல் நடத்தியிருப்பேன். சிங்கள இடதுசாரிக் கட்சிகளும், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியும் 1965ஆம் ஆண்டு நடைபெற்ற மேதினக் கூட்டத்திலே இவ்வுடன்படிக்கையை எதிர்த்து ஊர்வலம் நடத்தினர்.

சித்திர புத்திரன்: பிறகு என்ன நடைபெற்றது?

டட்லி: ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியும் தேசிய இடதுசாரிக் கட்சிகளும் 1966ஆம் ஆண்டு ஜனவரி மாதம் எட்டாம் திகதியைத் தேசிய துக்க தினமாகவே பிரகடனப் படுத்தினர். தமிழர்களுக்கு உரிமைகள் வழங்கப்படக்கூடாது என்று பௌத்த பிக்குகளும் சிங்கள மக்களும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடத்தினர். எதிர்ப்புக்களை அதிகரிக்கச் செய்த என்னை இருக்கவிடாது செய்து விட்டனர். இப்படிப்பட்ட ஒரு நிலை ஏற்பட்டதனால் 1968 ஜூலை மாதம் இவ்வொப்பந்தத்தைவிட்டு விடுவதாகக் கூறிவிட்டேன்.

சித்திர புத்திரன்: 1956ல் எஸ்.டபிள்யூ.ஆர்.டீ. பண்டாரநாயக்கா இலங்கைப் பிரதமராக வந்தது ஞாபகம் இருக்கின்றதா?

டட்லி: ஆமாம்.

சித்திர புத்திரன்: அப்பொழுது பண்டாரநாயக்கா - செல்வநாயகம் என ஒரு ஒப்பந்தம் கைச்சாத்தாகியது ஞாபகம் இருக்கின்றதா?

டட்லி: ஆமாம்

சித்திர புத்திரன்: அதனை உமது கட்சி ஏற்றுக்கொண்டதா?

டட்லி: அது வந்து.....வந்து....இல்லை.

சித்திர புத்திரன்: ஏன்?

டட்லி: 1956ல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் எனது கட்சி தோற்கடிக்கப் பட்டதும் நான் தற்காலிகமாக அரசியலில் இருந்து ஓய்வெடுத்துக் கொண்டேன். ஜே.ஆர்.ஜெயவர்த்தனாதான் எல்லாம் செய்தார்.

சித்திர புத்திரன்: ஜே.ஆர். ஜெயவர்த்தனவா? அவர் பண்டாரநாயக்கா - செல்வநாயகம் உடன்படிக்கையை எதிர்த்து சிங்களப் பிரதேசங்களிலெல்லாம் பிரசாரங்களில் ஈடுபட்டதோடு கொழும்பிலிருந்து கண்டியிலுள்ள தலதா மாளிகைவரை ஒரு பாதயாத்திரையை ஒழுங்கு படுத்தினாரல்லவா?

டட்லி: ஆமாம் அது நடைபெறவில்லை.

சித்திர புத்திரன்: ஜே.அர். ஜெயவர்த்தனா அவர்களிடம் விசாரணை செய்யும்பொழுது அதனைக் கேட்டுக்கொள்கின்றேன். டட்லி சேனநாயக்கா அவர்களே! அதாவது தமிழரசுக் கட்சித் தலைவர் எஸ்.ஜே.வீ. செல்வநாயகம் அவர்கள் எஸ்.டபிள்யூ.ஆர்.டீ. பண்டாரநாயக்கா அவர்களுடனும் ஒப்பந்தம் செய்து பார்த்திருக்கின்றார். உங்களுடனும் ஒப்பந்தம் செய்து பார்த்திருக்கின்றார். பண்டாரநாயக்காவுடன் ஒப்பந்தம் செய்து கொண்டபொழுது ஐக்கிய தேசியக் கட்சிகளும் ஏனைய கட்சிகளும் அதனை எதிர்த்தன. உங்களோடு அதாவது ஐக்கிய தேசியக்கட்சியோடு உடன்படிக்கை செய்து கொண்ட பொழுது ஸ்ரீ.ல.ச.க. கட்சியும் ஏனைய கட்சிகளும் எதிர்த்தன. அதாவது யாருடன் ஒப்பந்தங்கள் செய்து கொண்டாலும் நடைமுறையில் செயல்படுத்த விடமாட்டார்கள். அவ்வாறுதானே?

தொடரும்.....

VMS TRAVELS & TOURS

கொழும்பில் தலைமையகத்தையும்
கனடாவில் கிளையையும் கொண்ட
ஒரே நிறுவனம்

416-293-5800

Colombo	$1275.00
India	$1499.00
Singapore	$1299.00
Colombo to Toronto one way	$998.00
London	$499.00
Paris	$599.00
Frankfurt	$629.00
Zurich	$739.00
Amsterdam	$629.00
Vancouver	$289.00
Edmonton	$259.00
Montreal	$159.00
New York	$289.00

பல வருட
அனுபவத்தோடு
சேவை புரிகிறார்கள்

உங்களுக்கு மிக அருகில் நாங்கள்

COLOMBO
VMS TRAVELS & TOURS
64 Lotus Road,
Galadari Hotel, Colombo
011-941-344-940

CANADA
VMS TRAVELS & TOURS
Sheppard Avenue East
Scarborough, ON
416-293-5800

Cisco Training

Cisco Systems

We Produced 5 CCIEs' IN 5 MONTHS

CCNA	$399.	MCSE 2000	$2100
CCNP - Module	$599.	UNIX - SOLARIS	$499.
CISCO PIX Security	$699.	CHECK POINT	$499.
CISCO VPN Security	$699.	MCSE 2000- PROFESSIONAL	$399.
CISCO MPLS	$699.	MCSE 2000- SERVER	$399.
CCIE Theory	$799.	SQL ADMINSTRATION	$399.
VOICE OVER IP	$799.	A+ CERTIFICATION	$499.

FREE CCNA or MCP FOR EI RECIPIENTS

The courses are designed by:

A. HARITH K.
MS Certified Trainer
B.Sc. Eng., MIBM, CNE, MCSE, MCT, CCNP, CCDP,
Cisco Security Specialist,
CCIE #8661

Visit Our Lab.....

- ISDN lines, ADSL Line & Frame Relay Circuit
- 60 Cisco Routers- 7500, 4500, 4000, 3600, & 2500
- Catalyst 5500, 5000, 3920 & 1900 Switches

WinNET SYSTEMS
HI-TECH TRAINING & CONSULTING

MISSISSAUGA **905-949-TEST**

TORONTO 1200 Eglinton Ave. East, Suite 100, Toronto, (Don Mills & Eglinton)

SCARBOROUGH **416-299-TEST**

Tel: 416-447-TEST (8378)

1-877 3-WINNET www.winnetsystems.com email:teachme@winnetsystems.com

Since 1985
USC
EDUCATION SAVINGS PLANS
36 ஆண்டுகள் / அரச அங்கீகாரம் / இலாப நோக்கமற்றது
அரசின் GRANT $400.00 இலவசம்
இலவச ஆலோசனைகளிற்கு அழையுங்கள்!
தயாபரன் ஆறுமுகம்
Cell: 416-889-3088 , 905-426-6624

Century 21
வீடு விற்க, வாங்க, குறைந்த வட்டியில் Mortgage
செய்து கொள்ள அழையுங்கள்
ரஜீவ் கோணேஸ்வரன்
4544 SHEPPARD AVE. EAST, SCARBOROUGH Cell: 416-568-1078

S.K.T. JEWELLERS AND TEXTILES LTD.
நகரில் எங்குமே காணமுடியாத நவீன டிசைன் நகைகள் ஆயிரக்கணக்கான தெரிவுகளில்....
மங்கையர், ஆடவர் சிறுவர், சிறுமியருக்கான சகல ஆடை வகைகளும்
WARDEN & LAWRENCE
Tel: 416-615-0197

நோர்விச் யூனியன்
• நம்பிக்கை • நாணயம் • உத்தரவாதம்
முதியோர்களுக்கு உகந்த முறையில் உங்களுக்கு விரும்பிய காப்புறுதி நிறுவனங்களில் காப்புறுதி செய்து தொடுக்கப்படும்.
Call: T. K. THEVARAJAH
Tel : (905) 471-9061 Fax: (905) 471-2202
NORWICH UNION

SHIYARAA FINANCIAL SERVICE
உங்களுக்கு நிதி உதவி தேவையா?
• தனிப்பட்ட நிதி - வியாபார நிதி
கடன் அட்டை - கடன் நிவர்த்தி
வாகன நிதி - வீடு,
வர்த்தக அடமானங்கள்
• புதிய குடிவரவாளர்களுக்கு!
நீங்கள் வேலைசெய்யும் பட்சத்தில் 3000 டொலர் வரை கடனுதவி பெற்றுத்தர முடியும்!
கிருஷ்ணா
416-473-9278

வீடு வாங்க விற்க
உங்கள் வீட்டுப் பெறுமதியை இலவசமாக மதிப்பீடு செய்ய உத்தரவாதமான சேவைக்கு நாடுங்கள்.
Flexible Commission
Century 21
தனா மாணிக்கவாசகர்
Tel :416-290-1200
Cell:416-728-5772

UTHAYAN WEB:
www.uthayan.ca

உதயன்

UTHAYAM

தித்திக்கும் தமிழ் உலகில்
எத்திக்கும் கதிர் வீசும்
வாரச் செய்தி இதழ்

(416) 752-1524

(416) 752-6703

KUGANANTHY RAVINDRAN
B.D.S.M, M.S., F.D.S.R.C.S. (ENG)
குகாநந்தி ரவீந்திரன்
குடும்ப பல்வைத்தியர்
McLevin Road
Neilon Road
McLevin Dental Office
Tapcott Road
1371 Neilon Road, #212., Scarborough
416-281-7555

உதயம்: 325 Chief Editor: R. N. Logendralingam 05.07.2002 Friday

LAW OFFICES
சட்ட சம்பந்தமான பிரச்சினைகளுக்கு நீங்கள் நாடவேண்டியவர்
Yaso Sinnadurai
Barrister & Solicitor, Notary Public
ஸ்காபரோ அலுவலகம்
2100 Ellesmere Rd., Suite 202
Scarborough, ON M1H 3B7
Tel: 416-265-3456
மிசிசாகா அலுவலகம்
Tel: 905-306-1100

எலி, பூச்சிகளின் தொல்லையா?
நாடுங்கள்
Mr. Control
100% உத்தரவாதம்
Mr. Pest Control
24 Hrs./7days - week
www.mrpestcontrol.ca
Raja 416-997-9969

சேகர் ஜுவலர்ஸ்
அழகிய டிசைன்களில் மலிவான விலையில் தங்க ஆபரணங்கள்
சிறந்த கைக்கடிகாரங்களும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.
604 - Finch Ave. East, Scarborough ON
Tel: 416-[illegible]479, 416-412-0952

கடன் தேவையா!
• Personal Loan • Line of Credit
Credit Card
மற்றும் கடன் சம்பந்தமான தேவைகளுக்கு அழையுங்கள்.
ரவி 416-562-3815

Email:sv_productions@hotmail.com
The Art of Videography
Weddings TV Production
Entertainment Multi-Camera
3-D ANIMATION JIB ARm (32 Feet crane)
Broadcast Quality NON-LINER EDITING
OFFICE: 416-299-9030
CELL : 416-200-9080
2250 Midland Ave. Unit 25
Scarborough, ON
Production

TOP QUALITY DIAPERS
PREMIUM BABY DIAPERS
DIRECT IMPORT FROM USA
MEDIUM
SMALL
LARGE
EX.LARGE
SIZE 6
ADULTS DIAPERS
BABY WIPES 3/$8.99
OPEN 6 DAYS A WEEK
FREE DELIVERY
416-499-8517 • 416-399-4497

செந்தியின்
நிர்வாகத்தில்
ஓர் அச்சுக்கூடம்
உங்கள் அச்சுத் தேவைகளுக்கு
ஆதவன் அச்சகம்
ஸ்காபரோ
(கென்னடி எக்லிங்ரன் சந்திப்புக்கருகில்)
(416) 615-4646

மில்லர் மரணித்த நெல்லியடியில்
இன்று கரும்புலிகள் தினம் அனுஷ்டிப்பு

போராளி மில்லர் வீரமரணத்தை தழுவிய நெல்லியடியில் கரும்புலிகள் தினம் இன்று வெள்ளிக் கிழமை உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்படவுள்ளது என எமது செய்தியாளர் அறிவித்துள்ளார். முக்கிய இடங்களிலும் பாடசாலைகளிலும் காலை 9மணிக்கு நிகழ்வுகள் ஆரம்பமாகும். பொதுச் சுடரேற்றலுடன் ஆரம்பமாகும் நிகழ்வுகளில் தமிழீழ தேசியக் கொடியேற்றல், ஈகச் சுடரேற்றல், மலர் வணக்கம், அகவணக்கம் ஆகியன இடம்பெறும். அதைத் தொடர்ந்து பல்வேறு நிகழ்வுகள் இடம்பெறும். முதலாவது கரும்புலி மில்லர் தாக்குதல் நடத்திய நெல்லியடி மகா வித்தியாலயத்தில் விசேட நிகழ்ச்சிகள் இன்று மாலை இடம்பெறவிருக்கின்றன.

இந்நிகழ்வில் பங்கு பற்றுவதற்காக தீவகம், வலிகாமம், தென்மராட்சி, வடமராட்சி ஆகிய இடங்களில் இருந்து வரும் வாகன அணிகள் நெல்லியடிச் சந்தியில் ஒன்று கூடும். அங்கிருந்து பாண்ட் அணி வகுப்புடன் பொது மக்கள் ஊர்வலமாக நெல்லியடி மகா வித்தியாலயத்துக்கு முன் பக்கமாகவுள்ள கரும்புலி கப்டன் மில்லரின் நினைவாலயத்துக்குச் செல்வர்.

அங்கு இன்று மாலை 4.45 மணிக்கு நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும். அங்கு இடம் பெறும் பொதுக் கூட்டத்தில் விடுதலைப் புலிகள் அமைப்பின் முக்கியஸ்தர்களும் தமிழ்க் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் உரையாற்றவிருக்கின்றார்கள்

நவ சமசமாஜக் கட்சியின் தலைவர் வாசுதேவ நாணயக்காரா கனடா பியர்சன் விமான நிலையத்தில் வந்திறங்கிய போது தமிழ் அன்பர்களால் வரவேற்கப்படுகின்றார்

NKS
DRAPERIES & BLINDS
Custom made
• Vertical Blinds
• Venetian Blinds
• Draperies
• Curtains
• Shutters
FREE
Estimates & Installation
Call: Ketha
Tel: 416-321-6420
Tel: 905-944-0218
210 SILVER STAR BLVD., #825, SCARBOROUGH ON M1V 5J9

இவ்விடத்தில் விளம்பரம்
செய்ய $ 35 மட்டுமே